# கொங்கு குல மகளிர்



புலவர் செ. இராசு

# கொங்கு குல மகளிர்

ஆசிரியர்

புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,

முன்னாள் தலைவர்

கல்வெட்டு - தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**வெளியீடு**

**கொங்கு ஆய்வு மையம்**

64/5 டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்

புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்

ஈரோடு - 638 011.

# நூற்குறிப்பு

இந்நூல், முன்னாள் பழனி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் கே.ஏ. சேனாபதிக் கவுண்டர் அவர்கள் மகன் திரு. ஏ.எஸ்.அர்ஜுன் அவர்கள் தம் தாயாரும், சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் அமரர் எஸ்.வி. பெரியண்ண வேணாடுடையார் (1883-1951) அவர்கள் திருமகளாருமான திருமதி. நல்லம்மையார் அவர்கள் நினைவாக அளித்த பொருட்கொடையால் வெளியிடப்படுகிறது.

அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகுக.


| | |
|---|---|
| நூலின் பெயர் | கொங்கு குல மகளிர் |
| நூல் பொருள் | பெண்ணியம் |
| ஆசிரியர் | புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி., |
| மொழி | தமிழ் |
| நூல் உரிமை | ஆசிரியர்க்கு |
| பதிப்பு ஆண்டு | 2008 |
| நூலின் அளவு | 14 செ.மீ. X 21 செ.மீ. |
| பக்கங்கள் | 128 |
| அச்சு எழுத்து | 11 புள்ளி |
| விலை | ரூ. 50/- |
| நூல் கிடைக்குமிடம் : | புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,<br>64/5 டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்<br>புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்<br>ஈரோடு-638 011. போன் : 0424 2262664<br>செல் : 99942 77711 |
| நூல் & அட்டை வடிவமைப்பு | காயத்திரி ஆப்செட்<br>29 நாச்சியப்பா வீதி<br>ஈரோடு - 638 001.<br>போன் : 0424-2250164 |

சுப்புலட்சுமி ஜகதீசன்
SUBBULAKSHMI JAGADEESAN

மத்திய இணை அமைச்சர்
சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு
இந்திய அரசு
MINISTER OF STATE FOR
SOCIAL JUSTICE & EMPOWERMENT
GOVERNMENT OF INDIA

# அணிந்துரை

கல்வெட்டறிஞர் என்று தமிழ்ச் சான்றோர்களால் பெரிதும் போற்றப்படுபவரான புலவர், முனைவர் திரு. செ. ராசு அவர்கள் ''கொங்கு குல மகளிர்'' என்ற வரலாற்றுத் தொகுப்பினை, பல்வேறு கல்வெட்டுச் சான்றுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், மற்றும் வழித் தோன்றல்களின் வாயிலாகக் கேட்டும் தொகுத்து நமக் களித்து இருப்பது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒன்றாகும்.

ஏற்கனவே இவர் நமக்களித்திருக்கும் கொங்கு நாடு, கொங்கு கல்வெட்டுக்கள், கொங்கு நாட்டுச் செப்பேடுகள், Kongu in Sangam Time, கொங்கு குல வரலாறு, கொங்கு நாட்டில் ஊராட்சி முறை போன்ற நூல்கள் கொங்கு நாட்டின் சீர்மிகு வரலாறு, பூகோள அமைப்பு, வேளாண்மை மற்றும் பிற தொழில்கள், கொங்கு மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், நிர்வாகத் திறமை, விருந்தோம்பல் இவைகளை உலகுக்கு எடுத்தியம்புவனவாக அமைந்திருந்தன. இன்றைய இளம் தலைமுறையினருக்கு, கொங்கு நாட்டின் வரலாற்றையும், சிறப்பியல்புகளையும் அறிந்து கொள்ளும் சிறந்த ஆவணங் களாக அவை அமைந்துள்ளன.

சங்க காலத் தமிழகத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கல்வி கற்றுப் பெரும் புலமை மிக்கவர்களாகவும், நிர்வாகத் திறமை மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள்

Shastri Bhawan, Dr. Rajender Prasad Road, New Delhi-110001
Tel. : 23383757, 23383745, Fax : 23074097

மூலம் அறிகிறோம். இந்நூலில், நூலாசிரியரும் இதனைக் குறிப்பிட்டு உள்ளார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருநோக்கோடு வாழ்ந்து வந்த நிலையில் ஆரியம் புகுந்தது. வருணத்தின் பெயரால் நான்கு சாதிகள் உருவாக்கப்பட்டன. அதில் நாம் தீண்டத்தகாத சூத்திரர்கள் ஆக்கப்பட்டோம். சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே. இது ஆண்டவன் கட்டளையென்று நம்மைப் படு குழியில் தள்ளினார்கள். மொழியும் இனமும் தங்கள் தொன்மை வரலாற்றை இழந்து புதிய ஆரிய கலாச்சாரத்தை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

ஆண்களுக்கே கல்வி மறுக்கப்பட்ட நிலையில் பெண் கல்வியைப் பற்றிக் கவலைப்பட யாருமில்லை. ''அடுப்பூதும் பெண் களுக்குப் படிப்பெதற்கு'' என்று சொல்லியே பெண்களை நான்கு சுவற்றுக்குள் சிறை வைத்தனர். கல்வி இல்லை, கருத்துச் சுதந்திரம் இல்லை, பொருளாதார சுதந்திரமும் இல்லாத நிலையில் பெண்கள் அடிமைகளைப் போல வாழ்ந்திருந்தனர்.

ஆனால், கொங்கு நாட்டு மக்கள் இப்புதிய கலாச்சாரத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளாமல் ஓரளவு தனித்தன்மையுடன் வாழ்ந்து வந்தனர். ஐயரை வைத்துத்தான் திருமணச் சடங்குகள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில் நம் இல்லத் திருமணங்கள் யாவும் அருமைக்காரரை வைத்தே நடத்தப்பட்டன. ''கொங்கு குல மகளிர்'' நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல நம் குலப் பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாகவும், பெரும் புலவர்களாகவும், கருத்துச் சுதந்திரம் உள்ளவர்களாகவும், நிர்வாகத் திறமை மிக்கவர் களாகவும், வருவாய் ஈட்டவும், விருப்பம் போல செலவிடவும் உரிமை உள்ளவர்களாகவும் விளங்கினர்.

எனக்கேற்றபட்ட எத்தனையோ சந்தேகங்களுக்கு இந்நூல் விடையளிப்பதாக அமைந்துள்ளது என்னை வியப்புக்குள்ளாக்கியது. கவுண்டிச்சிபாளையம், மாணிக்கி, மங்கலப்பட்டி, குத்துவிளக்கு,

முழுக்காது, பொங்கலூர், கொங்கு குலாலர் ஆகியவற்றின் பெயர்க் காரணங்கள் ஆதாரத்தோடு இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. கொங்கு இனத்தைச் சார்ந்து வாழும் கொங்கு நாவிதர், கொங்கு குலாலர், செங்குந்தர் மற்றும் வேட்டுவர் குலத்தில் உதித்த புகழ் பெற்ற மகளிரின் பெருமையையும் எடுத்தியம்புவதாக இந்நூல் அமைந்துள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தாலும், உள்ளத்தில் சோர்வு சிறிதுமின்றி, மலர்கள் தோறும் சென்று தேனீக்கள் தேனைச் சேகரித்துத் தேனடையில் சேர்ப்பதைப் போல் பல ஊர்களுக்கும் சென்று பலரையும் சந்தித்துத் திரட்டிய செய்திகளடங்கிய இந்நூல் உண்மையில் ஒரு தேனடைதான்.

குடத்திலிட்ட விளக்காக இருந்த நம் குல மகளிரின் மாண்பு தனை, புகழினை குன்றிலிட்ட விளக்காகப் பிரகாசிக்கச் செய்த ஓய்வறியா உழைப்பாளி புலவர் செ. ராசு அவர்களுக்கு கொங்கு குல மகளிரின் சார்பாகப் பாராட்டுக்களையும், நன்றியினையும் உரித்தாக்கு கிறேன்.

இந்நூல் வெளியிடப் பொருள் உதவி நல்கி, புலவர் செ.ராசு அவர்களின் ஆய்வை ஊக்குவித்த திரு. ஏ.எஸ். அர்ஜுன் அவர்களின் கொடையுள்ளத்தைப் பாராட்டுகின்றேன்.

அன்புடன்,

[signature]

7.3.08

# ஆசிரியர் உரை

இதுவரை வெளிவந்துள்ள வரலாற்று நூல்கள் பெரும்பாலும் அரசர், அரச குடும்பம், அரசு உயர் அலுவலர்கள் ஆகியவர்களைப் பற்றிய செய்திகளின் தொகுப்பாகவே உள்ளன. சமுதாய வரலாறும், சமுதாயத்தின் அங்கங்களான தனி மனிதனின் அன்றாட வாழ்க்கை முறைகளும் தொகுக்கப்பட்டால்தான் ஒரு நாட்டு வரலாறு முழுமை அடையும்.

கொங்கு நாட்டு வரலாறும் இவ்வகையிலேயே அமைந்துள்ளது. இப்போது சமுதாயச் செய்திகள் உள்ளடங்கிய சில வரலாற்று நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளமை ஆறுதல் அளிக்கிறது. இருப்பினும் கொங்குநாட்டு வரலாறு இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. அனைத்துக் கொங்குச் சமுதாயக் கல்வெட்டு, செப்பேடு, ஓலைப் பட்டயங்கள் ஆகிய வரலாற்று ஆவணங்களையும், வெளிவராத கொங்கு நாட்டுச் சிற்றிலக்கியங்களையும் தொகுத்து வெளியிடும் முயற்சியைக் கொங்கு ஆய்வு மையம் மேற்கொண்டுள்ளது.

இவைகளைத் தொகுக்கும் முயற்சியை மேற்கொண்ட போது பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராகவும், சில துறைகளில் ஆண்களுக்கு மேலாகவும் கொங்குநாட்டுப் பெண்கள் சிறந்து விளங்கியமை தெரிய வந்தது. கற்றறிந்த சான்றோர்களாக, கவிபாடும் புலவர்களாக, புலவர்களை ஆதரித்த புரவலர்களாக, புலவர்களால் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்டவர்களாக, வடமொழியிலும் வல்லவர்களாக, நல்லறம் கூறும் நடுவர்களாக, நாட்டு நிர்வாகம் செய்யும் உயர் அலுவலர்களாக, பக்தியில் சிறந்தவர்களாக, ஆலயத் திருப்பணி செய்து, பல்வேறு கொடைகளைக் கோயிலுக்குக் கொடுத்தவர்களாக,

ஆடவர்களை நெறிப்படுத்தும் குடும்பத் தலைவியர்களாக, அளப் பரிய ஆற்றல் படைத்தவர்களாக, மருத்துவக் கலையில் வல்லவர் களாக, தன்மான உணர்ச்சி உடையவர்களாகப் பலர் இருந்துள்ளமை தெரிய வந்தது. அவைகளை இங்கு தொகுத்து ''கொங்கு குல மகளிர்'' என்ற பெயரில் கொங்கு வானில் மின்னும் 27 நட்சத்திரங் களாக இங்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

பெரும்பான்மை கொங்கு வேளாளர் சமூகப் பெண்களும், கொங்கு நாட்டு வேட்டுவர், செங்குந்தர், குயவர், நாவிதர், புலவர் சமுதாயப் பெண்களும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளனர். அவர்களைப் பற்றிய இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, ஓலைப்பட்டயச் செய்திகள் பல இடம் பெற்றுள்ளன.

இந்நூல் முன்னாள் பழனித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் கே. ஏ. சேனாபதிக் கவுண்டர் அவர்களின் திருமகனார் திரு.ஏ.எஸ். அர்ஜுன் அவர்கள் பொருட்கொடையால் வெளியிடப் படுகிறது. அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

கொங்குப் பெண்கள் குலமணியாக விளங்குபவரும், தமிழ் மொழி, தமிழ்நாடு, தமிழ்இனம் ஆகியவற்றின் நலனில் மிகுந்த அக்கறையுடையவரும், என் ஆய்வை எப்பொழுதும் பாராட்டி ஊக்குவிப்பவருமாகிய மத்திய சமூக நலத்துறை இணை அமைச்சர் மாண்புமிகு சுப்புலட்சுமிஜெகதீசன் அவர்கள் இந்நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரை வழங்கியிருப்பது மிகப் பொருத்தமுடை யதாகும். அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்நூலைக் குறித்த காலத்தில் சிறப்பாக வடிவமைத்து அச்சிட்ட ஈரோடு, 'காயத்திரி ஆப்செட்' உரிமையாளர்கட்கும், பணியாளர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

ஈரோடு, அன்பன்

17.03.08. செ. இராசு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| | அணிந்துரை | |
| | ஆசிரியர் உரை | |
| 1. | நடுவராக விளங்கிய நங்கை | 11 |
| 2. | புலமை பெற்ற புகழுடையோர் | 14 |
| 3. | பாடல் பெற்ற பழையகோட்டை மகளிர் | 18 |
| 4. | புலவர்களைக் காத்துப் புகழ் கொண்டோர் | 22 |
| 5. | வடமொழியிலும் வல்ல பெண்கள் | 26 |
| 6. | வெற்றி மங்கை வெள்ளையம்மாள் | 29 |
| 7. | மாண்புடைய மனைக்கிழத்தியர் | 34 |
| 8. | படைகளை விரட்டிய பாவை | 38 |
| 9. | தாமரை நாச்சியெனும் தகவுடையார் | 41 |
| 10. | அதிசயப் பெண் அருக்காணித் தங்கம் | 46 |
| 11. | விளக்குக் கொடையளித்தோர் | 51 |
| 12. | பக்தி பிடித்த சடைச்சியம்மாள் | 55 |
| 13. | திருப்பணி செய்த திருமதிகள் | 58 |
| 14. | கொங்குப் பிராட்டியார் | 64 |
| 15. | இணையற்ற இரட்டைப் புலவர்கள் | 68 |
| 16. | பொங்கலூர்ப் புகழ்மிகு பெண்கள் | 73 |
| 17. | தெய்வமாக மாறிய தேனாயி | 76 |

18. மலர்ந்தும் மணம்வீசா மலர்கள் 79
19. கொங்குவேளிர் பணிப்பெண் 84
20. நீர்நிலை தந்த நங்கையர் 88
21. மாணிக்கி என்னும் மங்கைநல்லார் 92
22. உயர்பண்புள்ள உமையாயி 97
23. மருத்துவக் கலைதேர் மங்கலை 101
24. வியன்பணி யாற்றிய வேட்டுவர்குல மகளிர் 105
25. கவரிமான் அனைய குப்பநாச்சி 108
26. வீரப்பெண் மீனாட்சி 113
27. பெயர் தெரியாப் பெண்டிர் 117
பிற்சேர்க்கை 123

# 1. நடுவராக விளங்கிய நங்கை

முதன்மைநாடு, பழையநாடு என்று புலவர்கள் போற்றிய பூந்துறை நாட்டின் இரண்டாவது தலைநகர் வெள்ளோடு. அதில் தென்முகம் வெள்ளோடு, உலகபுரம், கனகபுரம், தேவபுரம் (தேவணம் பாளையம்) என்ற மூன்று பிரிவுகளை (கரை) உடையது. உலகபுரம் சாத்தந்தைகுல வழிவந்தவர்கள் உலகில் மன்றாடியார், காலிங்கராயன் ஆகியோர். காலிங்கராயன் வழிவந்த காசிலிங்கக் கவுண்டர் கனக புரத்தில் வாழ்ந்த சாத்தந்தைகுலப் பெரியவர். இவர் பெரும் நிலக் கிழார். கனகபுரத்தில் சித்தி விநாயகர் கோயில் கட்டியவர். அவர்கள் மகன் முத்துக்கவுண்டர். பேரன் பழனிவேலப்ப கவுண்டர். இவரது பையன் கொழந்தைசாமி, பெண் தெய்வானை.

புலவன்பாளையம் குந்தாணி சாமிநாதக் கவிஞரிடம் சிறுவன் கொழந்தைசாமி கல்வி கற்றார். நானும் கல்வி கற்பேன் என்று கூறி தெய்வானையும் தமிழும், கணக்கும் கற்றார். ஆர்வத்துடன் கற்ற தெய்வானை இலக்கணம், இலக்கியம், நீதிநூல், புராணங்கள் கற்றுத் தேர்ச்சியடைந்தார். இவரது கூர்மையான அறிவுத் திறமை எல்லோ ரையும் வியக்கச் செய்தது.

ஒரு சமயம் பாசூர் குருக்கள் அகிலாண்ட தீட்சிதர் வெள்ளோடு இராசாக்கோயிலில் முகாமிட்டு உலகபுரம், கனகபுரம், தேவபுரம் சாத்தந்தைகுலச் சீடர்களுக்கு அருளாசி வழங்கினார். குருக்களைத் தரிசிக்க வந்த தெய்வானை கேட்ட ஐயங்களையும், அடிகளாரோடு விவாதித்த பாங்கையும் கண்டு எல்லோரும் வியந்தனர். கனகபுரத்தில் யாருக்கு என்ன சந்தேகம் ஏற்பட்டாலும் தெய்வானையிடம்தான் கேட்பர். அவர்கள் மகிழும் வண்ணம் அதை தெய்வானை தீர்த்து வைப்பார்.

ஒரு நல்ல நாளில் தெய்வானையை பூந்துறை மணியம்பாளையம் காடைகுல வாரணவாசிக்கவுண்டர் மகன் செல்வ விநாயகக் கவுண்டருக்கு

மணமுடித்து வைத்தனர். மணியம்பாளையத்துக்காரர்கள் முன்பே தெய்வானை பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அவரிடம் மிகுந்த மரியாதையோடு பழகினர். குடும்பப் பொறுப்பை ஏற்ற தெய்வானை விவசாயப் பணிகளையும் கவனித்து வந்தார். பொறுப்போடு எல்லா வற்றையும் செய்தார்.

பணியாளர்களிடமும், குடிபடைகளிடமும், எளியவர்களிடமும் அன்பு செலுத்தி அவர்கட்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். விழா நடக்காமலிருந்த மணியம்பாளையம் கோயிலில் விழா ஏற்பாடு செய்தார். தாகம் தீர வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்தார். அங்கு உப்பு, ஊறுகாய், நீராகாரம் அளிக்கவும் ஏற்பாடு செய்தார். அந்த தண்ணீர்ப்பந்தல் இன்றும் உள்ளது. ஊர்மக்களும், பக்கத்து ஊர்க் காரர்களும் எந்த யோசனையையும் தெய்வானையிடமே கேட்டனர். அவர்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளைத் தெய்வானையிடம் கூறி தீர்வு பெற்றனர்.

தெய்வானையின் அறிவுரை நியாயமானதாகவும், நேர்மையான தாகவும், நடுநிலை தவறாததாகவும் இருந்தது. தெய்வானை இருக்கும் இடம் ஒரு அறங்கூறும் அவையாகவே இருந்தது.

காலை வேளையில் அவர் வீட்டில் திருவிழாக் கூட்டம் போல் பலர் கூடியிருப்பர். அவரவர்கள் அவர்கள் பிரச்சனைகளைக் கூறி தீர்வு பெறுவர்.

சண்டை சச்சரவு, சாதி நியாயம், குடும்பத் தகராறு, கொடுக்கல் வாங்கல் பிரச்சனை, பாகத்தகராறு, குடிபடைகள் பற்றிய குறை எல்லா வற்றையும் தெய்வானையிடம் கூறுவர். எல்லா நியாயமும் தீர்ந்து எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்டுச் செல்வர். பக்கத்து ஊர்மக்களும் தங்கள் குறைகளைக் கூறி நியாயம் பெற்றனர். அவர் புகழ் எங்கும் பரவியது.

ஒருமுறை பெருந்துறை மடத்துப்பாளையத்தில் இருந்து தெய்வானையிடம் நியாயம் கேட்டு ஒரு வழக்கு வந்தது. அவ்வூரில் செல்லிமகன் நாச்சிமுத்தன் என்பவன் தான் காடான்கூட்டம் என்று

பெருந்துறை சீனாபுரம் வழியில் விநாயகர் கோயில் கட்டி ''மேதி குலத்தாருக்கும், காடான் குலத்தாருக்கும் உரியது'' என்று கல்வெட்டுப் பொறித்து விட்டான். பழனிக்கவுண்டர் என்பவர் அவன் காடை கூட்டம் அல்ல என்று கூறி கோயிலை இடித்து விட்டார். தெய்வானை அம்மாள் அதனைத் தீர விசாரித்து நாச்சிமுத்தன் ''அபராதம்'' செலுத்த வேண்டும் என்றும், பழனிக்கவுண்டர் ''வெற்றிக்காணிக்கை'' செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். பணம் பொதுக் காரியங் களுக்குச் செலவானது. இவ்வழக்கும், தீர்ப்பும் ஒரு செப்பேட்டில் எழுதப்பட்டு அதில் ''பெரிய கவுண்டிச்சி தெய்வானையம்மாள்'' கூறிய நியாயம் எனப் புகழ்ந்து எழுதப்பட்டுள்ளது. அந்தச் செப்பேடு ஈங்கூர் புலவன் புதூர் பழனிச்சாமிக் கவுண்டரிடம் உள்ளது.

அவர் மறைவிற்குப் பின் பிறந்த வீடாகிய வெள்ளோடு கனக புரத்திலும், புகுந்த வீடாகிய பூந்துறை மணியம்பாளையத்திலும் மிகுந்த புகழுடன் வாழ்ந்து மக்களிடம் நற்பெயர் பெற்ற ''பெரிய கவுண்டிச்சி தெய்வானையம்மாள்'' பெயரால் இரு ஊர்களுக்கு அவர்கள் இருஊராரும் பெயரிட்டு வழங்கினர்.

பூந்துறை - கவுண்டிச்சிபாளையமும், வெள்ளோடு - கவுண்டிச்சி பாளையமும் இன்றும் அவர் பெயரால் நிலைத்து நிற்கிறது. மணியம் பாளையத்தில் தெய்வானையம்மாள் வழியினர் இன்றும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

✣ ✣ ✣

# 2. புலமை பெற்ற புகழுடையோர்

பெண்ணுரிமை பற்றிப் பெரிதாகப் பேசப்பட்டும், பெண்கள் முன்னேற்றத்திற்குப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டும் உள்ள இக் காலத்தில் பிற துறைகளைப் போல கவிதை இயற்றும் நல்ல புலமையுடைய பெண்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

சங்க இலக்கியங்களில் முப்பதுக்கு மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். ஆனால் இடைக்காலத்தில் மிக மிக அரிதாகவே ஓரிரு பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். ஆனால் கொங்கு நாட்டில் கொங்கு வேளாண் சமுதாயத்தில் இக்கால கட்டத்தில் புலமையுடைய பெண்கள் பலர் வாழ்ந்துள்ளனர்.

## அவ்வையார்

சங்ககிரி துர்க்கத்தை அடுத்துள்ள ''ஐவேலி'' என்ற ஊரில் ''அசதி'' என்னும் வள்ளல் வாழ்ந்து வந்தார். ஆத்தூர் அருகில் ''கருங்காடு'' என்ற ஊரில் தோன்றிய கொங்கு வேளாண் குலப்பெண் தமிழ் கற்றுப் புலவராக விளங்கினார். அவரை அவ்வையார் என்றே அழைத்தனர்.

ஐவேலி அசதி அவ்வையாரை வரவேற்றுப் பொன் இலையில் உணவளித்துப் பாராட்டினார். அவ்வையார் அவர் மீது கோவை இலக்கியம் பாடினார். ''சேனைத் தலைவனை செங்கோல் அசதியை'' என்று புகழ்ந்து பாடினார். புகழ் வாய்ந்த கொங்கு சமுதாய அவ்வை யாருக்கு பெரிய கரியப்பகவுண்டர், அண்ணியப்ப கவுண்டர் ஆகியோர் கோயில் கட்டி வழிபாட்டுக்கு நிலம் அளித்தனர். (அவ்வை என்பது அம்மை என்பதன் திரிபு. தமிழ்நாட்டில் சங்க காலம் முதல் பல அவ்வையார்கள் இருந்துள்ளனர். அசதியைப் பாடிய அவ்வையார் பிற்காலத்தவர்.)

### பூங்கோதை

பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பூங்கோதை புலமையும், கணக்கறிவும் பெற்றதால் கொங்கு வடகரை நாட்டின் கணக்கு அலுவலராக இருந்தார் என்று தூக்கநாயக்கன்பாளையம் செப்பேடு கூறுகிறது. பல தனிப்பாடல்கள் பாடிய பூங்கோதை திருச்செங்கோட்டுக் கலம்பகம் பாடியவருள் ஒருவர்.

### *சின்னம்மையார்*

தாரமங்கலம் கெட்டி முதலி கொங்கு வேளாளரில் நீருணி குலம் சேர்ந்தவர். இது தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டுக் களால் தெரிகிறது. அம்மரபில் வந்த வணங்காமுடிக் கட்டிமுதலி (முதலி என்பது முதன்மையானவர் என்று பொருள்தரும் பட்டப் பெயர்; முதலியாக்கவுண்டர் என்பது போல) மனைவி சின்னம்மையார். இவர் பவானிக்கோயில் திருப்பணி செய்தவர். சின்னம்மையாரின் சகோதரர் நாராயண கவுண்டர் என்று பவானி ஆவணம் கூறுகிறது. புலமை யுடைய சின்னம்மையார் ''கண்ணொளி கதிரொளி'' என்ற சமய இலக்கியம் பாடியவருள் ஒருவராவார்.

### வள்ளியாத்தாள்

பழையகோட்டைப் பட்டக்காரர் மரபில் வாழ்ந்த பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மனைவி வள்ளியாத்தாள் ஆரியப்பட்டி ஒதாளகுலம் கோவிந்தசாமிக்கவுண்டர் மகள். இளமை யிலேயே அங்கமுத்து வாத்தியார் என்பவரிடம் தமிழ் கற்றுப் பெரும் புலமையுடன் விளங்கினார். சிவன்மலையாண்டவர் மீது பல பாடல் தொகுதிகளைப் பாடிய வள்ளியாத்தாள் தன் கணவரின் குதிரைச் சவாரித் திறமை குறித்தும் பாடல் பாடியுள்ளார்.

பெரிய சர்க்கரையார் தன் மகனுடன் குதிரையில் நின்று கொண்டே சவாரி செய்து கையில் உள்ள கவண் மூலம் தோட்டத்தில் பயிரைக் கொத்தும் குருவிகளை விரட்டுவாராம்.

''பயிரன்சர்க் கரைஅவர்கள் புதல்வ ரான
பண்புபெறு பெரியசர்க் கரையார் என்போர்
தயிரன்னத் தோடவரே பிசைந்து நித்தம்
தாளியில்தின் றிடவைக்கும் குதிரை மீதில்
கயிறுடைய கவண்வீசி நின்று கொண்டே
கருதுதின்னும் குருவிகளை விரட்டிக் கொண்டு
மயிரளவும் தவறாது உத்தி மேலே
மகனோடு சவாரிசெய்து மகிழ்வ தென்னே''

என்பது வள்ளியாத்தாள் பாடிய பாடலாகும்.

வள்ளியாத்தாள் என்பது முருகப் பெருமானின் தேவி பெயர். அதை எழுத அஞ்சி தன் பெயரை ''கொம்பொடிந்த வெள்ளியம்மாள்'' என்று எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ''வெள்ளியம்மாள்'' கொம்பு ஒடிந்தால் வள்ளியம்மாள் தானே. ''ஆத்தாள்'' என்று கொங்கு வேளாண்குலப் பெண்களை அழைப்பது வழக்கம்.

### அழகுநாச்சி

திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவரர் கோயிலில் பணிபுரிந்த பெண் அழகுநாச்சி. நன்கு தமிழ் கற்றுக் கவிபாடும் ஆற்றலுடைய வராகத் திகழ்ந்தார். அவ்வப்போது பல தனிப்பாடல்கள் பாடியவர். ஒருமுறை பவானி பாலபாரதி முத்துசாமி திருச்செங்கோட்டுக் கோயிலுக்கு வழிபட வந்தார். பாலபாரதி பற்றிக் கேள்விப்பட்டிருந்த அழகுநாச்சி பாலபாரதியைக் கண்டு இன்னுரையாடினார். அவரைப் போற்றிப் பாராட்டினார்.

பவானி பாலபாரதியிடம் அழகுநாச்சி சர்க்கரைப் பொங்கலுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை நயமாக ஒரு பாடல் பாடுமாறு கேட்டுக் கொண்டார். உடனே பாலபாரதி பாடினார். அப்பாடலில் அழகுநாச்சியின் பெயர் வருமாறும் புலவர் பாடினார்.

பாலபாரதி திருச்செங்கோட்டு வரடிகல்லுக்கும் விலைமகளுக்கும் சிலேடையாக ஒரு பாடல் பாடுமாறு அழகுநாச்சியை நோக்கிக் கேட்டார். உடனே அழகு நாச்சி,

''மேகம் உறையுதலால் வேண்டினபேர் சுற்றுதலால்
நாகமலை மீதிலுற நண்ணுதலால் - யோகர்புகழ்
ஆசுமது ரம்பாடும் ஐயாசுப் பையாகேள்
தாசியெனும் வரடிகல்லுத் தான்''

என்று பாடினார். பின் பாலபாரதியைப் புகழ்ந்து ஒரு விருத்தப் பாடல் பாடினார்.

''கல்லும் இளகும் உனதுஅமுதக்
கவிகள் கேட்ட எனதுசெவி
அல்லும் பகலும் என்னஉணவு
அருந்தும் ஐயா வேதமங்கை
வல்லி முளைத்த நண்ணாவூர்
வாழ்வே வால பாரதியே
சொல்லும் தமிழுக்கு எழுகடலே
சொல்லாய் கலைகள் வல்லாயே''

என்பது அப்பாடலாகும்.

## துளசியம்மாள்

பொள்ளாச்சி வட்டம் நாகூர் குயிலண்ண மாப்பிள்ளைக் கவுண்டர் மகள் துளசியம்மாள். புரவிபாளையம் ஜமீன்தார் கங்கை கொண்ட சகமண்டலாதிபதி கோப்பண மன்றாடியார் மனைவியார். பேரூர்ப் பட்டீச்சுரர் கோயில் பற்றிய பல சிறுபிரபந்தங்கள் பாடியுள்ளார். பழனி பற்றியும் சில பாடல்கள் பாடியுள்ளார். பச்சைத்தாய் பதிகம், பட்டிநாதர் பதிகம், அமிர்தரசக்கும்மி, பேரூர் வெண்பாமாலை, மரகதவல்லி பதிகம் என்பவை அவற்றுள் சில.

இடைக்காலத் தமிழகத்தில் பெண்பாற்புலவர்கள் மிகவும் அருகியே காணப்படுகின்றனர். ஆனால் கொங்கு நாட்டில் பெண்பாற் புலவர்கள் பலர் இருந்தது சிறப்புக்குரிய செய்தியாகும்.

✣ ✣ ✣

# ૩. பாடல் பெற்ற பழையகோட்டை மகளிர்

## பாடல்

கொங்கு நாட்டின் ஆவேந்தராகப் பெருவாழ்வு வாழ்ந்த பயிரகுலத் தலைவர்கள் பழையகோட்டைப் பட்டக்காரர் மரபினரை ஐம்பதிற்கும் மேற்பட்ட புலவர்கள் பாடியுள்ளனர். அது தமிழகத்தில் மூவேந்தருக்கும், வேறு எந்தக் குறுநில மன்னர்கட்கும் இல்லாத தனிப் பெருமையாகும். பழையகோட்டை மகளிரும் பலர் அப்புலவர்களின் பாடலில் இடம் பெற்றிருக்கின்றனர்.

## பட்டாபிஷேகத்தில் பங்கு

காடையூர் காங்கேய மன்றாடியார், சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார், காங்கேயம் பல்லவராயர் இவர்களுடன் கொங்கு 24 நாட்டாரும் கூடிப் பட்டம் சூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது ஆறுகால் பீடத்தில் கணவரையும், மனைவியையும் அமரவைத்து பட்டத்து வாளை இருவருக்கும் இடையே வைத்தே பழையகோட்டையில் பட்டாபிஷேகம் நடைபெற்றது.

''பங்கேரு கத்தில்உதி லட்சுமி நிகர்த்தநல்
பத்தினி சமேதராகப்
பாங்குள்ள ஆறுகால் பீடத்தில் உட்கார்ந்து
பட்டத்து வாளாயுதம்
பதிசதிகள் இருவர்க்கும் மத்தியில் நிறுத்தி''

பட்டம் சூட்டப்படுவதாக இலக்கியம் கூறுகிறது. பாடிய புலவர் சடைப் பெருமாள்.

## சிவகாமியின் சிவபக்தி

அழகன் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் மனைவி சிவகாமி காலையில் பிள்ளையாருக்குப் பூசை செய்யாமல் எதுவும் அருந்தாதவர். ஒருநாள் சிவராத்திரி அன்று நத்தக்காடையூர் செயங் கொண்டநாதர் கோயிலில் நல்லமங்கை அம்மனின் கை பின்னப்பட்டு இருப்பதைக் கண்டார்.

மிக வருத்தத்தோடு உடனே அரண்மனை வந்து ''எல்லா வேலையும் அப்புறம்; முதலில் புதிய அம்மன் சிலையை எழுந்தருளச் செய்ய வேண்டும்'' என்று கூறி அவ்வாறே செய்தார் எனப் புலவர் செயங்கொண்டய்யர் பாடியுள்ளார்.

## பத்தினி முத்தாத்தாள் பரிவு

பழையகோட்டைக் கால்நடைப் பண்ணையில் நோய் வந்து விட்டது. மருத்துவம் பார்க்க வந்த மருத்துவர்கள் கால்நடைகள் நலம் பெற்ற பின்னரும் அரண்மனை விருந்து உபசாரம் கண்டு பல நாட்கள் அங்கேயே தங்கி விட்டனர். முதல்நாள் உபசரிப்புப் போலவே பல மாதங்கள் விருந்தளித்து உபசரித்தார் 14ஆம் பட்டக்காரர் கந்தன் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் மனைவி முத்தாத்தாள். விருந்துஉண்ட ஒரு மருத்துவர் புலமை பெற்றவர். அவர்,

''எத்தனைநாள் இருந்தாலும் எள்ளளவும் மனம்குன்றாது
இனிமையாக
சுத்தமுள கம்பமுதும் பசுந்தயிரும் காய்கறிகள்
ருசியாய்த்தந்து
உத்தமக்கா மிண்டரெனும் கந்தன்சர்க் கரையார்க்கு
உவந்துவந்த
பத்தினிமுத் தாத்தாளின் பக்தியைநான் என்னென்று
பகருவேனே''

என்று தன் பாடலில் புகழ்ந்துள்ளார். பாடியவர் குதிரை வைத்தியம் பழனிமலை வாத்தியார்.

## வான்புகழ் கொண்ட வள்ளியாத்தாள்

14.12.1895 அன்று 25ஆம் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் மறைந்தபொழுது மகன் நல்லதம்பிக்கு வயது 9. அவர் 18 வயதுடையவராக இல்லாத காரணத்தால் எஸ்டேட் சட்டப்படி பழையகோட்டை நிர்வாகத்தை கோவை மாவட்ட ஆட்சியர் மேற்கொள்வார் என்றும், 9 வயதான நல்லதம்பி அரசுப் பொறுப்பில் சென்னையில் இருக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவு பிறப்பித்துவிட்டது. இது அக்கால ஆட்சியின் நடைமுறையாகும்.

வழக்குரைஞரை வைத்துப் போராடி, மாவட்ட ஆட்சியரிடம் நேரில் விவாதித்து பழையகோட்டையைப் பாதுகாத்த பெருமை 25ஆம் பட்டக்காரர் மனைவியார் செங்கண்ணகுலச் சிவமலைப் பல்லவராயர் மகள் வள்ளியாத்தாள் அவர்களையே சாரும். வெங்கரை வாசுதேவராவ், வைத்தியலிங்கம் பிள்ளை ஆகியோரிடம் நல்ல தம்பியை ஆங்கிலக் கல்வி கற்கச் செய்து மிகப்புகழ் வாய்ந்த 26ஆம் பட்டக்காரர் நல்ல தம்பிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியாராக உருவாக்கிய பெருமை வள்ளியாத்தாள் அவர்களையே சாரும். இவைகளை அரண்மனை சம்பிரதி புலவர் சடையபிள்ளை பல பாடல்களாகப் பாடியுள்ளார்.

## பெரியாத்தாளின் பெருங்கொடை

''காணார் கேளார் கால்முடம்பட்டார் பேணுநர் அற்றார் பிணி வாய்ப்பட்டார்'' ஆகியோருக்கு மாதவி மகள் மணிமேகலை உதவிய தாகச் சீத்தலைச் சாத்தனார் பாடுகிறார். பழையகோட்டை மரபிலும் ஒரு ''மணிமேகலை'' வாழ்ந்துள்ளார். அவர் பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் துணைவியார் பெரியாத்தாள்.

அவர் ஆற்றிய அரும் செயலைக் கருங்குமரப் புலவர் என்பார் கீழ்வருமாறு தன் பாடலில் பாடியுள்ளார்.

''மனிதரில் கூன்குருடு நொண்டிசப் பாணியும்
மாடுஆடு நாய்பூனை அம்
மாதிரி இருப்பதும் சேர்ந்து அறுபதுக்கு நிதம்
மகிழ்ச்சியாய் இருவேளையும்
புனிதமுள ராகிசோளம் கம்புஏ தாகிலும்
போட்டுஇரு மிடாக்கஞ்சியும்
பொரித்த கொள்ளுக் கூட்டும்''

வழங்கினார் என்று புகழ்கிறது அப்பாடல்.

## வஞ்சியாத்தாளின் வாழ்வு நெறி

16ஆம் பட்டக்காரரான நஞ்சையன் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் இரவெல்லாம் ''தம் நெட்டைச் சிவலைக்குதிரை'' ஏறிச் சென்று கள்ளர் பயம் ஒழித்து நாடு காவல்செய்து நித்தமும் நீதி விசாரணை செய்பவர். இரவில் செய்த அரிய பணிகளால் பகல் எல்லாம் அரண்மனையில் உறங்கி ஓய்வு கொள்வாராம்.

விவசாய வேலைகள் அனைத்தையும் அவர் மனைவி வஞ்சி யாத்தாள்தான் கவனித்தார் என்று பாடுகிறார் மடவிளாகம் புலவர் சிவராம தேசிகர்.

''பட்டப் பகல்எல்லாம் தூங்குவாராம் - அவர்
பத்தினி பண்ணையம் பார்ப்பாராம்''

என்கிறார் புலவர்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை நடந்து சென்று எப்படிப் பார்ப்பது, ''ஜான்சி ராணி போல'' ''வீரமங்கை வேலுநாச்சியார் போல'' குதிரையில் பயணம் செய்து பண்ணைய வேலைகளைக் கவனித்த தாகக் கும்மிப் பாடல் கூறுகிறது.

''நஞ்சையன் பத்தினி வஞ்சியாத்தாள் - அவர்
நல்ல குதிரைச் சவாரி செய்வார்''

என்கிறார் புலவர்.

❖ ❖ ❖

# 4. புலவர்களைக் காத்துப் புகழ்கொண்டோர்

பழந்தமிழ் மன்னர்களும், மக்களும் புலவர்களைக் காத்து, பொருள் உதவி செய்த கொடையின் காரணத்தாலேயே தமிழ் இலக்கியங்கள் தோன்றின. இன்றும் நிலைபெற்று வாழ்கின்றன. எனவே தமிழ் இலக்கியச் செல்வங்களை 'கொடை கொடுத்த கொடை' என்று கூறலாம். இத்தகு சீரிய செயல்களில் ஆண்கள் மட்டும் அல்ல; கொங்கு வேளாளர் குலத்துப் பெண்களும் தம் பெயரை நிலைநாட்டி, இலக்கியத்தில் இடம் பெற்று உள்ளனர். அவர்களின் கொடையைப் பெற்ற புலவர்கள் தம் பாடலில் அவர்களின் கொடைச் சிறப்புக்களைப் பாடியுள்ளனர்.

## தாய்போன்ற பூந்துறைத் தெய்வானை

பூந்துறைக் காடைகுலச் செல்லய்ய கவுண்டர் மகன் நல்லய்ய கவுண்டர். அவரது துணைவியார் தெய்வானையம்மாள். அவர் கொடிய பஞ்சம் வந்தபோது பூந்துறைக் கொல்லபட்டப் புலவரைத் தாய் போல் பாதுகாத்தவர். புலவரின் ஏழு மக்களுக்கு அம்மை வார்த்த போது அன்பாக உபசரித்தார். தெய்வானையம்மாளைப் புகழ்ந்து புலவர் பாடியுள்ளார்.

''செல்லன்அருள் நல்லய்யன் தேவிதெய் வானையம்மாள்
அல்லும் பகலும் அறம்வளர்த்த மாதுஎனவும்
வந்தவந்த பஞ்சமதில் வர்க்கவகை யோடுஅமுது
தந்தும் எனக்கதிக தாயாகச் செய்தனள்காண்''

என்பது அவர் பாடலாகும்.

## பார்புகழ் கொண்ட பழனியம்மாள்

வாரணவாசிக்கவுண்டர் விசயமங்கலம் பொருளந்தை குலத்தினர். விசயநகர ஆட்சிக்காலத்தில் அரசுப் பணியில் பெரும்புகழுடன்

வாழ்ந்தவர். அவரைப் பற்றிக் கொங்கு மண்டல சதகத்தில் பாடல்கள் உள்ளன. அவர் மனைவி பழனியம்மாள் புலவர்களை ஆதரித்துப் போற்றியவர்.

புலவர் குடும்பத்தின் உறுப்பினர் எண்ணிக்கையைக் கருதி மாதம் ஏழரை மிடாக்கம்பு (480 படி) தொடர்ந்து அளித்துள்ளார் வாரணவாசிக்கவுண்டர் மனைவி பழனியம்மாள். கம்பு மட்டுமல்ல ''மேல் செலவும், மற்ற பொருள்களும்'' அளித்த பழனியம்மாளை ''மாதா'' எனப் போற்றுகின்றார் புலவர்.

''வாரண வாசிஎனும் மன்னன்அன் னோன்மனையில்
சீருயரும் செல்வத் திருப்பழனி மாதாஎன்
வருத்தம் அறிந்துகுளி வாய்பிடுங்கிக் கம்புமிகு
எருத்தேர்வை மாதம்ஒன்றில் ஏழரை மிடாச்செலவும்
மேற்செலவும் வர்க்கவகை மெய்ப்பாகக் கறிசமைத்து
சீற்சிலவாம் அன்னமிட்டுச் சீர்த்தி படைத்தனள்காண்''

என்பது புலவரின் பாடலாகும்.

## ஈஞ்சம்பள்ளி பச்சையம்மாள் ஈகைத்திறம்

பூந்துறை நாட்டு ஈஞ்சம்பள்ளியில் ஈஞ்ச குலத்தில் அப்பிச்சிக் கவுண்டர் என்னும் பெருநிலக்கிழார் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியார் பெயர் பச்சையம்மாள். எப்பொழுதும் புலவர்களை உபசரிப்பதையும், கொடை கொடுப்பதையும் பச்சையம்மாள் வழக்க மாகக் கொண்டு இருந்தார். இதோ புலவர் பாடுகிறார்,

''அப்பிச்சி ராயன் அகமுடையாள் ஈஞ்சையில்வாழ்
மெய்ப்பச்சை யம்மன்எனை வீயாமல் காத்தனள்காண்''

என்பது புலவரின் பொன்னுரையாகும்.

## சீர்மிகக் கொண்ட சின்னம்மாள்

பூந்துறைக் காடைகுல நல்லய்யகவுண்டர் மகன் அவிநாசிக் கவுண்டர். அவரது மகள் சின்னம்மாள். சின்னம்மாள் அவர்களைத் தலையநல்லூர் கூறைகுல ஆயிக்கவுண்டர் பேரனும், காளியண்ண

கவுண்டர் மகனுமான பழனிக்கவுண்டருக்கு மணமுடித்துக் கொடுத்தனர்.

''கவிவாணர் போற்றிய பூந்துறை மேவிய காடைகுலம்'' என்று புகழ்பெற்ற பண்பிற்கு ஏற்ப சின்னம்மாளும் புலவர்களை ஆதரித்துப் பெருமை கொண்டார். அவரால் உபசரிக்கப்பட்ட புலவர் ஒருவர் சின்னம்மாளைப் பூமாதேவி, கலைமகள், பார்வதிதேவி என்று புகழ்ந்து பாடுகிறார்.

''பூமாதுவாகவும் பாரதியாகவும் பொன்மலையில்
கோமாது வாகவும் நீசெனித் தாய்இக் குவலயத்தில்''

என்று மிகச் சிறப்பாகப் புகழ்கிறார்.

மற்றொரு புலவர் ''சின்னம்மன் கலித்துறை'' என்று தனி இலக்கியம் ஒன்றையே பாடியுள்ளார். அதில் ஒரு பாடல்,

''காயும் கறியும் அன்னமும் சொன்னமும் கற்றவர்க்குத்
தாயின் பரிவுகொண்டு ஈதல்கற் றாய்தென் தலைசைவளர்
ஆயி மகீபன் தருகாளி ராயன் அருளில் வந்த
சேயன்பழனி மகீபன் மனைவளர் சின்னம்மளே''

என்பதாகும். சின்னம்மன் கலித்துறை பிற்சேர்க்கையில் உள்ளது.

### யாரும் அளிக்காத அருங்கொடை

மதுரை மன்னன் திருமலைநாயக்கர் காலத்தில் அவர் பிரதானியும் தளபதியுமான இராமப்பய்யன் மிகக் கடுமையாக வரி வசூல் செய்தார். நோய், மக்கள் மரணம், மழையின்மை, மக்கள் குடிப் பெயர்வு காரணமாகப் பழையகோட்டை சம்பந்தச்சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அரசுக்கு முழுமையாக வரிசெலுத்த முடிய வில்லை. இராமப்பய்யன் அவரையும் அவரது மனைவியையும் சங்ககிரிக் கோட்டையில் சிறை வைத்தார்.

சம்பந்தச் சர்க்கரையாரிடம் பரிசு பெற்றுத் தம்முடைய வறுமை யைப் போக்கிக் கொள்ள வெற்றிவேல் புலவர் என்பவர் பழைய கோட்டை சென்றார். பட்டக்காரர் சிறையிருப்பதை அறிந்து எப்படியோ

சங்ககிரி சென்று சிறையில் சம்பந்தச் சர்க்கரையாரைப் புகழ்ந்து பாடினார். சம்பந்தச் சர்க்கரையாரிடம் புலவருக்குக் கொடுக்கக் கையில் ஒன்றும் இல்லை. புலவரை வெறுங்கையோடு அனுப்ப அவர் மனம் இடம் தரவில்லை.

ஒரு கொங்கு வேளாளர் வட்டிக்குப் பணம் வாங்கிப் புலவருக்குக் கொடை கொடுத்தார்; மற்றொரு வேளாளக் கவுண்டர் புலவருக்குக் கொடுக்க முடியவில்லையே என்று பாம்புப் புற்றில் கைவிட்டு இறக்கத் துணிந்தார்; மற்றொரு வேளாளக் கவுண்டர் புலவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லையே என்று புலிப்புதரில் பாய்ந்து உயிர் விடத் துணிந்தார். அம்மரபில் வந்த சம்பந்தச் சர்க்கரையார் தன் மனைவியின் கழுத்தை நோக்கி அவர் அணிந்திருந்த பொன்தாலியைப் பார்த்தார்.

தன் கணவன் குறிப்பறிந்து உடனே அவர் மனைவி, தான் அணிந்திருந்த தாலியைக் கழற்றிப் புலவர் கையில் கொடுத்தார். தயங்கிய புலவரை வைத்துக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். புலவர் அதைப் பெற்றுச் சென்றார்.

இதனை,

''கொங்கினில் இராமப் பய்யன் அதிகாரக் குரூரத்தினால்
கங்குல் ராப்பகல் சர்வசங் காரம்செய் காலத்திலே
சிங்கநல் சம்பந்தச் சர்க்கரை தேவி திருக்கழுத்தில்
மங்கலி யந்தனைத் தந்தாள் தமிழ்க்கவி வாணருக்கே''

என்ற தனிப்பாடல் விளக்குகிறது.

சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சம்பந்தச் சர்க்கரையார் வெற்றிவேல் கவிராயர் திருமணம் செய்து கொண்டபோது ''அன்று சிறையில் பழைய தாலி கொடுத்தேன். இப்போது உங்கள் திருமணத் திற்குப் புதுத்தாலி செய்து கொடுக்கிறேன்'' என்று கூறி அவ்வாறே கொடுத்ததாகப் பாடல்கள் கூறுகின்றன.

✣ ✣ ✣

# 5. வடமொழியிலும் வல்ல பெண்கள்

தமிழ்நாட்டிலேயே கொங்கு நாட்டில் தான் கல்வி வளர்ச்சி அதிகமாக இருந்தது. கற்றறிந்த புலவர்கட்கும் பெருமதிப்பு இருந்தது. சிற்றூரில் உள்ள கொங்கு மக்கள் கூட காணிப்புலவர்களைக் கம்பரின் வாரிசுதாரர்கள் என்றும், அவர்களை மதித்து உபசரிப்பது தங்கள் தலையாய கடமை என்றும் எண்ணிச் செயல்பட்டனர்.

சங்ககாலத்தில் பொன்முடியாரும், அவ்வையாரும், காக்கைப் பாடினியாரும் கொங்குநாட்டில் வாழ்ந்த பெண்பாற்புலவர்கள் ஆவர். இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் பெண்பாற்புலவர்கள் பற்றிய செய்திகளே அதிகம் இல்லை. ஆனால் கொங்கு நாட்டில் தமிழ்ப் புலமையோடு மட்டும் அல்ல. கொங்குகுல மகளிர் வடமொழியும் கற்றிருந்தனர் என்பது வியப்புக்குரிய அரிய செய்தியாகும்.

கொங்கு மக்கள் தமிழோடு வடமொழியும் கற்றிருந்தனர். தலைய நல்லூரில் ஒரு காட்டுக்குப் பெயரே ''ஆரியப்படிப்புக்காடு'' என்பதாகும். கொடுமணலில் பிற்கால அவ்வையார் பாடிய ''கல்வி ஒழுக்கம்'' என்ற கொங்குச் சமுதாயத்திற்கே உரிய நீதிநூல் கிடைத்து உள்ளது. அதன் தொடக்கம்,

''அஞ்சு வயதில் ஆதியை ஓது''
''ஆதியை ஓத அறிவுண் டாமே''

என்பதாகும். கிடைத்த 20க்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளில் ஒன்றில் மட்டும்,

''அஞ்சு வயதில் ஆரியம் ஓது''
''ஆரியம் ஓத அறிவுண் டாமே''

என்று யாரோ மாற்றி எழுதியுள்ளனர். அது தவறு என்றாலும் ஆரியம் (வடமொழி) படித்திருக்கின்றனர் என்பது இதன்மூலம் தெரிகிறது.

## கங்காபுரம் பழனியம்மாள்

கங்காபுரம், ஈரோடு வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். நசியனூர் - சித்தோடு இடையில் தேசிய நெடுஞ்சாலை 47ன் கீழ்புறம் உள்ள பழமையான ஊர். அங்கு நசியனூர் செம்பகுலத்தில் பழனியப்ப கவுண்டர் என்ற ஒரு பெருநிலக்கிழார் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியின் பெயர் பழனியம்மாள். இருவரும் நன்கு தமிழ் கற்ற வர்கள். அடிக்கடி அவர்களை நாடி வெளியூர்ப் புலவர்கள் பலர் வருவர். எல்லோரும் இலக்கிய விவாதத்தில் ஈடுபடுவர். இருவரும் வடமொழியிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருந்தனர்.

ஒருநாள் இருவரும் காலையில் தோட்டத்துக்குச் சென்று பண்ணையத்து ஆட்களுக்கு அன்றைய பணிகள் பற்றி அறிவுரை கூறிவிட்டு, காலை உணவுக்கு வீடு நோக்கி வந்தனர். பழனியம்மாள் முன்னர் வந்தார். பழனியப்பகவுண்டர் இடையிலே நின்று யாருடனோ பேசிக் கொண்டு இருந்தார்.

பழனியம்மாள் வீட்டருகே வந்தபோது வெளித் திண்ணையில் ஒருவர் ஆடம்பரமாக அமர்ந்திருப்பதைக் கண்டார். தலையில் உருமாலை; பட்டு வேட்டி, பட்டு சரிகைத் துண்டு; விரல்களில் எல்லாம் மோதி ரங்கள்; கழுத்தில் பதக்கம்; பக்கத்தில் ஏட்டுச் சுவடிகள்; கைகட்டி இரு கற்றுச் சொல்லிகள் (ஏடு எழுதுவோர்). கர்வத்துடன் மிடுக்காக உட்கார்ந்திருந்தார்.

பழனியம்மாள் மிகப் பணிவாக அவரைப் பார்த்து ''ஐயா! தாங்கள் யார் என்று அறியலாமா?'' என்று கேட்டார், ''யாம் பாண்டி நாட்டுப் பைந்தமிழ்ச் சிங்கம்; பரமேசுவரப் புலவர்; யாம் ''சோடசாவதானி'' என்றார். சோடசம் என்றால் பதினாறு; அவதானி என்றால் கலைகளில் வல்லவர் என்று பொருள்; ''பதினாறு விதமான கலைகளில் வல்லவர்'' என்று கூறினார். பழனியம்மாள் அவர் ஆணவத்தை அடக்க வேண்டும் என்று மனதில் நினைத்தார். ஏனென்றால் மரியாதை காட்டக் கூட புலவர் எழுந்து நிற்கவில்லை. சொல்லில் பணிவும் இல்லை.

பழனியம்மாள் ''ஓ, அப்படியா, நீங்கள் இரண்டு ஆடு திருடிய கள்வரா?'' என்றார். பரமேசுவரப்புலவர் திடுக்கிட்டார். எழுந்து நின்றார், வணங்கினார். ''அம்மா! தாயே என்னை மன்னிக்க வேண்டும்'' என்றார். அவர் முகத்தில் பயம் தெரிந்தது.

சோடசம்; சோடு என்றால் இரண்டு (சோடி); அசம் என்றால் ஆடு; அவதானி என்றால் திருடுவதில் வல்லவன் என்ற பொருளும் உண்டு. வடமொழிச் சொல்லை இருபொருள்பட வேறு பொருள் கூறினார் பழனியம்மாள். இவ்வளவும் பழனியப்பகவுண்டர் வருவதற்குள் நடந்து விட்டது. ''சோடசாவதானி'' என்ற வட சொல்லுக்கு இருபொருள் கூறிய பழனியம்மாளின் மதி நுட்பத்தை அறிந்து, ஆணவம் அடங்கிய புலவர் போனபின் தம்பதிகள் இருவரும் பேசிச் சிரித்து மகிழ்ந்தனர்.

## கிழாம்பாடி முத்தம்மாள்

மோரூர்க் கண்ணகுலத்தில் கிழாம்பாடி கவுண்டம்பாளையத்தில் வாழ்ந்தவர்கள் முத்துசாமிக் கவுண்டர் - முத்தம்மாள் தம்பதியினர். எப்பொழுதும் புலவர்களுடனே மகிழ்ந்து பொழுதுபோக்குபவர்கள். மோரூர், கொளாநல்லி ஆகிய இரண்டு ஊர்களிலும் சிவபெருமான் பெயர் பாம்பலங்காரர். வடமொழியாளர்கள் ''சர்ப்ப பூஷணர்'' என வடமொழியாக்கினர். சிவபெருமானுக்கு எல்லா அணிகலன்களும் பாம்புகளே என்பது ஐதீகம். முத்துசாமிக்கவுண்டர் தம்பதியினர் தங்கள் ஆண் குழந்தைக்குப் ''பாம்பண்ணன்'' என்று இறைவன் பெயரை வைத்திருந்தனர்.

ஒருநாள் பவானி பாலபாரதி என்ற பார்ப்பனப் புலவர் வந்து பாடிப்பரிசு பெற்றவர் முத்தம்மாவிடம் ''அம்மா எல்லாம் சரி; தங்கள் பையனுக்கு துஷ்ட ஐந்து பாம்பின் பெயரை வைத்திருக்கிறீர்களே'' என்றார். முத்தம்மாள் புலவர் அருகில் இருந்தவர் பெயர் என்ன என்றார். அதற்கு பாலபாரதி ''சேஷன், சாட்சாத் ஆதிசேசன் பெயரல்லவா'' என்றார். தாமதிக்காமல் முத்தம்மாள் ''அய்யரே! வடமொழியில் உங்களுக்குச் ''சேஷன்'' என்றால் இனிக்கிறது; தமிழில் ''பாம்பு'' என்றால் கசக்கிறதோ'' என்றார். பாவம் புலவர் பாலபாரதி குனிந்த தலை நிமிரவில்லை.

✣ ✣ ✣

# 6. வெற்றி மங்கை வெள்ளையம்மாள்

ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காடையூரில் முழுக்காது பொருளந்தை குலத்தார்க்குரிய காடையீசுவரர் கோயிலில் வெடத்தலா மரத்தடியில், சேடகுலத்தில், மண்ணில் பிறந்து பொருளந்தை குலக் காங்கேயனை மணந்து விண்ணகத் தெய்வமாக விளங்கும் வெள்ளையம்மாள் கோயில் உள்ளது. வெள்ளையம்மாள் வரலாறு வியப்புமிக்கது.

காடையூரின் பழைய பெயர் நட்டூர். (பரஞ்சேர்வழிக்கும், கூகலூருக்கும் நட்டூர் என்று பெயர் உண்டு) வடநாட்டு அரசனின் யானைப்படையை நட்டூரில் காடைக்குருவிகள் கொத்தி விரட்டிய காரணத்தால் நட்டூர் ''காடையூர்'' ஆயிற்று.

காடையூரில் சேடகுலச் செல்வருக்கு நான்கு ஆண் மக்கள், ஒரு பெண். பெண்ணின் உடல் முழுவதும் வெள்ளையாக இருந்த காரணத்தால் எவரும் வெள்ளையம்மாளை மணம் செய்து கொள்ள முன் வரவில்லை. வெள்ளையம்மாளை மணம் செய்து கொள்பவருக்குத் தம் பெரும் சொத்தில் நாலில் ஒரு பங்கைக் கொடுப்பதாக சேடகுலச் செல்வர் அறிவித்தார்.

காங்கய நாட்டுக்குத் தங்கள் மாட்டுப்பட்டியை ஓட்டி வந்த கருமாபுரம் பொருளந்தைகுல இளைஞன் ''காங்கேயன்'' வெள்ளையம்மாளை மணந்து கொள்ள முன்வந்தான். திருமணம் நடந்தபின் காங்கேயன் மாமனார் வீட்டிலேயே தங்கியிருந்தான். வெள்ளையம்மாள்-காங்கேயன் தம்பதியினருக்கு நான்கு ஆண்மக்கள் பிறந்து வளர்ந்தனர். காங்கேயனின் மாமனாரும், மாமியாரும் காலம் சென்று விட்டனர். நான்கு சகோதரர்களும், தங்கை வெள்ளையம்மாளுக்குக் காணி கொடுக்க விரும்பவில்லை.

அவர்கள் நால்வரும் தங்கள் மனைவிமார்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு காங்கேயனை நாடு சுற்றிப் பார்க்க அழைத்துக் கொண்டு சென்று கொன்று விட்டனர். ஊர்வந்து தங்கையையும் ''விபச்சாரி'' என்று பழிசுமத்திக் கால்காணி கொடுக்க முடியாது என்று கூறி வெள்ளையம்மாளையும் நான்கு குழந்தைகளையும் கணவனின் ஊராகிய கருமாபுரம் போகுமாறு துரத்திவிட்டனர். வெள்ளையம்மாள் எவ்வளவு கெஞ்சியும் அவர்கள் மனம் இரங்கவில்லை.

தாங்க முடியாத பெரும் துயருற்று, அவமானமும் தாங்க முடியாமல் தன் நான்கு மக்களுக்காக வாழ எண்ணிய வெள்ளை யம்மாள் காடையூரை விட்டுப் புறப்பட்டாள். கட்டிய துணி தவிர வேறு எந்தப் பொருளும் அவர்களிடம் இல்லை.

வெள்ளையம்மாள் காங்கயம் கோட்டை அருகே வரும்போது இசுலாமிய சர்தார் ஒருவர் சில வீரர்களுடன் குதிரையில் வந்து கொண்டிருந்தார். வெள்ளையம்மாள் ஒதுங்கி நின்றாள். வெள்ளையம் மாளின் நான்கு குழந்தைகளும் அஞ்சி நடுங்கினர். இரக்கப்பட்டு நின்று விசாரித்த சர்தாரிடம் வெள்ளையம்மாள் எல்லா விபரங்களையும் கூறினாள். தான் தாராபுரம் சென்று வரும் வரை காங்கயம் கோட்டையில் தங்க வைத்து அவர்களை நன்கு உபசரிக்குமாறு தன் வீரர்களிடம் கூறினார். காணி பெற்றுத் தருவதாக வெள்ளையம்மாளிடம் உறுதி கூறினார்.

தாராபுரம் சென்று பணிமுடித்து காங்கயம் கோட்டை வந்த இசுலாமிய சர்தார் வெள்ளையம்மாளையும், குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு காடையூர் சென்றார். சென்றவர் வெள்ளையம் மாளின் நான்கு சகோதரர்களையும், உள்ளூர்ப் பொதுமக்களையும் அழைத்து விசாரித்தார். உள்ளூர்ப் பொதுமக்களும், சகோதரர்களும் வெள்ளையம்மாளின் தந்தை கால்காணி கொடுப்பதாகக் கூறவில்லை என்றும், வெள்ளையம்மாளின் நடத்தை சரியில்லாததால் காங்கேயன் ஓடிவிட்டான் என்றும், ஒழுக்கம் தவறிய வெள்ளையம்மாள் காடை யூரில் இருக்கலாகாது என்றும் ஒருமனதாகக் கூறினர். வெள்ளை யம்மாள் திகைத்தாள்.

தன் தந்தை கால்காணி கொடுப்பதாகக் கூறியது உண்மை என்று கூறி அழுது புலம்பினாள். வெள்ளையம்மாளின் சகோதரர்களும், ஊர்ப் பொதுமக்களும், வெள்ளையம்மாளுக்கு மூன்று சோதனைகள் வைப்பதாகவும், அவை மூன்றிலும் வெற்றி பெற்றால் கால்காணி கொடுப்பதாகவும் கூறினர். அவர்கள் சொன்ன நிபந்தனைகள்:

1. வெள்ளையம்மாள் பச்சை மண்குடத்தில் தண்ணீர் எடுக்க வேண்டும்.
2. பச்சை மண்குடத்துத் தண்ணீரை மண்குதிரை மீது ஊற்ற வேண்டும். அப்போது குதிரை குலுக்கிக் கனைக்க வேண்டும்.
3. கோயிலில் பட்டுப்போன வெடத்தலா மரத்திலான கழுமரம் உள்ளது. அதன்மீது தண்ணீர் ஊற்றினால் பட்டமரம் தழைக்க வேண்டும். இல்லாவிட்டால் வெள்ளையம்மாள் கழுமரத்தில் ஏற்றப்படுவாள்

ஆகிய மூன்றாகும். வெள்ளையம்மாள் முதல் நிபந்தனையிலேயே தோற்றுவிடுவாள் என்பது அவர்கள் நம்பிக்கை. வெள்ளையம்மாள் மூன்று நிபந்தனைகளையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டாள்.

ஆனால், இசுலாமிய சர்தார் வெள்ளையம்மாள் இந்த நிபந்தனை களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும், அவளைக் கொல்லவே இந்த சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள் என்றும் கருதி வெள்ளையம்மாளிடம் அனுமதிக்க மறுத்து,

''பச்சைமண் பாத்திரத்தில் பாவையே நீர்எடுத்தால்
பானை கரையாதோ பைங்கிளியே சொல்லுமம்மா!
குதிரை உருவாரம் குலுக்குமோ நீர் தெளித்தால்
வறண்டமரம் துளிர்விடுமோ மாதரசி உன்நீரால்
பட்டமரம் தழைத்திடுமோ பாவையரே இந்நாளில்
குற்றம் சுமத்தியல்லோ கொலைசெய்யத் திட்டமிட்டார்
ஈவிரக்கம் இல்லாத இரும்புமனம் கொண்டவர்கள்
பச்சைக் குழந்தைகளைப் பரிதவிக்க விட்டுவிட்டார்
வேண்டாம் விசப்பரிட்சை விபரீதம் வந்துவிடும்
சத்தியம் செய்ய வேண்டாம் சபையோர்கள் முன்னாலே''

என்று கூறினார்.

காடையீசுவரர், பங்கயச் செல்வி அருளால் சோதனைகளில் தான் வெற்றி பெற முடியும் என்று சர்தாருக்கு வெள்ளையம்மாள் ஆறுதல் கூறிய பின் அவர் அனுமதி பெற்று இறைவனை வணங்கிப் புறப்பட்டாள். சர்தார் வெள்ளையம்மாள் வெற்றி பெற அல்லாவை வேண்டினார்.

பச்சை மண்குடத்தை எடுத்துக் கொண்டு பயபக்தியுடன் கோயில் அருகில் உள்ள கல்வாவிக்குளம் சென்று நீராடிப் பச்சை மண் குடத்தில் தண்ணீர் எடுத்தாள். பானை கரையவில்லை. தண்ணீரை மண்குதிரை மீது ஊற்றினாள். மண்குதிரை எல்லோரும் அறியக் குலுக்கிக் கனைத்தது. தண்ணீர் ஊற்றிய வெடத்தலா மரத்திலான கழுமரம் உடன் தழைக்கத் தொடங்கியது. வெள்ளையம்மாள் இறைவன் அருள் நினைந்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள். இசுலாமிய சர்தார் மகிழ்ச்சியால் மெய்மறந்து நின்றார். அல்லாவுக்கு நன்றி சொன்னார்.

வெள்ளையம்மாள் நிகழ்த்திய அருட்செயலைக் கண்டவுடன் ஊரார் பலர் ஓடிவிட்டனர். வெள்ளையம்மாளின் சகோதரர்கள் குற்ற உணர்வுடன் தலைகுனிந்து நின்றனர். அவர்கள் நால்வரும் சர்தார் ஆணைக்குப் பயந்து வெள்ளையம்மாளுக்குக் கால்காணி மட்டுமல்ல முழுக்காணியையும் கொடுத்துவிட்டு தாங்கள் வேற்றூர் சென்று விடுவதாகக் கூறி அவ்வாறே செய்தனர்.

வெள்ளையம்மாளும் அவள் பெற்ற மக்களான கழுவறஞ்ச காங்கேயன், சோமன் காங்கேயன், தடிக்காளி காங்கேயன், சேணியன் காங்கேயன் ஆகிய நால்வரும் காடையூரில் முழுக்காணி பெற்றனர். பின்னர் அவர்கள் வம்சம் பல்கிப் பெருகியது. இன்றும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். காடையூர் பட்டக்காரர் காங்கேய மன்றாடியார் வெள்ளையம்மாள் வழியினர்.

வெள்ளையம்மாள் தன் குலகுரு மீனாட்சி சைவ புரந்தர பண்டித குருசாமி அவர்களிடம் ஆலோசனை செய்து தான் மக்களோடு வாழவும், காணிபெறவும் காரணமாக இருந்த இசுலாமிய சர்தாருக்கு நன்றிக் கடன் ஆற்ற எண்ணினாள். தன் மக்களின் வழியினர் குழந்தைப்

பருவத்தில் காது குத்தமாலிருந்து பின் சீர் செய்து ''காது குத்திக் கலியாணம்'' என்ற பெயரில் காது குத்திய பின் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள்.

''காது குத்திக் கலியாணம்'' செய்வது இசுலாம் மதத்திலிருந்து இந்து மதம் திரும்புதல் போன்ற சடங்காகும். காடையூர்ப் பொருளந்தை குலத்தினர் வெள்ளையம்மாளின் நான்கு மக்கள் வழிவந்தவர்கள் அவர்கள் பெயர்களில் நான்கு பிரிவாக இன்று அழைக்கப்படுகின்றனர். காது குத்தாத காரணத்தால் ''முழுக்காது'' என்று சிறப்புப் பெற்று அவர்கள் ''முழுக்காது பொருளந்தை'' என்று கல்வெட்டு, செப்பேடுகளில் அழைக்கப் பெறுகின்றனர். (சிலர் முழுக்காது குலத்தைத் தனிக் குலமாகக் குறிப்பது பெரும்பிழை. முழுக்காது குலமும், பொருளந்தை குலமும் ஒன்றே. காடையூரைக் காணியாகக் கொண்ட பொருளந்தை குலத்தார் மட்டுமே முழுக்காது பிரிவினர். அவர்கள் கொங்கு நாட்டுப் பொருளந்தை குலத்தார் அனைவருக்கும் பங்காளிகள்).

கொங்குகுலக் ''கண்ணகி''யாகிய வெள்ளையம்மாள் வரலாற்றைப் பெரும் செல்வமாகப் பாடி நமக்குக் காவியமாகத் தந்த தமிழ் வள்ளல் ''கண்ணாடிப் பெருமாள்'' தன்னை ''ஏழைப்புலவர்'' என்று அழைத்துக் கொள்கின்றார். இதனைத் தேடிப்பாதுகாத்து முதலில் அச்சிட்டவர் தாராபுரம் புதுப்பாளையம் முழுக்காது பொருளந்தை குல காமதேனு எம். துரைசாமி அவர்களாவார். காடையூர் ஈசுவரன் கோயிலில் இக்காவியம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. அக்கோயிலில் தெய்வமாக நின்று இன்றும் அருள் பாலிக்கின்றாள் தெய்வீக வெள்ளையம்மாள்.

கொங்கு மக்கள் அனைவரும் சென்று வணங்கத் தக்க புனித இடம் தெய்வம் வெள்ளையம்மாள் பிறந்த காடையூர் மண்.

✣ ✣ ✣

# 7. மாண்புடைய மனைக்கிழத்தியர்

''மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா - அவர்
பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரினில் அறங்கள் வளருதம்மா''

என்கிறார் பாரதியார். அவரே

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்கள்
இளைப்பில்லை''

என்றும் பாடினார். இவ்விரண்டு பாடல்களுக்கும் ஏற்ப வாழ்ந்து காட்டியவர்கள் கொங்குகுல மகளிர் ஆவர். அவர்கள் அறச் செயல்கள் செய்தனர். புலமை பெற்றுப் புகழெய்தினர். நாட்டு நிர்வாகம் செலுத்தினர். நீதி பரிபாலனம் செய்தனர். கவுண்டச்சிபாளையம், கவுண்டச்சி பள்ளி என்ற ஊர்களும் அவர்கள் பெயரில் ஏற்பட்டன. பெருவாழ்வு வாழ்ந்து அவர்கள் பெருமை பெற்றனர்.

வாழ்கின்ற வீட்டை மக்கள் மனை, இல், அகம் என்பர். வீட்டுக்கு உரியவர்கள் மகளிர் ஆதலின் அவர்கள் அதன் அடிப்படையில் மனைவி, இல்லாள், அகமுடையாள் என் அழைக்கப்பட்டனர். இச் சொற்களுக்கு ஆண்பாற் சொற்களே கிடையாது. மனைவன் என்ற சொல் வழக்கில் கிடையாது. இல்லான் என்றால் கைப்பொருள் இல்லாதவன் என்று பொருள்படுமே தவிர இல்லத்திற்கு உரியவன் ஆக மாட்டான். எனவே வீட்டுக்கு உரியவர்கள் மனைவிமார்களேயாவர்.

இவை தவிர மணவாட்டி, தேவி, வாழ்க்கைப்பட்டவள் என்ற சொற்களும் மனைவிமார்களைக் குறித்தன. பார்ப்பனப் பெண்கள்

பாரியாள் எனப்பட்டனர். ஆனால் பெரும்பான்மையான ஆவணங்களில் கொங்கு வேளாளர் மனைவிமார்கள் "மனைக்கிழத்தி" என்ற சிறப்புமிகு சொல்லாலேயே குறிக்கப்பட்டனர். இது பாண்டிய நாடு, சோழநாடு, தொண்டை நாட்டில் இல்லாத தனிச்சிறப்பாகும். கொங்கு வேளாண் வீட்டுப் பெண்களுக்கு மட்டும் இப்பெயர் வழங்குவது மிகச் சிறப்பு உடையது என்று சமூகவியல் ஆய்வாளர் அறிஞர் திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் கருதுகிறார்கள்.

கி.பி. 12, 13ஆம் நூற்றாண்டுக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுக் களில் "மனைக்கிழத்தி" என்ற சிறப்புச் சொல்லைக் காணுகிறோம். அவர்கள் பெயரில் பல கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது.

"கிழமை" என்ற சொல்லுக்கு உரிமை என்ற பொருள் உண்டு. கோவூருக்கு உரியவர் "கோவூர்கிழார்" என்று அழைக்கப்பட்டார். தொல்காப்பியத்திலும், பிற சங்ககால இலக்கியங்களிலும் தலைவன், தலைவியர், 'கிழவன், கிழத்தி' என்று அழைக்கப்பட்டனர். இப்போது இச்சொல்லின் பொருள் மறைந்து கிழவன், கிழத்தி என்றால் மிகவும் வயதான மூத்த குடிமக்களைக் குறிக்கும் சொல்லாகிவிட்டது.

கொங்கு வேளாளர்கள் அந்தக் காலத்தில் வீட்டு நிர்வாகம், வரவு செலவு, மக்களை வளர்த்தல், உறவினர்கள் உறவு, வீட்டுப் பரா மரிப்பு போன்ற அனைத்தையும் தங்கள் மனைவிமார்களிடம் அளித் திருந்த காரணத்தால் "மனைக்கு உரியவர்கள்" என்ற பொருளில் தங்கள் மனைவிமார்களை "மனைக்கிழத்தி" என அழைத்தனர். அவர்கள் செல்வத்தைச் சேமித்துத் தாங்களே செலவிடும் உரிமை பெற்றிருந்த காரணத்தால் ஆலயத் திருப்பணி செய்யவும், கோயிலில் நாள் பூசையும் சிறப்பு வழிபாடுகள் செய்யவும், சந்தி விளக்கும், நந்தா தீபமும் ஏற்றும் பொறுப்பையும் செய்தனர் என்பதைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறிகின்றோம். கொங்கு நாட்டில் மட்டுமே இச்சொல் பெருவழக்காக வழங்கப்பட்டுள்ளது. பல பெண்கள் விவசாயத்தையும் கவனித்தனர்.

சில ''மனைக்கிழத்தியர்'' பெயர் மாண்புகளைக் காணலாம்.

1) விசயமங்கலத்தைச் சேர்ந்த வெள்ளைகுலச் சிலம்பன் நீலன் **''மனைக்கிழத்தி சிட்டன் காவி''** (கி.பி.1123)

2) விசயமங்கலத்தைச் சேர்ந்த சாத்துவாய்குலக் காங்கய தரையன் ''மனைக்கிழத்தி மங்கையர்க்கரசி'' (கி.பி. 1156)

3) விசயமங்கலத்தைச் சேர்ந்த படைத்தலைக்கவுண்டர்களில் நல்லி சையாளன் மகள் அஞ்சாதான் ''மனைக்கிழத்தி நம்பியம்மை'' (கி.பி. 1171)

4) விசயமங்கலத்தைச் சேர்ந்த பனங்காடைகுலக் கோவன் மனிச்சர் **''மனைக்கிழத்தி உண்ணாடி''** (கி.பி. 1210)

5) விசயமங்கலத்தைச் சேர்ந்த படைத்தலைக்கவுண்டர்களில் திருவானைக்காவன் விச்சாதிரன் ''மனைக்கிழத்தி ஆளுடையாள்'' (கி.பி. 1211)

6) பொன்னிவாடி செவ்வாயர்குலக் கண்ணன் பொத்தி ''மனைக் **கிழத்தி சிறிய கண்டி''** (கி.பி. 1218)

7) திங்களூர் சாத்தந்தைகுலச் சிறியான் சடையன் ''மனைக்கிழத்தி தாவன்தாவி'' (கி.பி. 1227)

8) விசயமங்கலம் பில்லர்குலச் சொக்கன் நடுவிலான் ''மனைக் **கிழத்தி சிறுப்பெண்''** (கி.பி. 1227)

9) விசயமங்கலம் படைத்தலைக்கவுண்டரில் நம்பி ''மனைக்கிழத்தி பிள்ளையாழ்வி பாவை பிள்ளையம்மை'' (கி.பி. 1268)

10)குன்னத்தூர் சாத்தந்தைகுல கேசன் ''மனைக்கிழத்தி அந்தியூ ராண்டி'' (கி.பி.1282)

11) விசயமங்கலம் ஆவகுல வீரகாமிண்டன் உடையாண்டான் ''மனைக்கிழத்தி வாமதேவன் மகள் பிள்ளையம்மை'' (கி.பி. 1282)

12)விசயமங்கலம் காடைகுல அவிநாசி தேவன் ''மனைக்கிழத்தி தேவன்சொக்கி'' (கி.பி. 1284)

13) கோயில்பாளையம் (கவசை) கொற்றந்தைகுல அன்னி காவன் ''மனைக்கிழத்தி கேசி'' (கி.பி.1286)

14) விசயமங்கலம் கொள்ளிகுலச் சொக்கன் ''மனைக்கிழத்தி உமை யம்மை குப்பாண்டி'' (கி.பி. 1287)

மேற்கூறிய இவர்கள் 14 பேரில் 10 பேர் விசயமங்கலத்தைச் சேர்ந்தவர்கள. சிலருக்கு மட்டும் தந்தை பெயர் கூறப்படுகிறது. இக்கால மரபுப்படி ''தேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கி'' என்று பெயர் அமைப்பு இருப்பது நோக்கத்தக்கது. இவை இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள். இன்னும் கிடைக்காத கல்வெட்டுக்கள் பல இருக்கக் கூடும். கொங்கு நாட்டுப் பெண்ணிய வரலாற்றில் ''மனைக்கிழத் தியர்'' மிகவும் சிறப்பிடம் பெறுகின்றனர் என்பதை அறியலாம். அவர்கள் மாண்புடைய 'மனைக்கிழத்தியர்.'

✣ ✣ ✣

# 8. படைகளை விரட்டிய பாவை

சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சில விசேடப் பண்புகள் உண்டு. சில இடங்களில் தோன்றிய மக்களுக்கும், விலங்குகட்கும், பறவைகட்கும் தனிப்பட்ட குணங்கள் காணப்படும்.

உறையூரில் சோழமன்னன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மீது அயல்நாட்டு மன்னன் ஒருவன் பெரும் யானைப்படையோடு படையெடுத்து வந்தான். யானைப்படை அதிகம் பெற்றிராத உறையூர் மன்னன் பயப்பட்டான். போர் மூண்டது. உறையூரில் ஆயிரக்கணக் கான கோழிகள் இருந்தன. அந்த ஊருக்கே "கோழியூர்" என்று பெயர் உண்டு. அக்கோழிகள் அனைத்தும் அயல் மன்னன் யானை மீதமர்ந்து மத்தகத்தைத் தன் அலகுகளால் கொத்த ஆரம்பித்தன. யானைகள் பயந்து ஓடின. சோழன் எளிதில் வென்றான். இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் சிற்பம் உறையூர்ச் சிவன் கோயிலில உள்ளது.

சில வரலாற்று ஆசிரியர்கள் கோழி யானையை விரட்டவில்லை. கோழிச்சின்னம் கொண்ட மன்னன் ஒருவன் யானைச் சின்னமுடைய மன்னனை வென்ற நிகழ்ச்சியே இக்கதை தோன்றக் காரணம் என்பர். ஆனால், ஆப்பிரிக்காவில் இன்றும் யானைக்கு மதம் பிடித்தால் கோழி யைக் கொண்டு கொத்தவிட்டு அடக்குவர்.

கொங்கு நாட்டில் பொங்கலூர், மாதப்பூர் பகுதியில் வாழ்ந்த பொன்னகுலத் தலைவர்கள் விவசாயத்திற்குத் தொல்லை கொடுத்து வந்த விலங்குகளை வேட்டையாடக் காட்டுப் பகுதிக்குச் சென்றனர். "நாயின்றி வேட்டையாடாதே" என்பது கொங்கு நாட்டுப் பழமொழி. அதனால் அவர்களுடன் பல வேட்டை நாய்களும் சென்றன. வேட்டை நாய்கள் சீறிப்பாய்ந்து சென்றன. முயல்கள் பயந்து ஓடின. நாய்கள் துரத்தின.

ஓரிடம் வந்ததும் முயல்கள் நின்றன. அது மட்டுமில்லாமல் எதிர்த்து நின்று நாய்களைத் தாக்கின. நாய்கள் பயந்து கொண்டு திரும்பி ஓடின. வேட்டைக்கு வந்த பொங்கலூர், மாதப்பூர்த் தலைவர்கள் வியப்படைந்தனர். தங்கள் மக்கள் குடியேற ஊர் ஒன்று புதியதாக அமைக்க விரும்பிய அவர்கள் முயல் நாய்களைத் துரத்திய வீரம் செறிந்த அந்த இடத்தில் ஊரைக் கட்டினர். அவ்வூர் பொன்னர்புரம் என்று அழைக்கப்பட்டு இன்று பொன்னாபுரம் என்று அழைக்கப் படுகிறது. வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் தலைநகர் அமைத்ததற்கும் இதே காரணம் கூறுவர்.

இவற்றைப் போன்ற அரிய நிகழ்ச்சியொன்று கொங்கு மண்டலத்துக் காங்கய நாட்டுக் காடையூரில் நடைபெற்றுள்ளது. காடையூரில் வெள்ளையம்மாள் மக்கள் வழிவந்த முழுக்காது பொருளந்தை குலத் தலைவர் ஒருவர் இருந்தார். பாண்டியனிடம் அரசு அதிகாரியாக இருந்த அவர் மிகுந்த செல்வந்தராக விளங்கினார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். பறவைகளிடம் பேரன்பு கொண்ட அவள் ஏராளமான குருவிகள் வளர்த்து வந்தாள். காடைக்குருவிகள் பல வளர்த்தாள்.

ஒருமுறை ஒரிசா நாட்டு மன்னன் கபிலேஸ்வர கஜபதி பல நாடுகளை வென்று கொங்கு நாட்டின் மீதும் படையெடுத்தான். அப்போது கொங்கு நாடு பாண்டியனுக்கு உட்பட்டிருந்ததால் கஜபதியைப் பாண்டியன் எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது காடையூர்க்கு நட்டூர் என்று பெயர்.

கஜபதியிடம் யானைப்படை இருந்தன. காடையூர் அருகே பாண்டியர் படைக்கும், கஜபதியின் படைக்கும் பெரும்போர் மூண்டது. கஜபதியிடம் யானைப்படை இருந்த காரணத்தால் பாண்டியர் படை தோல்வியைத் தழுவிப் பின்வாங்கக் கூடிய நிலை ஏற்பட்டது. திடீர் என கஜபதியின் யானைப்படைக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டு அவை தங்களுக்குள்ளே ஒன்றையொன்று தாக்கிக் கொள்ள ஆரம்பித்தன. அதனால் சில யானைகள் திரும்பி வந்த வழியே ஓடத் தொடங்கின. சில யானைகள் ஓடவே எல்லா யானைகளும் வந்த வழியே ஓடத் தொடங்கின.

முழுக்காது பொருளந்தை குலத் தலைவனின் மகள் அன்பாக வளர்த்திய காடைக்குருவிகள் பலவும் பறந்து வந்து கஜபதியின் படைகளுள் யானைகளின் மத்தகத்தைக் கொத்தத் தொடங்கியதே கஜபதியின் தோல்விக்கும் தன் வெற்றிக்கும் காரணம் என்பதைப் பாண்டியன் உணர்ந்து முழுக்காது பொருளந்தை குலத்துத் தலைவரையும் அவன் மகளையும் பாராட்டிப் பரிசுகளும் விருதுகளும் அளித்தான்.

காடைக்குருவிகள் யானைகளைத் துரத்தி வெற்றி தந்த காரணத்தால் நட்டூருக்குக் காடையூர் என்ற பெயரும் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி குறிப்பாகக் கொங்கு மண்டல சதகச் செய்யுள் ஒன்றிலும் இடம் பெற்றுள்ளது.

''பாங்குறு சொக்கர் மதுரை மீனாட்சிதென் பாண்டியன்தன்
காங்கய மன்றாடி மைந்தனென் றேநற் கடகமுடி
ஓங்கிய காடை களுமூட்டி வென்றவள் உத்தமிதான்
மாங்குயில் பங்கயச் செல்வியும் வாழ்கொங்கு மண்டலமே''

என்பது அப்பாடலாகும்.

இன்றும் காடையீசுவரன் கோயிலில் காடைக்குருவி கொத்தி யானைகளை விரட்டும் சிற்பம் - தீபத்தம்பத்தில் செதுக்கப்பட்டு உள்ளது. சிலர் சிவபெருமானே காடைக் குருவி வடிவெடுத்து வந்தார் என்றும் கூறுவர்.

✣ ✣ ✣

# 9. தாமரை நாச்சியெனும் தகவுடையார்

கொங்கு வேளாளர் குலப் பெண்கள் ''காதல் ஒருவனைக் கைப் பிடித்து அவன் காரியம் யாவினும் கை கொடுத்து'' தங்கள் குடும்பப் பொறுப்பிலும், சமயநெறியிலும், சமுதாய உறவிலும், விவசாயப் பணிகளிலும் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பெரும்புகழ் பெற்று இருந்ததை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. கொங்கு வேளாளர் வரலாற்றில் கவுண்டர்களோடு கவுண்டச்சி களுக்கும் சிறந்த பங்கு உண்டு.

இப்பண்புகளுக்கு எல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ் பவர், பேரறிவும், பெரும் மதிநுட்பமும் உடைய அருக்காணித் தங்கத் தையும், அரிய ஆற்றல் பற்பல படைத்து வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு கொங்கரின் தேசியத் தெய்வமாகத் திகழும் அண்ணன்மாராகிய பொன்னரையும், சங்கரை யும் ''திருவயிறு வாய்த்த மாதேவி''யாகிய தகவுடைய தாமரை நாச்சியார் ஆவார்.

மணியங்குறிச்சி மலைக்கொழுந்தாக் கவுண்டர் மகளாகப் பிறந்தவர் தாமரை. குன்றுடையானின் மாமன் மகள்; உரிமைப் பெண் ஆவாள். ''வண்ணச்சீறடி மண்மகள் அறியாமல்'' பெற்றோரைத் தெய்வமாக எண்ணி அடக்கமாக வீட்டில் வளர்ந்தவள். குன்றுடையா னின் தந்தை கோளாத்தாக் கவுண்டரின் பாய்ச்சலூர்ப் பங்காளிகள் மணவயது வந்த தாமரை நாச்சியைத் தங்கள் மகனுக்கு மணமுடிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தனர்.

கோளாத்தாக் கவுண்டரின் மனைவி குன்றுடையானின் தாயார் பவளாத்தாக் கவுண்டச்சி இறக்கும் தருவாயில் சோழன் தோட்டியிடம் ''குன்றுடையான் இனி உன்னுடைய பிள்ளை'' என்று

கூறி ''மணியங்குறிச்சி மாமன் மகளைக் குன்றுடையானுக்கு மண முடித்து வைப்பது சோழன் தோட்டியாகிய உன் கடமை'' என்று கூறியதை நினைத்துக் குன்றுடையானைத் தேடிக் கண்டுபிடித்து மணியங்குறிச்சிக்கு அழைத்து வந்து ''கம்பு கம்பு'' என்று கூறி யாசகன் போல் மாமன் வீட்டிற்குள் அனுப்பி வைத்தான்.

கம்பு போட வந்த அத்தையிடம் குன்றுடையான்,

''கம்புக்கு வரலை அத்தை - உன் மகளுக்குக்
கணவனாக வந்தேன் அத்தை
பிச்சைக்கு வரலை அத்தை - உன் மகளுக்குப்
பிணைப் பரிசம் போட வந்தேன்''

என்று கூறினான். மாயவரின் ஓலை மூலம் எல்லா விபரமும் அறிந்த தாமரை நாச்சி தன் அணிகலன்களை நீக்கி, புத்தாடைகளைக் களைந்து ஆவேசமுடன்

''மாமன் மகன் இருக்க மறுநாட்டான் வந்ததென்ன?
அத்தை மகன் இருக்க அயல்நாட்டான் வந்ததென்ன?''

என்று கூறியதோடு அமையாது, பாய்ச்சலூர்ப் பங்காளிகளை நோக்கி,

''ஆனைமேல் வந்தவனை அடிப்பேன் நான் மாற்றாலே
குதிரைமேல் வந்தவனைக் கொண்டை பிடித்தடிப்பேன்
பெண்கொள்ள வந்தவரைப் பிறம்பால் அடிப்பேன் நான்''

என்று சீறியெழுந்து ''குன்றுடையானைத் தான் மணப்பேன்'' என்று கூறி பாய்ச்சலூர்ப் பங்காளிகளை விரட்டியடித்தாள்.

தாமரை நாச்சி - குன்றுடையான் திருமணம் நடந்தது. மண நிகழ்ச்சி முடியுமுன் தன்பேச்சை மீறியதற்காக மலைக்கொழுந்தாக் கவுண்டர் ஒரு மாடும், ஒரு சொம்பும், மடைக்கலப் பானையில் கொஞ்சம் அரிசியும் போட்டுக் கொடுத்து வீட்டை விட்டுத் திருமண மக்களைத் துரத்தி விட்டார். காட்டு வழியில் கவலையோடு உடன் வந்த குன்றுடையானிடம்

''குச்சிகளைக் கொண்டு குடிசை ஒன்று கட்டுமையா''

என்று கூறிக் காட்டுக்கீரை பறித்துக் கொண்டு வந்த அரிசியில் சமைத்துக் குன்றுடையானுக்குப் பரிமாறினாள். குன்றுடையான் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் அவனுக்கு வழி காட்டும் ஆசானாக, ஆலோசனை கூறும் மதியமைச்சராகத் திகழ்ந்தவள் தாமரை நாச்சியார்.

தாமரை நாச்சியாரை மிக உயர்த்திக் காட்டுவதற்கோ என்னவோ குன்றுடையானை மிகப் பரிதாபமான பாத்திரமாகக் காவியம் பாடிய கவிஞர் பிச்சன் படைத்து உள்ளார். குழந்தை குன்றுடையான் மூன்று வயது வரை ''அப்பா, அம்மா'' என்று கூடப் பேசத் தெரியாமல் இருந்தார். குன்றுடையானைத் தந்தையே ''ஊமை, செவிடு இது ஊதாத சங்கு'' என்று கூறித் தனக்குச் சோழன் கொடுத்த உரிமை களையெல்லாம் ''குன்றுடையான் நிர்வகிக்க முடியாது'' என்று கூறிச் சோழனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

தாமரை நாச்சியாரை ''அழகுமயில்'' என்றும், ''பொற்கொடி'' என்றும் பலவாறு புகழ்ந்த காவியக் கவிஞர் தாமரை நாச்சியாரை ''இலட்சுமியையும் அழகில் தோற்கடிப்பாள்'' என்றும் பாடியுள்ளார். ''மசச்சாமி'', ''வெள்ளைச்சோளம்'', ''வெளுத்ததெல்லாம் பால்'' என்று எண்ணும் அப்பாவி குன்றுடையானை ''ஆடு, மாடு மேய்க்கும் பேய்க்கருப்பன்'', ''இழித்தவாய்க் கிழவன்'' என்றும் கூறுவது காவியத் தைப் படிக்கும் நமக்கே சற்று நெருடலாகத் தெரிகிறது.

ஆனால் தாமரை நாச்சி குன்றுடையானை,

''அத்தை மகனாரே ஆசையுள்ள என் கணவா
மாமன் மகனாரே மாலையிட்ட மன்னவரே''

என அன்பொழுக அழைத்ததை எல்லா இடங்களிலும் காணுகிறோம்.

''தாமரையாள் பத்தினி தர்மமுள்ள உத்தமி
உத்தமா பத்தினி ஒருசொல் வாசகி''

என்று புகழப்பட்ட தாமரை நாச்சியார் பங்காளிகளால் அலைக்கழிக் கப்பட்ட குன்றுடையானைக் குன்றுபோல் நிமிர வைத்தவர் ஆவார்.

தந்தையிடமும், பங்காளிகளிடமும், பங்காளிகளின் மனைவி மாரிடமும், மேனாட்டு வேட்டுவப் பட்டக்காரனிடமும் தான் பட்ட துன்பம், அவமரியாதை ஆகியவைகளை உட்கொண்டு எல்லோரையும்,

''பழிக்குப் பழிதீர்ப்பேன் பத்தினியாள் நானானால்
முன்பழியும் பின்பழியும் முப்பழியும் தீர்ப்பேன்''

என்று சபதமிட்டவள், பொன்னர், சங்கர், அருக்காணித் தங்கம், மாமன்

மக்கள் மூவர், வீரசாம்புவன் ஆகிய எழுவரும் குழந்தையாக இருக்கும் போதே விளக்கமாகத் தாங்கள் பட்ட துயர்களையெல்லாம் விளக்கி னாள். குழந்தைகள் உள்ளத்தில் மூண்ட அத்தீக்கனல்தான் பெரும் எரிமலையாகிப் பொன்னர், சங்கர் வாழ்வில் அனைவரையும் பழிக்குப் பழி வாங்கக் காரணமாக அமைந்தது.

தாமரை நாச்சியாருக்குக் குழந்தைப்பேறு வாய்க்காத போது மதுக்கரைச் செல்லாண்டியம்மனுக்குத் தேரோட்டியதும், பொன்னம் பலம் சென்று சன்னியாசியிடம் வரம் வாங்கி வந்ததும் தாமரை நாச்சியார் யோசனையால்தான். ''பிள்ளையில்லாச் சோறு புழுவிற்குச் சமம்'' என்றும், ''மக்கள் இல்லாச் சோறு மருந்துக்குச் சமம்'' என்றும் கூறி தாமரை நாச்சியார் புலம்பும் மொழிகள் கொங்கு மக்கள் தூய வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தாமரை நாச்சியார்,

''என்னதவம் செய்தாலும் எடுத்தணைக்கப் பிள்ளையில்லை
ஊரார்கள் செய்யாத உற்றபிழை செய்தோமோ
கூலி குறைத்தோமோ குறையளவு அளந்தோமோ
பிச்சைக்கு வந்தவரைப் பின்னே வரச் சொன்னோமோ
அன்னமென்று வந்தவரை அடித்துத் துரத்தினோமோ
ஆண்டியை அடித்தோமோ அநியாயம் செய்தோமோ
பார்ப்பாரை அடித்தோமோ பால் பசுவைக் கொன்றோமோ
பங்காளி வயல் வரப்பைப் பாதி வெட்டிப்போட்டோமோ
சாமி சொத்தைத் தின்றோமோ தர்மம் கெடுத்தோமோ''

என்று புலம்புகிறாள். இவைகளையெல்லாம் தடையில்லாமல் செய் தவர் தாமரை நாச்சியார் என்பதை அறிகின்றோம். செய்தும் மகப்பேறு இல்லை.

பொன்னைப் படைத்துப் பூமியிலே தர்மம் செய்ததால் பொன்ன ரையும், தங்கத்தால் தர்மம் செய்ததால் சங்கரையும், பூச்சொரிந்து நாளும் இறைவழிபட்டதால் பொற்கொடி அருக்காணித் தங்கத்தையும் பெற்றெடுத்த தாமரை நாச்சியார் தொட்டதெல்லாம் பொன் ஆயிற்று. சோளப்பயிரில் முத்து விளைந்தது. வறுத்த சோளம் முளைத்தது. அழிந்த பயிர் வளர்ந்தது. அவள் சென்ற இடம் எல்லாம் செல்வம் கொழித்தது.

ஆதிசெட்டிபாளையம் செட்டியார், உறையூர் சைவ முதலியார் வாழ்வும் தாமரை நாச்சியாரால் உயர்ந்தது. குன்றுடையான் வாழ்வில் அனைத்து நிகழ்வுகளும் தாமரை நாச்சியாரை முன்னிறுத்தியே நடைபெறுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி.

சீத்தைமுள் வனமான பாங்காட்டில் வறுத்த சோளத்தை விதைத்து விளைச்சல் அமோகமாக இருந்தது. தாம்படிக்க மாடுகளால் முடியாது என்று கூறி சோழனிடம் யானை வாங்கி வருமாறு தாமரை நாச்சி கூறினாள். குன்றுடையான் சோழனிடம் சென்று,

''தாமரையாள் உங்களிடம் தாம்படிக்க யானையது
வாங்கிவரச் சொன்னாள்''

என்றே கேட்கின்றார். சோழனும் யானைப்பாகனிடம்

''தாமரையாள் பத்தினிக்குத் தாம்படித்து வாருமையா''

என்று கூறியே அனுப்பி வைக்கிறார். குன்றுடையானின் நிலை கண்டு அனுதாபம் ஏற்படுகிறது.

சுடச்சுட ஒளிரும் பொன்போல் சோதனைகள் வந்தபோதெல்லாம் தன் மதிநுட்பத்தால் அதைச் சாதனையாக்கினாள் தாமரை நாச்சியார்.

தாமரை நாச்சியாரின் இறுதிக் காலத்தில் அவர் மக்கள்,

''நல்ல எங்கள் தாமரைத்தாய் நாளெல்லாம் பட்ட துன்பம்
மங்கு மசையனுக்கு வாழ்க்கைப்பட்ட நாள் முதலாய்
எங்கள்தாய் பட்டதுன்பம் எடுத்துரைக்கக் கூடுமோ
ஒன்றா இரண்டா ஒரு நூறா ஆயிரமா
அன்றுமுதல் இன்றுவரை அவள்பட்ட துன்பம்''

என்று புலம்பும் புலம்பலில் அவள் துன்பம் தெரிகிறது.

தடைக் கற்களையே படிக்கற்களாக மாற்றி ஏறிச் சிகரம் தொட்ட தாமரை நாச்சியாரின் கபடு, சூது அறியாத நன்னெறி வாழ்க்கை கொங்கு குல மகளிருக்கு எடுத்துக் காட்டாகும். இன்று அண்ணன்மார் ஆலயங்களில் தாமரை நாச்சியாரும் தெய்வமாக வணங்கப்படுகிறார்.

✣ ✣ ✣

# 10. அதிசயப் பெண் அருக்காணித் தங்கம்

அண்ணன்மார் ஆகிய பொன்னர் சங்கரின் தங்கை அருக்காணி என்னும் பெயருடைய அற்புதப் பெண். தங்கம் என்றும் நல்லதங்காள் என்றும் அழைக்கப்படுபவர். தாயார் தாமரை நாச்சியார் செய்த தவத்தால் பொன்னம்பலம் சன்னியாசி அய்யர் சதாசிவனைத் தொழுது கூறிய வாக்குப்படி மாயவர் அருளால் பிறந்தவள்.

மாயவர் பஞ்சபாண்டவர்களின் தேவி துரோபதியை அழைத்து,

''பத்தினி துரோபதையே பாஞ்சாலன் தன்மகளே
அனலில் பிறந்தவளே ஆகாச கேசரியே
தீண்டா நெருப்பே துரோபதையே பாஞ்சாலி
குன்றுடையான் தேவி குலம்பெரிய நாச்சிக்கு
புத்திரியு மாக உத்தரித்துப் போகுமம்மா
பொன்னர் சங்கர் உடன்பிறந்த பொற்கொடியாள் தங்கமென்று
நல்லதங்காள் என்று சொல்லி நாடறிய நீ பிறப்பாய்''

என்ற இட்ட ஆணையால் பிறந்தவள். தங்கம் பின்வரும் நிகழ்ச்சி களை முன்னரே அறிந்து கூறும் அளப்பரிய ஆற்றல் பெற்றவள். பொன்னர் சங்கர் தங்கை அருக்காணித் தங்கம் ஆகியோர் சகோதர பாசத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்கள். ஒவ்வொரு நிகழ் விலும் பொன்னர் சங்கருக்கு உதவி வழிகாட்டுபவளாகத் திகழ்கிறாள். ''உத்தமா பத்தினி ஒரு சொல் வாசகி'' என்று புகழப்படுபவள். தங்கையை அண்ணன்மார் இருவரும்

''பின்னாலே வருகிறதை முன்னாலே சொல்கிறவள்
ஆதிநாளை வருவதை அடிநாளே சொல்கிறவள்
நமக்கு மாதா குருவல்லவா மந்திரியும் இவளல்லவா
தாதா குருவல்லவா''

என்று புகழ்ந்து கூறிய இடங்கள் பல. ஒவ்வொரு செயல் செய்யும் போதெல்லாம் தங்கையை நினைத்தே செய்கின்றனர் பொன்னரும் சங்கரும்.

## சேவல் கட்டுச் சண்டை

தலையூர்க் காளி பொன்னர் சங்கரை கோழிச் சேவல் சண்டையில் தோற்கடித்துக் கொல்ல வேண்டுமென்று திட்டமிட்டு வேட்டுவர்களில் ''அரைஞாண் கயிறுகட்டும் ஆண்பிள்ளையுள்ளதெல்லாம் சோடிரண்டு சேவல்'' கொண்டு வரச் சொல்லி நாடுகாணி மேட்டுக்கு சேவல் சண்டைக்கு வர பொன்னர் சங்கரை அழைக்க ஓலை விட்டனர்.

இதைக் கனவில் அறிந்த தங்கை அண்ணன்மாரை அழைத்து ''சேவல் இல்லாமல் சபைக்குப் போகிறீர்களே. பணத்துக்குக் கோழி வாங்கினால் படைப்போர் வெல்லாது'' என்று கூறி அடைகாக்கும் இரண்டு முட்டையை எடுத்துச் சிதற வைக்கின்றாள்.

''முட்டை சிதறியதும் முத்துநிறச் சாவல்ரண்டு
கால்இரண்டும் பச்சைநிறம் கடையிறகு தங்கநிறம்
பச்சைக்கால் கீரி பவளக்கால் கெருடன்''

என இரண்டு சேவல் தோன்றுகிறது.

''சேவல்களை ஒன்றொன்றாய் விட்டால் ஓரஞ்சு நாளாகும். ஒருமிக்க விடு'' என்று சங்கர் கேட்டுக் கொள்ள விடப்பட்ட வேட்டுவர் சேவல்கள் ஐந்து லட்சத்தை,

''இறகெல்லாம் சேவலுக்கு ஈட்டிக் கத்தியாகி
பக்கத்து எலும்பெல்லாம் பருஞ்சாணைக் கத்தியாகி''

பொன்னர் சங்கர் சேவல் அழித்து விடுகிறது. தங்கை உருவாக்கிக் கொடுத்த சேவல் தனிப்பெரும் வெற்றி பெறுகிறது.

## கிளி வேண்டுதல்

பெற்றோர் இறந்த மனத்துயர் தீரத் தான் விளையாடுவதற்கு கிளி, மயில், புறா வேண்டும் என்று தங்கை கேட்டாள். எந்தக் கிளி

வேண்டும் என்று கேட்க வீட்டை விட்டுச் சென்றறியாத தங்கை கிளி இருக்குமிடத்தைத் துல்லியமாகக் கூறுகிறாள்.

''கன்னங் கருத்தமலை சுவாமி கைலாசம் போன்றமலை
நாலுபக்கம் சதுரகிரி அதன் நடுவிருக்கும் வீரமலை
வீரமலை வனத்தில் வெண்முடிக்குத் தென்கிழக்காய்
அடர்ந்த பலாமரம் இருண்டதோர் சோலையது
அதிலே ராமர் லட்சுமணர் என்று ரண்டு அன்னக்கிளிகள் உண்டு
அந்தக் கிளி கொண்டு வந்தால் அருகிருந்து பேசும்
வீரமலைக் கிளி விளையாட நல்ல கிளி''

என்று தங்கை கூற அவ்வாறே விளையாடக் கிளிகள் வந்தன.

## குப்பநாச்சி சிறை

கொள்ளையிட வந்த வேட்டுவர்கள் பச்சணா முதலியார் மகள் குப்பநாச்சியைச் சிறையெடுத்துச் செல்கின்றனர். சிறை மீட்க சங்கர் உத்தரவு கேட்ட போது பொன்னர் ''நாடு கொள்ளை போனால் நமக்கு என்ன போகிறது. வலிய வம்புச் சண்டை வேண்டாம்'' என்று கூறுகிறார். தங்கை குப்பநாச்சி சிறையை அவசியம் மீட்க வேண்டும் என்று கூறுகிறாள்.

''ஒக்கப் பிறக்கணுமா உன்னோட ஒரு முலைப்பால் உங்கணுமா?
கூடப் பிறந்து அண்ணா உன்னோட கூட்டுப்பால் உங்கணுமா?
பெண் சிறையெடுத்துப் போக உன் மனது பொறுக்குதா
உன்னுடைய தங்கை சிறை போனால் தரிக்குமா உன்மனது
என்னைச் சிறையெடுத்தால் அண்ணா இருக்குமா உன்மனது''

என்று எடுத்துக்கூறி குப்பநாச்சியை மீட்க வைக்கின்றாள். குப்ப நாச்சியைச் சகோதரி என்றே தங்கம் கூறுகிறாள்.

## சிவசோழர் பிரதானி வருதலை அறிவித்தல்

சிவசோழர் பிரதானி வருவதைக் கனவில் கண்டு பொன்னர் சங்கருக்குச் சொல்லத் தங்கை செல்லும்போது சகோதரர்கள் இருவரும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்த தங்கை,

''சொக்கட்டான் ஆட்டமது சிலபேர்க்குத் தொழில்இல்லா ஆட்டம்
சதுரங்க ஆட்டமது சண்டியர்கள் விளையாட்டு''

என்று கூறிச் சோழர் பிரதானி வருவதைக் கூறுகிறாள். நமக்கும் சோழர்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சகோதரர்கள் கூறிய போதும் பிரதானியை வரவேற்க வேண்டும் என்று தங்கை கூறுகிறாள்.

## ஆசாரி சூழ்ச்சியை அறிவித்தல்

தலையூர்க் காளியின் ஏவலால் செம்பகுல ஆசாரி மாவிலங்க மரத்தில் மரநாழி செய்து பொன்முலாம் பூசி எடுத்துக் கொண்டு வந்து ''இது கரிகால சோழனுக்குக் கொண்டு போகும் கருவூலம். இரவு நேரம் ஆயிற்று. இங்கு தங்க வேண்டும். பொன்நாழியை உங்களிடம் கொடுத்து வைத்துக் காலையில் பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறுகிறான். பொன்னர் சம்மதித்து விட்டார்.

தங்கை பின்வருவதை அறிந்ததால்,

''அச்சமற்ற வாசல் நம்ம அசையா நகருக்கு
கூச்சம் அற்ற வாசல் அண்ணா நம் குலுங்கா நகருக்கு
குலுங்கா நகருக்கு இவன் கோள் சொல்ல வந்த தட்டான்
தட்டானை வெட்டியே தான் அண்ணா சங்காரம் பண்ணிவிடு''

என்கிறாள்.

நம் மனை தேடி வந்தவனை எப்படி வாளுக்கு இரை ஆக்குவது? என்று கூறி பொன்னர் அடைக்கலமளிக்கிறார். இரவில் விளக்கின் அருகில் இருந்ததால் பொன் முலாம் உருகி பொன் நாழி மரநாழியாகக் காட்சி யளித்தது. விடிந்ததும் ஆசாரி இது என் நாழி அல்ல என்று கூற வெள்ளாங்குளத்துக்குச் சத்தியம் செய்யச் சென்று ஆசாரி சூழ்ச்சியை அறிந்து பொன்னர் அவனை வெட்டிக் கொல்லுகிறார்.

## அண்ணிகள் வீட்டுக்குத் தீ மூட்டுதல்

தீய கனவின் மூலமும், கெட்ட சகுணங்கள் மூலமும் அண்ணன் மாருக்கு இறுதி நேர்ந்ததை அறிந்து கொண்டு தங்கை அவர்கள் இறந்த இடம் செல்ல அண்ணியரை அழைக்கின்றாள். அவர்கள் வர

மறுத்துக் கதவைத் தாளிட்டுக் கொண்டு தங்களை அக்கினிக்கு இரையாக்குமாறு வேண்டுகின்றனர். தங்கை அழுத கண்ணீரே அக்கினிப் பந்தாக மாளிகையுடன் அவர்களை எரித்தது.

## படுகளம் நோக்கி

வாழும் அரண்மனை வாசல் கடந்தறியாத தங்கம் புறவடிவு தெரியாமல் முக்காடிட்டு அண்ணன்மார் தாகம் தீர்க்க பழைய புளி, ஏலம், சுக்கு, கிராம்பு எடுத்துக் கொண்டு கையில் கரகம் தாங்கிப் படுகளம் நோக்கிப் புறப்படுகிறாள். முள் காட்டில் அடிமேல் அடி வைத்து அழுது கொண்டு போகிறாள். தங்கை துயர்கண்டு பறவைகள் இரை எடுக்கவில்லை. மாடு புல் மேயவில்லை. மரங்களின் இலை அசையவில்லை.

பெரியக்காண்டி செய்யும் தவத்தை தங்கையின் அழுகுரல் குலைக்கிறதென்று தங்கையைக் கொல்ல மந்தி, வேங்கை, நாகம், யானை, வீரமகாமுனி ஆகியோரை அனுப்ப அவை தங்கைக்கு பணி விடை செய்யத் தொடங்கின. இறுதியாகக் கன்னிகள் சென்று பார்த்து வந்து பெரியக்காண்டியை விடப் பெரியவள் தங்கை என்று கூறவே பெரியக்காண்டி தங்கை சந்திப்பு நடைபெறுகிறது.

பெரியக்காண்டி வேண்டிக் கொள்ள ''வேதப்பிராமணி'' என்று முன்னர் கூறப்பட்ட தங்கை,

''வேதங்கள் சொல்லுவேன் வேத சாஸ்திரம் நான் அறிவேன்
ஐந்தெழுத்தின் பஞ்சாங்கம் எனக்கு அறிவு தெரியும்''

என்று கூறி வேள்வி செய்கிறாள். பல்வேறு உபாயத்தால் மாண்டவர்கள் எழுகின்றனர். மாண்டவர்கள் மீண்டால் உலகில் இடம் போதாது என்று கூறி எல்லோரும் வீடுபேறடைகின்றனர்.

அண்ணன்மார் காவியத்தில் அற்புத ஆற்றல் படைத்த அதிசயப் பெண்ணாகத் தங்கை அருக்காணி விளங்குகிறாள். வணக்கத்திற் குரிய தெய்வமானாள்.

✣ ✣ ✣

# 11. விளக்குக் கொடையளித்தோர்

விளக்கு இருளை நீக்கித் தன்சுடரால் சுற்றுப்புறம், பொருள்கள் ஆகியவைகளை விளக்கம் செய்கிறது. அதனால் அது ''விளக்கு'' ஆயிற்று. இயற்கையைப் பல்வேறு முனைகளில் வென்ற மனிதன் விளக்கைக் கண்டுபிடித்தது மனித வாழ்வின் திருப்பங்களில் ஒன்று.

இருளைக் கண்டு பயந்த மனிதன் ஒளிகொடுத்த விளக்கை வணங்கினான். இறைவனை ''ஒளிவளர் விளக்கு'' என்றான். அருளாளர்கள் விளக்கின் ஒளியில் - தீப சோதியில் இறைவனைக் காணலாம் என்றனர்.

திருக்கோயில்களில் விளக்கு வைப்பது மிகப் பெரும் புண்ணிய மாகக் கருதப்பட்டது. கோயில்களில் எப்பொழுதும் எரியும் விளக்கு களுக்கு ''நந்தா தீபம்'' என்று பெயர். பூசை நேரங்களில் எரியும் விளக் குக்குச் ''சந்தியா தீபம்'' என்று பெயர். ''ஐந்து நாழிகை நின்றெரியும் விளக்கு'' ''ஏழரை நாழிகை எரியும் விளக்கு'' என்று குறிப்பிட்ட காலம் எரியும் விளக்குகளும் உண்டு. (1 நாழிகை 24 நிமிடம்). கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், வாயில், திருச்சுற்று முதலிய பல இடங்களில் விளக்கு வைத்தலும் உண்டு.

விளக்கெரிக்கக் கொடையாக நிலம்,நெல், பொன், காசு, ஆடு, மாடு, எருமை ஆகியவைகளைக் கொடையாகக் கொடுப்பர். மூலப் பொருளாக இவைகளைப் பெற்று இவற்றிலிருந்து வரும் வருமானத் தைக் கொண்டு கோயில் சபையார், ஊர்ச்சபையார், அர்ச்சகராகிய சிவப்பிராமணர் ஆகியோர் சந்திரசூரியர் உள்ளவரை என்றென்றும் விளக்கெரிப்போம் என்று கல்வெட்டிலோ அல்லது செப்பேட்டிலோ எழுதிக் கொடுப்பர். பெரும்பாலும் நெய் விளக்குதான் ஏற்றுவர். இலுப்பை எண்ணெய் விளக்கு எரிப்பதும் உண்டு. விளக்கேற்றும்

பணியைச் செய்ய ''திருவிளக்குக் குடிகள்'' கோயில்களில் இருந்தனர். ஒரு கல்வெட்டில் ''பெருவிரல் அளவுக்குக் குறையாமல் திரி இட்டு எரிக்க'' என்று கூறப்பட்டுள்ளது. விளக்கு எரிக்கத் தவறினால் இரண்டு மடங்கு அடுத்து விளக்கேற்ற வேண்டும். எரியும் விளக்கை அணைப்பது மிகப்பெரிய பாவமாகக் கருதப்பட்டது. கோயிலுக்கோ, சபையோருக்கோ அல்லது அரசனுக்கோ கொடுக்க வேண்டிய உரிய வரியைக் கொடுக்காவிட்டால் ''சன்னிதி இருள சந்தியா தீபம் அணைத்த தோசம் வரும்'' என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.

முதலில் இரும்புச் சங்கிலியால் தொங்கும் விளக்குகளே இருந்தன. பின்னர் ஒரு தண்டைக் கூர்மையாக்கிக் கீழே நிலத்தில் குத்தி நிற்க வைத்து அதன்மீது விளக்கேற்றினர். இதனைப் பழைய கல்வெட்டுக்கள் ''குத்தி விளக்கு'' என்றே குறிக்கின்றன. அதுவே ''குத்துவிளக்கு'' என்று ஆகிவிட்டது.

''விளக்கேற்றுதல்'' என்பதே நல்வாழ்வுபெறுதல் என்ற பொருள் தந்தது. பெண்களை ''குடும்ப விளக்கு'' என்பார் பாரதிதாசன். கோயிலில் ஒரு விளக்கு எரிப்பவர் கூட சிவகதி அடைவர் என்று பழம் பெரும்பாடல் ஒன்று கூறுகிறது. அணையும் நிலையில் இருந்த விளக்கு ஒன்று எலி ஓடும்போது தற்செயலாகப்பட்டு சுடர்விட்டு எரிந்தது; அந்த எலி அப்புண்ணியத்தால் அடுத்த பிறவியில் சோழ மன்னனாகப் பிறக்கும் வாய்ப்பைப் பெற்றது என்று புராணம் கூறுகிறது. அக்காலத்தில் கொலை முதலிய கொடிய குற்றம் செய்தவர்கள் கூட விளக்கெரித்துப் பாவம் நீங்கப் பெற்றனர் என்கிறது பழைய ஆவணங்கள்.

கொங்கு நாட்டில்தான் விளக்குக் கொடைகள் மிக அதிகம். குறிப்பாக கொங்குவேளாளர் வீட்டு மகளிர் விளக்குக்குக் கொடை அளித்ததாக இருபத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கிடைத்து உள்ளன பெண்ணிய வரலாற்றில் மிக அரிய செய்தியாகும். மாதிரிக்கு இரண்டு கல்வெட்டுக்கள் அளிக்கப்படுகின்றன.

1) ஈரோடு மாவட்டம், விசயமங்கலம், நாகேசுவரர் கோயில் கல்வெட்டு (காலம் கி.பி.1015)

''ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது பூந்துறை நாட்டு இளம்பள்ளியில் வெள்ளாளன் காடைகளில் அவினாசி தேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கியேன் விசயமங்கலத்து ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு சந்தியாதீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒ்ன்று கைக்கொண்டேன் ஆத்ரேய கோத்திரத்து ஆளவந்தான் பிழைபொறுத்தான் பட்டன் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை எரிக்கக் கடவானாக''.

2) ஈரோடு மாவட்டம், குன்னத்தூர், குன்றமுடையார் கோயில் கல்வெட்டு (காலம் கி.பி.1281)

''நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 17வது மார்கழி மாதம் முதலாக குறுப்புநாட்டுச் சிறுவலூர் வெள்ளாளன் சாத்தந்தைகளில் கேசன் மனைக்கிழத்தி அந்தியூரம்மையேன் குறுப்பு நாட்டில் குன்றத்தூர் நாயனார் குன்றமுடையார் கோயிலில் சந்தியா தீப விளக்கு ஒன்றினுக்கு அச்சு ஒன்று கொடுத்தேன்''.

இன்னும் கோயிலுக்குத் திருவிளக்கு வைத்த பெண்கள் பலர் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் பெயரளவில் மட்டும் கீழே குறிக்கப் பெறுகின்றனர்.

3) மடவிளாகத்தில் பச்சோட்டு ஆவுடையார் கோயிலில் சோழியன் சிவன் பெருந்தேவி என்பவர் திருவிளக்கு வைத்தார்.

4) சேவூர் கபாலீசுவரர் கோயிலில் நம்பிராட்டியார் வானவன் முக்கோக் கிழானடிகள் பெண்டுகளில் அரையன்வல்லி, மல்லிகேசி ஆகியோர் திருவிளக்கு வைத்தனர்.

5) கொழுமம் தேவரடியார் உமையாள் மைவிரவுகண்ணி திருமுருகன் பூண்டிக் கோயிலில் திருவிளக்கு வைத்தார்.

6) கரையான அடிக்கீழ்த்தளத்தில் இருக்கும் வில்லிபூமன் மனைவி சோழன்உமை நடுவச்சேரி கோதைப்பிராட்டீசுரம் உடையார் கோயிலில் விளக்கு வைத்தார்.

7) கொழுமம் அதிராசராசன் திருமடை வளாகத்தில் இருக்கும் தேவரடியார் தேவன் உலகுடையார் தன் மகள் அனவரததான நங்கை நலத்திற்காக திருவிளக்கு வைத்தார்.

17. செங்கற்பள்ளி சிவப்பிராமணன் மனைவி கணபதியாழ்வி அவ்வூர்க் கோயிலில் விளக்கு வைத்தார்.

✣ ✣ ✣

# 12. பக்தி பிடித்த சடைச்சியம்மாள்

பதினான்கு பழம்பெரும் ஊர்களைக் கொண்ட கொங்கு காங்கய நாட்டின் பொதுத்தலமாகவும், தலைமைத்தலமாகவும் விளங்கும் சிறப் புடையது சிவமலை. அச்சிறப்புமிகு தலத்தின் தேர்த்திருவிழாவை காங்கயநாட்டுப் பதினான்கு ஊர்க்காரர்கள் நடத்துவதும், அவர்கள் பரி வட்டம் கட்டி சிறப்பிக்கப்படுவதும் இன்றும் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

அருணகிரிநாதர் சிவமலையாண்டவரை வணங்கி சந்தப் பாடல்கள் பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் படிக்கும் வாசல் இது என்று சிவமலைக் குறவஞ்சியில் மடவளாகம் லட்சுமணபாரதி பாடியுள்ளார். பிள்ளைத்தமிழ், தூது, புராணம் முதலிய பல இலக்கி யங்கள் இத்தலத்திற்கு உண்டு. எல்லாவற்றையும் விட சிவவாக்கியர் என்ற புகழ்பெற்ற சித்தர் அங்கு வாழ்ந்ததும், அவர் அடக்கமான புனித இடம் அங்கு இருப்பதும் சிறப்புடையது.

சங்க இலக்கியத்தில் ஏறை என்று சிறப்பிக்கப்பட்ட அத் தலத்தின் மீது கொங்கு வேளாண் மக்களுக்குப் பெரும்பற்று உண்டு. பலர் சிவன்மலைக் கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சிவமலை இலக்கண விதிப்படி சேமலை என்றாகும். சேமலைக் கவுண்டர் என்பதும் சிவமலைப் பெயரே ஆகும். சிவமலை அடிவாரத்தில் முன்பு ஊரில்லை. அருகிலுள்ள பட்டாலி தான் சிவமலைக்குரிய ஊராகும். (அதேபோல் சென்னிமலைக்கு உரிய ஊர் பிடாரியூர் ஆகும்). சிவமலையே பட்டாலியூர் என்றும், சிவமலையாண்டவரை பட்டாலி பால்வெண்ணீசுவரர் பாலன் என்றும் இலக்கியம் கூறுகின்றது.

பட்டாலியில் கண்ணகுலத்தில் தோன்றிய அரசப்ப கவுண்டருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வள்ளி என்று பெயர் வைத்ததினாலோ என்னவோ எப்பொழுதும் முருகன் பற்றியே சிந்தித்துக் கொண்டு

இருந்தாள். கண்ணில் தோன்றிய எப்பொருளிலும் முருகனைக் கண்டாள். பார்த்த எல்லோரையும் முருகன் வடிவாக எண்ணினாள். தினமும் மூன்று வேளையும் முருகனை, சிவமலையாண்டவரை மனமுருக வணங்கினாள்.

தக்க பருவம் அடைந்தும் திருமணத்தை வெறுத்தாள். மறுத்தாள். சடாமுடியோடு இருந்த வள்ளியை அவர் கோலம் கண்டு எல்லோரும் சடைச்சி என்று அழைத்தனர். எருதுகள் மீது கோணிப் பைகளை இரு புறமும் தொங்கவைத்து அருகிலுள்ள ஊர்களுக்கு செல்வாள். மக்கள் அதில் தானியங்களைப் போட்டு நிரப்பினர். இறைபணிக்கு அதைச் செலவிட்டாள்.

ஓலைச்சாலை அமைத்தாள். அதனை சடைச்சிமடம் என்று மக்கள் கூறினர். அடியார்க்கு அமுது படைத்தாள். தண்ணீர்ப் பந்தல் வைத்து எப்பொழுதும் உப்பு, ஊறுகாய், நீராகாரம் அளித்தாள். நந்தவனம் ஏற்படுத்தி சிவமலையாண்டவருக்கு பூமாலை அளிக்க ஏற்பாடு செய்தாள். படிகள் அமைத்தாள். இளைப்பாற மண்டபம் கட்டினாள். விபூதியளித்து நோய் நீக்கம் செய்தாள். எல்லோருக்கும் பக்தி வழியைக் காட்டினாள்.

ஒருநாள் கயிலாயத்தில் சிவன் பார்வதியாகிய அம்மையப்ப ரோடு முருகன் உள்ள கயிலைக் காட்சியைக் காண விரும்பி கயி லைக்கு வருவதாக வேண்டிக் கொண்டாள். அசரீரியாக சிவபெருமான் 'அம்மா! சடைச்சி! நீ வந்து காணவிரும்பிய கயிலைக் காட்சியை இங்கே சிவமலையிலேயே உனக்குக் காட்டுகிறேன்' என்று காட்சி கொடுத்தார். உள்ளம் உருகிக் கண்ணீர் சிந்தி அகம் மகிழ்ந்து சடைச்சி யம்மாள் வணங்கினாள். அவர் தவக்கோலம் கண்டு சடைச்சியை சடைச்சியம்மாள் என்று மக்கள் அழைத்தனர்.

இறைவனைக் கண்டு நேரில் காட்சி பெற்ற பின் சடை.ச்சி யம்மாள் பூவுலகில் வாழ விரும்பவில்லை. சதா சிவமலையாண்ட வரிடம் சேருகிறேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். ஒருநாள் முழுநீறுபூசிய மேனியராக, மஞ்சள் உடையுடுத்து பூமாலையுடன் பக்தி பரவசமாக சிவமலையாண்டவர் சன்னதி சென்றார். பின் வெளியே வரவேயில்லை. சடைச்சியம்மாள் என்ன ஆனார்? எங்கு சென்றார்? எவருக்கும் தெரியவில்லை. எல்லோரும் தேடினர். தேடித் தேடி

அலைந்தனர். அசரீரியாக நான் சிவமலையாண்டவர் பாதத்தருகில் உள்ளேன் என்ற வாக்கு எழுந்தது. கேட்டவர்கள் வியப்படைந்தனர்.

மக்கள் சடைச்சியம்மாள் உருவத்தை சிறுகல்லில் வடித்து சிவமலையாண்டவர் பாதத்தருகே வைத்தனர். தாய் வயிற்றில் உதிக்காத சிவபெருமான் காரைக்கால் அம்மையாரை தாயே என்று அழைத்தது போலவே சடைச்சி அம்மாளையும் அம்மா என்று அழைத் தார். நடராசப் பெருமான் ஆடல் உருவத்தின் அடிப்பகுதியில் விரும்பிப் பேய் வடிவம் ஏற்ற காரைக்கால் அம்மையார் உருவத்தைப் பொறிப்பது வழக்கம். அது போல் சிவமலையாண்டவர் பாதத்தருகே சடைச்சி யம்மாள் உருவம் நெடுங்காலம் இருந்தது.

சிவமலையாண்டவர் குறவஞ்சி பாடிய மடவளாகம் லட்சுமண பாரதி (1769-1859) இதைப் பார்த்து சடைச்சியம்மாள் வரலாறு கேட்டு வியந்துள்ளார். தம் குறவஞ்சியில்

''பக்தி பிடித்த சடைச்சியம்மாளை - தன்
பாதங்களில் வைத்திருக்கும் சிவமலையாண்டவர்''

என்று பாடியுள்ளார். பிற்காலத்தில் வந்தவர்களுக்கு சடைச்சியம்மாள் வரலாறும் தெரியவில்லை, பெருமையும் புரியவில்லை. இன்று சிவமலையாண்டவர் சன்னதியில் சடைச்சியம்மாள் உருவச் சிலை இல்லை. எங்கு சென்றாரோ தெரியவில்லை.

சிவமலையில் 18ஆம் படியைப் 'புராணப்படி' என்பர். பதினெண் புராணம் என்று கூறப்படுவதால் அப்பெயர் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். அப்பதினெட்டாம்படி சடைச்சி கட்டியதாகும். அங்கு சடைச்சி வாழ்வதாக மக்கள் நம்புகின்றனர். ''பத்தினிப் பெண் சடைச்சியம்மாள் பதினெட்டெனும் புராணப் படியில் குடியிருப்பாள்'' என்பது குறவஞ்சி வரிகளாகும்.

சைவ உலகில் தேவாரம் பாடிய திருநாவுக்கரசரின் சகோதரியார் திலகவதியார் திருமணம் செய்து கொள்ளாமல் சமயப் பணி பல புரிந்தது போல கொங்கு நாட்டு வேளாளர் குடும்பத்துப் பெண்ணும் சமயப்பணி புரிந்தது வியப்பான செயலல்லவா?

❖ ❖ ❖

# 13. திருப்பணி செய்த திருமதிகள்

பண்டைய அரசர்கள் காடுகளை அழித்து மக்கள் வாழும் நாடாக்கி நீர்நிலைகளை ஏற்படுத்திக் கோயில்களைக் கட்டி மக்களைக் குடியேற்றினர்.

''காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி
கோயிலொடு குடி நிறுவி''.

என்று இலக்கியம் கூறும்.

திருக்கோயில் இல்லாத ஊர்களைத் ''திரு இல்லாத ஊர்'' என்று தேவாரப்பாடல் கூறும். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழமொழி. கோயில்களைக் கட்டி வழிபடுவதுடன் தொடர்ந்து அதன் பராமரிப்புக்கும் தக்க ஏற்பாடுகளையும் செய்தனர். பொன், பொருள், நிலம், கால்நடைகள் ஆகியவற்றைக் கோயில்கட்கு அளித்தனர். புதுப்பிப்பதற்குப் ''புதுக்குப்புரம்'' என்றே தனி நிலங்கள் இருந்தன.

ஒரு புதிய கோயில் கட்டுவதைக் காட்டிலும் பழைய கோயில் களைத் திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியம் தரும் என்று காஞ்சிப் புராணம் சிவபுண்ணியப்படலம் கூறுகிறது.

''முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதிள் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும்.

கொங்கு நாட்டில் கோயில் திருப்பணிகளில் ஆடவர்மட்டும் அல்ல; பல சமூகங்களைச் சேர்ந்த பெண்களும் ஆர்வமுடன் ஈடுபட் டுள்ளனர் என்பதைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## திருச்செங்கோட்டுத் திருப்பணிகள்

திருச்செங்கோடு தேவாரப் பாடல் பெற்ற கொங்கு ஏழு தலங்களில் ஒன்று. 'செங்கோடு' என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகிறார். 'கொடிமாடச் செங்குன்றூர்' எனப் புகழ் பெற்றது.

திருச்செங்கோட்டுக்குத் திருப்பணி செய்தவர்களைப் பற்றிய விபரத்தை திருச்செங்கோடு ஆதிசைவ சிவப்பிராமணர் மரபைச் சேர்ந்த சதாசிவம் என்பவர் பாடல்களாகத் தொகுத்து எழுதியுள்ளார். 'எழுகரை நாட்டு நம்பி' என்ற சிறப்புப் பெற்ற அவர் இயற்றிய நூலுக்குத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்பது பெயர்.

அந்நூலில் திருமுடித்தாசி சேனாபதி வேலாள், தயிலி, குருவம்ம மாணிக்கி, பெரியாள் என்ற நான்கு பெண்கள் செய்த திருப்பணிகள் கூறப்படுகின்றன. அறுபதாம்படி மண்டபத்தின் மேல் உள்ள செட்டியாக்கவுண்டர் மண்டபத்தின் ஒரு பகுதியைத் தூரகுலம் வள்ளியம்மாள் கட்டினார். இவர் மண்டககப்பாளையம் மசவேல கவுண்டர் மனைவியாவார்.

## திருமுடித்தாசி சேனாதிபதி வேலாள்

இவர் திருமுடிக் கவுண்டர் மரபில் வந்தவர். கோயிலில் தேவரடியாராகப் பணி புரிந்தவர். நன்கு தமிழ் கற்றவர். அவர் தன் உபயமாக மண்டபம் ஒன்றைக் கட்டியுள்ளார். இதனை

''பன்னுதமிழ்ச் சேனா பதிவேலாள் நாகவரை
மன்னுபடி வாசல் வழிமீது - மின்னுமணி
மண்டபத்தைக் கண்டாள் வணங்கினாள் மாயையெனும்
பண்டவத்தை தீரும் படி''

என்ற பாடல் விளக்குகிறது.

## தயிலி

தயிலி என்பவள் ஆனந்த வருடம் திருச்செங்கோடு வீரபத்திரர் சன்னதி முன்பாக அழகாகவும், மிக உயரமாகவும் உள்ள மண்டபம் ஒன்றைக் கட்டினாள்.

''வானந்தம் என்னும்ஒரு மண்டபத்தை யேதயிலி
தானந்தம் என்னச் சமைத்தாளே - ஆனந்த
வச்சரத்தே கோதை வருவீர பத்திரன்முன்
தச்சுரத்தின் நல்லழகாய்த் தான்''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும்.

## குருவம்ம மாணிக்கி

இவருடைய பெயர் அமைப்பிலிருந்து இவர் திருச்செங்கோட்டுக் கோயிலில் தேவரடியாராகப் பணிபுரிந்தவர் என்பது தெரிகிறது.

குருவம்ம மாணிக்கி திருச்செங்கோடு ஆதிசிவ தீர்த்தத்தின் மேலே தென்புறமாக பெரிய மண்டபம் ஒன்றை அமைத்தார்.

''அன்புநெடும் சேடகிரி ஆதிசிவ தீர்த்தமிசைத்
தென்புறம்ஓர் மண்டபமும் செய்தாளே - இன்பநெறி
ஆரும்எதி ராதகுரு வம்மமா ணிக்கிவட
மேருகிரி யைப்போல வே''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும். மேருமலைபோல மண்டபம் உயரமானது என்று புலவர் கூறுகிறார். இம்மண்டபத்தை மக்கள் இன்று 'தேவடியாள் மண்டபம்' என்று அழைக்கின்றனர்.

## பெரியாள்

வீரபாகு குலம் என்று சிறப்பித்துக் கூறப்பெறும் செங்குந்தர் குலத்தில் தோன்றிய பெரியாள் என்பவர் தென்மேற்குத் திசையில் செங்கோட்டு வேலவரின் இளங்கோயிலுக்குக் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கட்டினார்.

''உத்தம வீர வாகின்
உயர்குலம் பெரியாள் ஆண்டாங்
கொத்தரின் நிருதி மூலைக்
குளம்இளங் கோயில்வே லர்க்கு
அர்த்தமண் டபமும் கர்ப்ப
அகமகா மண்ட பங்கள்

பத்தியின் புரிந்து தானம்
பலபணி மலையில் செய்தாள்''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும்.

## முத்துக்காபட்டி முத்தியாலம்மன்

முத்துக்காபட்டியில் போகல ரெட்டியார் சமூகத்தினர் மிட்டா தாராக விளங்கினர். அம்மரபில் வந்த முத்தியாலம்மன் என்பவர் நாமக்கல் கோயில் கொடிக் கம்பத்திற்கு தங்கத் தகடு போர்த்தினார். சிதம்பரம் கோயிலுக்குத் தேர் செய்து கொடுத்தார். பல கோயில்களில் ஏராளமான கட்டளைகளை ஏற்படுத்திப் பூசைக்கு ஏற்பாடு செய்தார்.

## *சில திருப்பணிகள்*

1) கொடுவாய் ஓதாளகுலச் சின்னப்ப கவுண்டர் மனைவி சிவகாமியம் மாள் அவ்வூர் நாகீசுவரர் கோயிலில் வடக்குப் பக்கக் குறடு திருப்பணி செய்தார்.
2) கொளாநல்லி கண்ணகுலக் கவுண்டருக்கு வாழ்க்கைப்பட்ட பெரியம்மாள் பொய்ங்காக் கவுண்டிச்சி பாம்பலங்காரர் கோயிலில் திருப்பணி செய்தார்.
3) ஊதியூரை அடுத்துள்ள வாணராயநல்லூர் செம்பூத்தகுல மாணிக்கி தெய்வானை கரியகாளியம்மன் கோயில் தீபத்தத்தைச் செய்து கொடுத்தார்.
4) சோழமாதேவிநல்லூர்க் கோயிலுக்கு பூசரில் ஆளுடைய நாச்சியின் சிறிய தாயார் திருநிலைகாலையும், படியையும் கட்டிக் கொடுத்தார்.
5) மோகனூர் மணியகுலக் கருப்பகவுண்டர் மகள் கங்காத்தாள் குமரீசுவரர் கோயில் திருப்பணி செய்தார்.
6) கொளிஞ்சிவாடி வெள்ளாளர் காவன் என்பவர் மனைவி சடையம்மை சொக்கநாதர் கோயிலுக்கு நிலம் தானம் செய்தார்.

7) ஈங்கூர் வல்லாள ஈசுவரமுடையார் கோயிலில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தவர் மார்க்கண்டேய கோத்திர பல்லவராய பட்டன் மனைவி யாவார்.

8) கரூர் வட்டம் ஆரியூர் செல்லாண்டியம்மன் கோயிலில் வெண்டுவன் குல வாங்கப்பாளையம் பழனியம்மாள் கோயில் திருப்பணி செய்துள்ளார்.

9) திங்களூர் அவினாசி பட்டன் மகள் நய்யாண்டி கண தம்பிராட்டியார் நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில் கட்டும்போது சித்திரத்தூணையும், போதிகையையும் உபயமாகக் கொடுத்தார்.

10) தந்தை பெரியார் அவர்களின் தாயார் சின்னத்தாயம்மாளும், சிறிய பாட்டியார் சென்னம்மாளும் தங்கள் சிறு சேமிப்புப் பணத்தைக் கொண்டு ஈரோடு பள்ளி கொண்ட பெருமாள் கோயில் பிரகாரத்திற்குக் கடப்பைக் கல் 1907 ஆம் ஆண்டு பதித்தனர்.

அவிநாசி திருக்காமக் கோட்டத்து நாச்சியார் பெருங் கருணாலயச் செல்விக்குப் பிராட்டி மாதேவி சிலம்பாழ்வி, கோயில்பாளையத்தில் வேட்கோவர் மூர்க்கன் குருடனான நடைகொண்ட நாட்டுச் செட்டி மனைவி மூர்க்கன் அரசி, கடத்தூரில் தேவரடியார் சொக்கன் வெம்பி, கடத்தூர் வேளத்துப்பெண் உடையாள், ஆலத்தூர் வண்ணார் நீலன் செல்லன் மனைவி காவஞ்சாத்தி முதலியோர் செய்த திருப்பணி பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## பவானித் திருப்பணிகள்

பவானியில் கெட்டி முதலியார் மனைவி சின்னம்மாள் பண்ணார் மொழியம்மன் கோயில் முன் உள்ள அர்த்த மண்டபத்தைக் கட்டினார். இப்பணியில் பத்தர்பாடி எம்பெருமான் கவிராயர் மனைவி பூங்கோதையும் பங்கு கொண்டார்.

பவானியில் காவிரிப் படித்துறையை கரவருடம் சத்தியபாமா அம்மையார் கட்டினார்.

பவானி செல்லாண்டியம்மன் கோயிலில் கொடிக் கம்பத்திற்குப் பித்தளைத் தகடு போர்த்தியவர் வணிகவைசிய எல்லப்ப செட்டியார் மனைவி முத்தாயம்மாள் என்பவர்.

## கடத்தூர்த் திருப்பணிகள்

வடக்கிற்பள்ளியான நடுவச்சேரி வேளத்திலிருக்கும்
செங்கண்மால் சொக்கி,
கொடிக்காரைத் தொழு பெருமாள் உரிமையில் இராசி சிறியாள்,
கடத்தூர் செட்டிச்சி பரிவணன் கண்மாய்
ஆகியோர் கடத்தூர் திருமருதுடையார் கோயிலில் திருப்பணிகள் பல செய்துள்ளனர்.

கொங்கு நாட்டுக் கோயில்களில் கணவருடனும், தனியாகவும் பல பெண்கள் உருவச்சிலைகள் உள்ளன. அவர்களும் கோயில் திருப்பணிகள் செய்திருக்கக் கூடும். ஆனால் பெயர் குறிக்காததால் திருப்பணி விபரம் தெரியவில்லை.

✣ ✣ ✣

# 14. கொங்குப் பிராட்டியார்

கருவூர், வெஞ்சமாங்கூடல், பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, அவிநாசி, திருமுருகன்பூண்டி முதலிய ஏழு தேவாரத் திருத்தலங் களையும், பேரூர், கொல்லி, ஏழூர், தோளூர் முதலிய பல வைப்புத் தலங்களையும் பெற்ற கொங்குநாடு சிறந்த வைணவத் தலங்களையும் பெற்றுள்ளது.

வைணவத்தின் 108 திவ்யத் தலங்களில் ஒன்று கொங்கு நாட்டில் அமைந்திருப்பது பலருக்குத் தெரியாது. தாராபுரம் அருகில் உள்ள கொங்கு என்ற கொங்கூரே அச்சிறப்புப் பெற்ற தலமாகும். பெரியாழ்வார் தம் பாசுரம் ஒன்றில்,

''கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் புகுந்து விளையாடும் என்மகள்''

எனக் கூறியுள்ளார். இதனைக் ''கொங்குக் குடந்தை'' எனத் தவறாகப் புரிந்து கொண்டு நீர் பொங்கி வழியும்படியான குடந்தை என்பர். ஆனால் செய்யுளை நோக்க பேரை, கோட்டியூர், குடந்தை போலக் கொங்கும் ஓர் ஊர் என்பது உறுதிப்படுகிறது.

அவ்வூரில் இலட்சுமி என்ற அம்மையார் வாழ்ந்து வந்தார். வைணவ சமயத்தில் மிகச்சிறந்த பக்தியும் ஈடுபாடும் கொண்டவர் இலட்சுமி. ஒரு சமயம் கொங்கு நாட்டில் பஞ்சம் ஏற்படவே கணவருடன் திருவரங்கம் சென்றார். அங்கு இராமானுஜரைக் கண்டு பேரன்பு கொண்டு அவருக்குப் பிச்சையிட்டு உபதேசம் பெற்றார். நாள்தோறும் இராமானுஜரை வணங்கி வந்தார். கொங்குநாடு எங்கும் மழை பொழிந்து வளம் ஏற்பட்டது. இலட்சுமியும் அவர் கணவர் கொங்கி லண்ணனும் கொங்கு நாடு திரும்ப நேரிட்டது. இலட்சுமி இராமானுஜரை வணங்கிப் போற்றி அவரைப் பிரிய மனமில்லாமல், கொங்குநாடு

சென்று தான் பூசை செய்யவும் வழிபடவும் வேண்டி இராமானுஜரின் பாதுகைகளைக் கேட்டார். இராமானுஜர் இலட்சுமிக்குத் தன் பாதுகைகளை வழங்கினார். இலட்சுமி கொங்கு நாட்டுப் பெண் ஆகையால் அவருக்குக் கொங்குப் பிராட்டியார் என்ற பெயர் வழங்கியது. கொங்கூருக்கு இலட்சுமி திரும்பி வந்தார்.

இராமானுஜர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த முதலாம் குலோத்துங்கன் (1070-1119) அவையில் சைவ-வைணவ சமயவாத சபை நடைபெற்றது. அரசன் ஆதரவில் சைவர் வென்றனர். ''சிவமே பரம்பொருள்- வேறு இல்லை'' என்று எழுதிக் கையெழுத்திட வைணவர்கள் வற்புறுத்தப்பட்டனர்.

சமயவாத சபைக்கு இராமானுஜர் வரவேண்டும் என்று அரசன் ஆணையிட்டான். இராமானுஜர் கையெழுத்திடாவிட்டால் அவர் கண்களைப் பிடுங்குவதாகத் திட்டமிட்டிருந்தனர். வைணவத்தை வெறுத்த காரணத்தால் குலோத்துங்க சோழனை ''கிரிமிகண்ட சோழன்'' என வைணவர்கள் அழைத்தனர்.

கூரத்தாழ்வார் இதனைக் கேள்விப்பட்டார். இராமானுஜரிடம் சென்று ''சோழ மன்னன் வஞ்சனையாக அழைக்கின்றான். தேவரீர் சமய சபைக்கு எழுந்தருளுவது நல்லது அல்ல'' என்று கூறினார். ஆனால் அரசன் ஆணையையும் நிறைவேற்ற வேண்டும். அதனால் இராமானுஜரின் உடையணிந்து கூரத்தாழ்வார் சமய சபைக்குச் செல்வதென்றும், கூரத்தாழ்வார் உடையுடன் இராமானுஜர் வெளியேறி விடுவதென்றும் தீர்மானித்தனர். பின் அவ்வாறே பெரியதம்பி முதலானவர்களுடன் கூரத்தாழ்வார் அரசன் சபைக்குச் சென்றார்.

முதலியாண்டான் முதலியவர்களோடு வெள்ளாடையணிந்து இராமானுஜர் கர்நாடக நாடு செல்ல மேற்கு நோக்கிப் பயணமானார். கொங்கு நாடு புகுந்த இராமானுஜரை வேட்டுவர் குலப் பெருமக்கள் வரவேற்று உபசரித்து இராமானுஜர் உணவுண்ண அருகில் கொங்கூரில் இருந்த அக்கிரகாரத்துக்கு அழைத்துச் சென்றனர். அது கொங்குப் பிராட்டியாரின் வீடாகும்.

வைணவர்களைக் கண்ட கொங்குப் பிராட்டியார் பெரிதும் மகிழ்ந்து நான் உடையவரிடம் உபதேசம் பெற்றுள்ளேன். எனவே வைணவ முறைகள் எனக்குத் தெரியும். நான் திருஅமுது செய்து படைக்கின்றேன் என்றார். எங்கு உடையவரை (இராமானுஜரை) சந்தித்தீர் என்று கேட்க திருவரங்கத்தில் என்று கொங்குப் பிராட்டியார் கூறினார்.

நீங்கள் உபதேசம் பெற்றுக் கொண்டவர் இங்கு உள்ளாரா என்று கேட்க வெள்ளை உடையில் இருந்த உடையவரைக் கொங்குப் பிராட்டியார் அடையாளம் கண்டு கொண்டார். அவர் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தன் கணவன் கொங்கிலண்ணனோடு மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டு திருஅமுது படைக்க முற்பட்டாள். சீடர்கள் அனைவரும் உணவுண்டனர். தன் பாதுகைக்குப் படைத்த உணவைத் தான் உண்ணுவது தகாது என்று கூறி உடையவர் பால் மட்டும் சாப்பிட்டார்.

பாதுகைகளை அளித்துச் சரியாக இருந்தது கண்டு இராமானுஜரை அடையாளம் கண்டு வணங்கிய கொங்குப் பிராட்டியார்க்கு இராமானுஜர் உணவு உண்ணாதது பெரிய வருத்தத்தை அளித்தது. வருத்தம் மேலிட இரவில் வெறும் தரையில் படுத்துக் கொண்டார். கணவனிடமும் இராமானுஜர் உணவு கொள்ளாதது கண்டு வருந்திக் கூறினார்.

காலையில் உபதேசம் பெற்றுக் கொண்டால் உணவு உண்ணலாம் என்று இராமானுஜர் கூறவே கணவனும், மனைவியும் காலையில் உபதேசம் பெற்றுக் கொண்டனர். இராமானுஜர் உணவுண்டு சோழ நாட்டிலிருந்து வந்த களைப்புத்தீரச் சில நாள் கொங்கூரில் கொங்குப் பிராட்டியார் இல்லத்தில் தங்கிப் பின் கருநாடக தேசத்தில் உள்ள மேல்கோட்டை என்ற ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

வைணவ இலக்கியங்களில் பல தனியன்களிலும், பிரபந்தங்களிலும் கொங்குப் பிராட்டியாரைப் பற்றிய புகழ் மொழிகள் பல உள்ளன. கொங்குப் பிராட்டியாரின் கணவர் கொங்கிலண்ணன் என்ற

கொங்கிலாச்சன் 74 வைணவ சிங்காசனாதிபதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். கொங்கு நாட்டுக் கொங்கூர் தமிழக வைணவ வரலாற்றில் மிக முக்கியமான இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வரலாற்றைக் கார்மேகக் கவிஞர் தன் கொங்கு மண்டல சதகத்தில் (68)

''சிவனே பரம்பிறிது இல்லை எனாததால்
சிரம்துணிக்க
உவந்தனன் சோழன் எனமறு வேடமாய்
ஓடிவந்து
கவன்றிடு ராமா நுஜன்தனைத் தேற்றியும்
காத்தளித்த
மவனகைக் கொங்குப் பிராட்டிய ரும்கொங்கு
மண்டலமே''

என்று பாடியுள்ளார்.

(வைணவ திவ்ய தேசங்களில் 107 மட்டுமே உள்ளது. 108 ஆவதாக வைகுண்டத்தைக் கூறினர். ஆனால் 108 ஆம் தலம் கொங்கூர் என்பது மேற்கண்ட செய்தியால் உறுதிப்படுகிறது. ''இதுவரை ஒரு கொங்கு வைணவத்தலம் பெருமாள் கோயில் புளியோதரைக்குள் மறைந்து கிடந்தது. இப்போது வெளிப்பட்டுள்ளது'' என்றார் வைண வத்தில் மிகுந்த ஈடுபாடு உடைய கம்பராமன் எஸ்.கே. இராமராசன் அவர்கள்).

✣ ✣ ✣

# 15. இணையற்ற இரட்டைப் புலவர்கள்

இரண்டு புலவர்கள் என்பதற்கும் இரட்டைப் புலவர்கள் என்பதற்கும் வேறுபாடு உண்டு. இரண்டு புலவர்கள் என்றால் தனித் தனியாகக் கவிபாடும் இரண்டு வேறு வேறான புலவர்களைக் குறிக்கும். இரட்டைப் புலவர்கள் என்றால் இரு புலவர்கள் ஒன்றாக இணைந்து கவிபாடு பவராக இருந்ததைக் குறிக்கும்.

இதுவரை இரட்டைப் புலவர்கள் என்றால் சோழ நாட்டில் பிறந்து இணைந்து கவிபாடிய இளஞ்சூரியர், முதுசூரியர் ஆகிய இருவரைத் தான் குறிக்கும். ஒருவர் முடவர், ஒருவர் குருடர். இருவரும் தமிழ் கற்றறிந்த பெரும் புலவர்கள். குருடர் தோள்மீது முடவர் ஏறிக் கொள்வார். முடவர் வழிகாட்டக் குருடர் அவரைச் சுமந்து கொண்டு நடந்து செல்வார். பெரும்பாலும் ஒரே பாடலை ஆளுக்குப் பாதிபாதி பாடுவர். அது பெரும்பாலும் வினா விடையாக இருக்கும்.

ஒருமுறை ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் உள்ள ஈங்கூருக்கு இரட்டைப் புலவர்கள் வந்தனர். ஈங்கூர் அல்லாளீசுவரர் கோயிலில் இருவரும் பசியுடன் தங்கியிருந்தனர். அப்போது உச்சிக் காலப்பூசை நைவேத்திய அமுதுடன் நடந்தது. ''நாங்கள் பசித்திருக்க அல்லாளியப்பா நீ மட்டும் சாப்பிடலாமா?'' என்று இரட்டையர் கேட் டனர். உண்மையில் அர்ச்சகர் அன்று நைவேத்திய அமுது எதுவும் சமைக்காமல் வெறும் தட்டைத் துணியால் மூடிப் பூசை செய்தார். இதையும் இரட்டைப் புலவர்கள் பார்த்து விட்டனர். அதைக் கண்டு வினாவாக முதலில் இளஞ்சூரியர்

''தேங்குபுகழ் ஈங்கூர் சிவனேஅல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ''

என்று பாடினார். உடனே முதுசூரியர் அவ்வினாவிற்கு விடையளிப்பது போல அர்ச்சகர் ஏமாற்று வேலையையும் சுட்டிக்காட்டி, சிவபெருமான் கூறுவதாக,

''போங்காணும், கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்''

என்று முடித்தார். பின் அர்ச்சகர் தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு இருவருக்கும் விருந்தளித்தார்.

கொங்கு நாட்டில் பெண்பாற்புலவர் இருவர் சேர்ந்து பாடி, சேர்ந்து கோயில் திருப்பணி செய்து, சேர்ந்து நாட்டு நிர்வாகம் செய்து உள்ளனர். ஒருவர் தாரமங்கலம் கட்டிமுதலி மனைவி சின்னம் மையார். மற்றவர் தக்கை ராமாயணம் பாடிய எம்பெருமாள் கவிராயர் மனைவி பூங்கோதை. முதலி என்பது முதன்மையானவர் என்பதைக் குறிக்கும் பட்டப் பெயராகும். பலர் ''முதலியாக்கவுண்டர்'' என்று பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். இருப்புலி செல்லகுல உலகப்ப கவுண்டர் விசயநகர மன்னனிடம் ''முதலிக்காமிண்டர்'' என்ற பட்டம் பெற்றதைச் செப்பேடுகள் கூறுகின்றன. எனவே முதலிப் பட்டம் கொங்கு வேளாளருக்கும் உண்டு.

கட்டி முதலி மனைவி சின்னம்மையார் தமிழ் ஐந்திலக்கணம் கற்றுப்பெரும் புலமையுடையவராக விளங்கினார். பூங்கோதை தமிழ்ப் புலமை, கணிதம் ஆகியவற்றில் புலமையுடையவராக விளங்கினார். ''கொங்குநாடு'' என்ற தம்நூலில் பூங்கோதை பற்றிக் குறிப்பிடும் போது ''வித்வமணி, இலக்கிய இலக்கணப் பயிற்சியும் வடமொழிப் பயிற்சியும் அத்வைத உணர்ச்சியும் கொண்டவர்'' என்று தி.அ. முத்து சாமிக் கோனார் எழுதியுள்ளார்.

''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' ''சான்றோர் சான்றோர் பாலர் ஆப'' என்பதற்கேற்ப சின்னம்மையாரும், பூங்கோதையும் நெருங்கிய நண்பர்கள் ஆயினர். இணைபிரியாதிருந்த அவர்கள் இலக்கிய, இலக்கண விவாதங்களில் ஒன்றாக ஈடுபட்டனர். புலவர்களோடு உரையாடுவதிலும், பாடல் புனைவதிலும், நூல் இயற்றுவதிலும் பெரும்பாலும் நேரத்தைக் கழித்தனர். அவர்கள் இருக்கும் இடம் தமிழ்ச்சங்கம் போலவே விளங்கியது.

ஆழ்ந்த சமய நம்பிக்கை கொண்ட அவர்கள் இருவரும் ''திருச்செங்கோட்டுக்குறவஞ்சி'' என்ற நூலை இயற்றினர். இருவரும்

அத்வைதக் கொள்கையில் ஈடுபாடு உடையவர்களாக விளங்கினர். அத்வைதம் என்பது பரமாத்மாவும், சீவாத்மாவும் ஒன்று (இறைவனும் உயிரும்) என்ற கொள்கையுடையது. துவைதம் என்பது பரமாத்மா வேறு, சீவாத்மா வேறு என்ற கொள்கையாகும். இருவரும் அத்வைதக் கொள்கைகளை விளக்கி ''கண்ணொளி கதிரொளி'' என்ற அரிய நூலை இயற்றினர். இந்த நூல்பற்றி தி.அ. முத்துசாமிக்கோனார் தம் ''கொங்குநாடு'' என்ற நூலில் குறித்துள்ளார்.

ஒருமுறை சங்ககிரியில் இருந்த எம்பெருமாள் கவிஞர் வீட்டுக்குச் சில புலவர்கள் அவரைப் பார்ப்பதற்காக வந்தனர். அப்போது கவிஞர் வீட்டில் இல்லை. பூங்கோதை புலவர்களை வரவேற்று உபசரித்துத் தங்க வைத்துப் பின் வீட்டின் உள்ளே இருந்தார். அன்று சின்னம்மை யாரும் அங்கிருந்தார். வெளியே அமர்ந்திருந்த புலவர்கள் தங்க ளுக்குள் பேசிக்கொண்டு இருந்தனர். ஒருவர் மிக இகழ்ச்சியாகப் பெண்களைப் பற்றி

''நுண்ணறி வாளர் நூலொடு பழகினும்
பெண்ணறிவு என்பது பெரும் பேதமைத்தே''

என்றார். அனைவரும் ஆம், ஆம் என்று ஆமோதித்து ''பெண்புத்தி பின்புத்திதான்'' என்றனர். பெண்களைக் கேலி செய்து மகிழ்ந்தனர்.

இந்த உரையாடலை உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்த சின்னம்மையாரும், பூங்கோதையும் கலந்து பேசி யோசித்து அவர் களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று உடனே அவர்கள் இருவரும்,

''அறிவில் இளைஞரே ஆண்மக்கள்; மாதர்
அறிவில் முதியவரே ஆவர் - அரிவையரோ
தாம்கொண்ட சூலறிவர்; தந்தையர் ஆண்மக்கள்
தாம்கொண்ட சூலறியா தார்''

என்ற பாடலை ஒரு ஓலையில் எழுதி ஒரு சிறுமி மூலம் கொடுத்து அனுப்பினர். புலவர்கள் ஓலையில் கண்ட பாடலைப் பார்த்துத் திகைத்தனர். அப்போது வந்து சேர்ந்த எம்பெருமாள் செய்தியறிந்து புலவர்களை இகழலாமா என்று பூங்கோதையைக் கேட்டார். பூங்கோதை

பெண் வயிற்றில் உதித்திடும் கரு இரண்டுமாதம் ஆணிடம் இருக்கிறது என்ற உபநிஷத் கருத்தை விளக்கிப் பெண்கள் போலத் தாம் கருத் தரிப்பதை ஆண்கள் உணர்வதில்லையே. அதனால்தான் இவ்வாறு பாடினோம் என்றார். புலவர்கள் பெண்களை இகழ்ந்ததையும் கூறினார். பின் புலவர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

பவானி கொங்கேழு தலங்களில் ஒன்று. பவானி இறைவன் பெயர் நண்ணாவுடையார்; அம்மன் பெயர் பண்ணார்மொழியம்மை (இப்போது சங்கமேசுவரர், வேதநாயகி என வழங்கப் பெறுகின்றனர்) என்பதாகும். அம்மன் கோயிலில் கருவறைக்கு முன் உள்ள அர்த்த மண்டபம் மிகவும் சிதைந்திருந்தது. சின்னம்மையார் அதனைத் திருப்பணி செய்ய முன்வந்தார். இணைபிரியாத பூங்கோதையும் திருப்பணியில் இணைந்து கொண்டார். ''பார்த்திப வருடம் குருவ ஆசாரி மகன் நாராயண ஆசாரி மூலம்'' அத்திருப்பணியைத் தார மங்கலம் கட்டிமுதலி மனைவியார் சின்னம்மையார் கட்டியதாக அர்த்த மண்டப விதானத்தில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபச் சுவரில் ''பூங்கோதை சதா சேர்வை'' என்ற கல்வெட்டும் உள்ளது. இருவரும் ஆலயத் திருப்பணியை ஒன்றாகச் செய்தனர் என்பதை இக்கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. இன்றும் இக்கல்வெட்டுக்கள் அங்கு உள்ளன.

கொங்கு 24 நாடுகளில் வடகரை நாடு என்பதும் ஒன்று. வடகரை நாடு இன்றைய பவானி வட்டத்தில் பவானியாற்றின் வடபகுதியை உள்ளடக்கியது. அந்நாட்டுக்கு அந்தியூர் தலைநகர். நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டு கட்டிமுதலி நிர்வாகத்தில் வடகரை நாடு இருந்தது. மைசூர் அரசர்களின் படையெடுப்புக் காரணமாக வடகரை நாட்டில் குழப்பம் ஏற்பட்டு வரிவசூல் சரியாக நடைபெற வில்லை. கட்டிமுதலியின் அமைச்சர் பெருமாள் தீட்சிதரை அழைத்துக் கொண்டு சின்னம்மையாரும், பூங்கோதையும் அந்தியூரில் முகாமிட்ட னர். கட்டிமுதலி அவர்கட்கு எல்லாவகையான அதிகாரத்தையும் வழங்கியிருந்தார்.

கணிதத்தில் தேர்ச்சி பெற்றிருந்த பூங்கோதை ''நாட்டுக்கணக்கர்'' என்ற பதவியை ஏற்றுக் கொண்டு கிராமந்தோறும் சென்று நிலமையைச் சரி செய்தார். எல்லாம் சரியாகி வரி வசூல் முன்பைக் கட்டிலும் அதிகமாக ஆனது. தூக்கநாயக்கன்பாளையம் பால்காரர் வீட்டில் கிடைத்த மயிலம்பாடிச் செப்பேட்டில் ''வடகரை நாட்டுக் கரணிக்கம் பூங்கோதை'' என்று பொறிக்கப்பட்டுள்ளது. அச்செப்பேடு தாரமங்கலம் கட்டிமுதலி ஆட்சிக்காலச் செப்பேடு ஆகும். கி.பி.17ஆம் நூற்றாண்டில் ஒரு பெண் நாட்டுக்கணக்கர் பதவியில் அமர்ந்து பணியாற்றியது மிகவும் அரிய செய்தியாகும். கொங்குநாடு பெருமைப் படக்கூடிய செய்தியாகும்.

தாரமங்கலம் கட்டிமுதலி ஒருமுறை பவானி சிவாலயம் முழுவதையும் திருப்பணி செய்தார். பல ஆண்டுகள் பல சிற்பிகள் பணிபுரிந்தனர். திருப்பணி முடிந்து எல்லோருடைய வேண்டுகோள் படி அங்கு கட்டிமுதலி, சின்னம்மையார் ஆகியோர் உருவச்சிலைகள் நின்று இறைவனை வணங்கும் வண்ணம் அமைக்கப்பட்டது. அதில் அவர்கள் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கட்டிமுதலி சிலையில் அவருடைய தலைக்கு மேலாக ''வணங்காமுடிக்கட்டி'' என்ற பெயர் எழுதப்பட்டு உள்ளது. ஆனால் சின்னம்மை என்ற பெயரோ அவருடைய கால்களுக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது. தன் கணவன் பெயருக்கு இணையாகத் தன் பெயர் பொறிக்கக்கூடாது என்று சின்னம்மையார் விரும்பியிருக்கக் கூடும். இப்போது காரைபூசி சின்னம்மையார் பெயரை மறைத்து விட்டனர். பூங்கோதை பற்றிய செய்தி கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகத்தில் கூறப்பட்டுள்ளது. (எண்-65)

✣ ✣ ✣

# 16. பொங்கலூர் புகழ்மிகு பெண்கள்

கொங்கு 24 நாடுகளில் பொங்கலூர்நாடு என்பதும் ஒன்று. அந்நாட்டுப்பகுதியில் பொன்னும், மணிக்கற்களும் மிகுதியாகக் கிடைக்கின்ற காரணத்தால் ''பொன்கல்லூர்'' என்பதே பொங்கலூர் ஆயிற்று என்பர். ஆனால் புராண ஐதீகப்படி அதற்கு வேறு ஒரு காரணமும் கூறுவர். பெண்கள் பலர் பொங்கலூர் நீலகண்டியம்மனுக்குப் பொங்கல் வைக்கும்போது மழை வந்துவிட்டது. பொங்கல் பொங்காமல் எல்லோரும் மழைக்கு ஒதுங்கி மீண்டும் வந்து பார்க்கும் போது எல்லோருடைய பொங்கலும் நன்கு பொங்கிச் சமைந்து இருந்தது. அதனால் ''பொங்காமலே பொங்கல் பொங்கிய ஊர் என்பதால்'' பொங்கலூர் ஆயிற்று என்பர்.

பொங்கலூர் நாட்டுப் பகுதியில் வேளாளர்கட்குத் தொல்லை கொடுத்து வந்த பகைவர்களை அடக்க சோழனால் அனுப்பப்பட்ட ஓதாளகுலப் பெரிய பெருமாள் வெற்றியெய்திக் கொடுவாய் நகரில் தலைவராக வீற்றிருந்து அதிகாரம் செலுத்தினார். பெரிய பெருமாள் காரையூர்ப் பயிரகுலப் பட்டக்காரர் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மகள் வள்ளியம்மாளைத் திருமணம் செய்து கொண்டு சிறப்புடன் வாழ்ந்தார். இம்மரபினர் கொடுவாய் ஓதாளர் எனப்படுவர்.

பெரிய பெருமாளுக்கு இரு தம்பியர். அவர்களில் தாயாண்டான் பெருந்தொழுவிலும், ஆண்டாண்டான் குண்டடத்திலும் தங்கி நிர்வாகம் செய்தனர். அவர்கள் முறையே தாயாண்டான் காடையூர்ப் பொருளந்தை முழுக்காதுகுலப் பட்டக்காரர் காங்கேயர் மகள் முத்துத் தங்கம்மாளையும், ஆண்டாண்டான் உகாயனூர்ச் சாத்தந்தை குல நல்லையன் மகள் செல்லம்மாளையும் திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் வழியினரைப் பெருந்தொழு ஓதாளர் என்பர்.

கொடுவாய் ஓதாள குலப் பெரியபெருமாளுக்கு நான்கு மக்கள். அவர்கள் குமாரசாமி, உடையப்பன், அவிநாசிவேள், உத்தமபூபதி என்போர். அவர்கள் நால்வரும் கொடுவாய்ப் பகுதியில் உள்ள அவிநாசிபாளையம், கண்டியன்கோயில், நிழலி, காட்டூர் ஆகிய ஊர்களில் தங்கி அப்பகுதியில் அதிகாரம் செய்தனர்.

அவர்களில் குமாரசாமி குழாயர் குலத்தைச் சேர்ந்த புத்தரச்சல் அவிநாசிவேள் மகள் உத்தமியையும், உடையப்பன் காரையூர்ப் பயிரகுலப் பட்டக்காரர் நல்லசேனாதிபதிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் மகள் தெய்வானையம்மாளையும், அவிநாசிவேள் உகாயனூர்ச் சாத்தந்தைகுல நல்லையன் பேத்தி முத்து வேலம்மாளையும், உத்தமபூபதி பொங்கலூர்ப் பொன்னகுல தங்கமுத்துடையான் மகள் அம்மணியையும் மணந்து கொண்டு சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். இந்நால்வர் கால்வழியினரும் கொடுவாய் ஓதாளர் என அழைக்கப் படுவர்.

இந்த விபரம் அனைத்தும் கி.பி. 1763ல் அலகுமலைக் குற வஞ்சி என்னும் இலக்கியத்தைப் பாடிய பொங்கலூர் நாட்டுப் பரம் பரைப் புலவர்களில் சேரகுல வழிவந்த பிரமயணப் புலவர் மகன் சின்னத்தம்பி நாவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந் நூலை 1969ஆம் ஆண்டு ஓலைச்சுவடியில் இருந்து பெயர்த் தெழுதி அச்சிட்டவர் சங்கரண்டாம்பாளையம் ஆதீனப் புலவரான கருந்தும்பிப் புலவர் மகன் க. பழனிசாமிப் புலவர் ஆவார்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஓதாளர் குலக் குடும்பம் ஒன்று ஆறு கிளைகளாகக் கொடுவாயிலிருந்து பெருகி பெருந்தொழு, குண்டடம், அவிநாசிபாளையம், கண்டியன்கோயில், நிழலி, காட்டூர் ஆகிய ஊர்களில் குடியேறிய வரலாற்றை விளக்கமாகக் கூறுகிறார் புலவர். ஓதாளகுல வரலாற்றிற்கும், கொங்கு வேளாளர் மக்கள் குடியேற்றத்திற்கும் சிறந்த வரலாற்றுச் செய்தியாகவும் இது திகழ்கிறது.

அலகுமலைக் குறவஞ்சி பாடிய சின்னத்தம்பி நாவலர் இவ் வரலாற்றுச் செய்திகளை மட்டும் அல்ல; மேற்கூறிய ஏழு பெண்களும்

கொடைவள்ளலாகவும் திகழ்ந்தனர் என்பதையும் தெளிவாகக் கூறுகிறார். குறவஞ்சியில் படைத்துக் கூறப்படும் குறவன், குறத்தி பாத்திரங்கள் கற்பனையானவை. நூல் இறுதிப் பகுதியில் குறவன் கேட்ட கேள்விகளுக்குக் குறத்தி பதில் சொல்வதாக வரும் பகுதியில் மேற்கண்ட ஏழு பெண்களின் கொடைச் சிறப்பைக் குறத்தி வாயிலாகச் சின்னத்தம்பி நாவலர் வெளிப்படுத்துகிறார்.

1) சந்திரமதி நேர் பெரியபெருமாள் மனைவி
வள்ளித் தாயார் தந்த செம்பொன் ஓலை
2) சாந்தமுடன் தாயாண்ட மன்னன் மனையாள்
முத்துத் தங்கம்மை தந்த கண்டசரம்
3) அன்றவன் ஆண்டாண்டான் மனைவி
செல்லம்மை தந்த அழகான நித்திலச்சுட்டி
4) யோக்கியன் குமாரசாமி மனைவி உத்தமி
தந்த உயர்ந்த கெண்டைச் சேலை
5) இங்கித நல்லுடையப்பன் மனைவி
தெய்வானை யம்மாள் தந்த தரளவடம்
6) வித்தகன் அவிநாசியப்பன் மனைவி முத்து
வேலம்மை தந்த காசுமாலை
7) நின்னய உத்தமவேள் மனைவி அம்மணி
தந்த நெற்றித் திலகச்சுட்டி

என்பன அப்பெண்களின் கொடை பற்றிய பாடல் பகுதியில் காணப்படும் பெயர்களும் அவர்கள் கொடுத்த கொடையும் ஆகும்.

இந்த ஏழு பெண்களும் ஓதாள குலத்தலைவர்கட்கு வாழ்க்கைப் பட்ட பயிரன், குழாயன், சாத்தந்தை, பொருளந்தை, பொன்னர்குலம் சார்ந்தவர்கள் ஆவர். பிறந்த வீட்டுப் பெருமையைப் புகுந்த வீடுகளிலும் நிலைநிறுத்திக் கொடை தந்து, இலக்கியத்திலும் இடம் பெற்ற இப்பொங்கலூர் நாட்டுப் பெண்கள் இக்காலக் கொங்கு வேளாண் பெண்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றனர்.

✣ ✣ ✣

# 17.தெய்வமாக மாறிய தேனாயி

கொங்கு வாழவந்தி நாட்டில் 'குமரிபாளையம்' என்ற ஊர் ஒன்று உள்ளது. கொங்கு வேளாளர்களில் 'மணியன் குலத்தார்' அங்கு பெருவாரியாக வாழ்ந்தார்கள். விவசாயம் செய்து வந்த அவர்கள் கால்நடைகளை அதிகமாக வளர்த்து வந்தனர். பால்வளம் அவ்வூரில் மிகவும் சிறப்பாக இருந்தது. பால்பொருட்களை அவர்கள் தங்களுக்குப் போக மற்ற அண்டை ஊர்க்காரர்கட்கு விற்று வந்தனர்.

மணியகுல வேளாண் செல்வர் ஒருவருக்கு 'தேனாயி' என்ற பெண் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அதிகாலை எழுந்து நீராடி இறைவனை வணங்கியே வீட்டு வேலைகளை மேற்கொள்வாள். கணவனோடு விவசாய வேலைகளையும் தோட்டத்தில் கவனித்த அவள் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளை பக்கத்து ஊருக்குச் சென்று விற்று வந்தாள். அதனால் செல்வம் சேர்ந்தது. இருப்பினும் தேனாயி தம்பதிகட்கு மக்கட்செல்வம் வாய்க்கவில்லை. அவளுக்கு அது பெரும் குறையாக இருந்தது. அதற்காக நாள்தோறும் இறைவனை வேண்டித் தொழுதாள்.

தேனாயி தயிர் விற்கச் செல்லும் வழி ஒரு காட்டு வழி. வில்வ மரங்கள் மிகுதியான ஓரிடம் அக்காட்டில் இருந்தது. ஒருநாள் பக்கத்து ஊர் சென்று தயிர் விற்றுத் தேனாயி திரும்பிக் கொண்டிருந்தாள். மக்கட் செல்வம் இல்லாத குறையால் இறைவனை நினைந்து நடந்து வந்து கொண்டிருந்தாள். வில்வமரக் காட்டைக் கடந்து வந்து கொண் டிருந்தாள். பொழுதாயிற்று என்று வேகமாக நடந்தாள். அப்போது பின்னாலிருந்து 'எனக்கு ஒரு விளக்கு வை' என்ற குரல் ஒலித்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து பின்னர் மீண்டும் வீட்டை நோக்கி நடக்க முற்பட்டாள். மீண்டும், மீண்டும் அதே குரல் ஒலித்தது.

ஆச்சரியத்துடன் குரல் வந்த திசை சென்று பார்த்தாள். ஒரு வில்வ மரத்தின் அடியில் அழகான சிறு சிவலிங்கம் ஒன்று இருந்தது. அதைக் கண்டு பக்திப் பரவசத்தால் விரைந்து வீடு சென்று வந்து விளக்கேற்றி வழிபட்டாள். நாள்தோறும் அவ்வாறே செய்தாள். தயிர் விற்கச் செல்லாத நாட்களில் கூட வில்வக்காடு சென்று சிவலிங்கத்திற்கு விளக்கேற்றினாள். இப்பணி தொடர்ந்து பல மாதங்கள் நடைபெற்றது. இந்நிலையில் தேனாயி கருவுற்றாள். பல ஆண்டுகள் கருவுறாத தேனாயி கருவுற்ற செய்தி கேட்ட சிலர் அவன் வில்வக்காடு சென்று அங்கு யாரோ ஒருவரைக் கூடிய காரணத்தால்தான் கருவுற்றாள் என்று தவறாகப் பேசத் தொடங்கினர். அவள் கணவனும் அதை நம்பி விட்டான்.

ஒருநாள் தேனாயி வில்வக்காட்டிற்கு சிவலிங்கத்திற்கு விளக்கு வைக்கச் செல்லுகையில் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து சென்று கவனித்தனர். வழக்கம் போல் தேனாயி விளக்கேற்றிச் சிவலிங்கத்தை வழிபட்டாள். மறைந்திருந்து பார்த்தவர்கள் ஐயம் நீங்கினர்.

அப்போது பெரும் காற்று வீசியது. மரம், செடி, கொடிகள் அசைந்தன. ஆனால் தேனாயி ஏற்றிய விளக்கு எவ்விதத் தடுப்பும் இன்றி வெட்டவெளியில் இருந்தாலும் சிறிது கூட ஆடாமல் அசையாமல் எரிந்தது. எல்லோருக்கும் மிக ஆச்சரியம் ஏற்பட்டது. தேனாயியை பக்தியோடு பார்க்கத் தொடங்கினர். தேனாயிக்கு ஆண் குழந்தை பிறந்தது. வில்வக்காட்டுச் சிவலிங்கத்தின் அருளே காரணம் என சிவலிங்கத்திற்குக் கோயில் கட்டினர். தேனாயி ஆகிய குமரி வழிபட்டதால் 'குமரீச்சுரம்' என்று கோயிலுக்குப் பெயரிட்டனர். காற்றில் அசையாமல் விளக்கு எரிந்ததால் 'அசையா விளக்கர்' என்றும் சிவனுக்குப் பெயரிட்டனர். பின் வந்த அர்ச்சகர்கள் அதற்கு 'அசல தீபேசுவரர்' என்று வடமொழிப் பெயரிட்டனர்.

பின் அம்மன் சன்னதியும் கட்டப்பட்டது. அம்மன் பெயரை 'குமரியம்மன்' என்றும் 'தேனாயி அம்மன்' என்றும் அழைத்தனர். அப்பகுதி மணிய குலத்தார் அனைவருக்கும் அது வழிபடு தெய்வம்

ஆயிற்று. மிகவும் தொன்மையான அக்கோயிலை 'கொங்குக் குமரி' என்றும், 'கொங்கு தென்குமரித்துறை'' என்றும் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் வைப்புத்தலமாகப் பாடியுள்ளார். இக்கோயிலிலிருந்து அபிடேகம் செய்த பால் பெருகி அருகில் காவிரியில் கலக்கும் இடத்திற்கும் 'குமரித்துறை' என்று பெயராயிற்று.

இந்நிகழ்ச்சி வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகத்திலும் இடம்பெற்று விட்டது.

''நந்தூர் நெடுவயல் சூழ முகவை நகர்தனிலே
இந்தூர் சடையான் நசையால் விளக்குஒன்று ஏற்றுதற்கு
சந்தோச மாய்ஒரு பாவனை கொண்டு தயிருவிற்க
வந்தோர் குமரி அருச்சித்த தும்கொங்கு மண்டலமே''

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.

தேனாயிக்கு மகவு (குழந்தை) கொடுத்த காரணத்தால் மகவனூர் எனப் பெயர் ஏற்பட்டு அது 'மோகனூர்' ஆக மாறியது என்றும் கூறுவர்.

பவ வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் (கி.பி. 1634) விசய நகர அரசர் ஆனைகுந்தி வெங்கடராயரின் ஆட்சிப் பிரதிநிதியாகச் சேந்தமங்கலம் இம்மடி ராமச்சந்திர நாயக்கர் இப்பகுதியை ஆட்சி செய்யும் போது வாழவந்தி வேளாளரில் மணியகுலத்தைச் சேர்ந்த பொன்னம்பலக் கவுண்டன் மகன் கறுப்பகவுண்டன் மகள் கங்காத்தாள் இக்குமரீசுவரர் கோயிலில் இறைவனுக்கு மார்கழித் திருமஞ்சனம் அபிடேகம் செய்யக் கொடை கொடுத்ததாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. ஆரித கோத்திரம் சேர்ந்த சிவபிராமணர் அக் கொடையைப் பெற்று அபிடேகம் செய்து வந்துள்ளார்.

பல நூறு ஆண்டுகட்கு முன்பு தேனாயி அம்மன் தெய்வமாக வணங்கப்பட்ட கொங்கு வேளாளர்குலமகள் தேனாயி இன்றும் தன்னை வழிபடுவார்க்கு இன்னருள் சுரந்து அருள்பாலித்து வருகிறாள்.

✣ ✣ ✣

# 18. மலர்ந்தும் மணம்வீசா மலர்கள்

''பழி ஒரிடம் பாவம் ஒரிடம்'' என்பது முதுமொழி. அதற்கேற்ப யாரோ செய்த தவறுக்காக யாரோ பழிவாங்குவேன் என்று சபதம் செய்ய ஏதும் அறியா இரண்டு இளம்பிஞ்சுகள் வாழ்நாள் எல்லாம் வன்சிறையில் வாடி செய்யாத குற்றத்திற்குக் காரணம் இல்லாமல் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்ட வரலாறு பொன்னர் - சங்கர் வாழ்வில் நிகழ்ந்துள்ளது.

மணியங்குறிச்சி மலைக்கொழுந்தாக்கவுண்டர் குன்றுடையானின் தாய் மாமா. மலைக்கொழுந்தாக் கவுண்டர் மகள் தாமரை நாச்சியாரை குன்றுடையானின் பங்காளிகள் பெண்கேட்டுத் திருமணம் செய்ய முயற்சிக்கும்போது குன்றுடையான் தாயார் பவளாத்தாக் கவுண்டச்சி விருப்பப்படி சோளன்தோட்டி முயற்சியிலும், மாயன் பெருமாள் அருளாலும் தந்தை மலைக்கொழுந்தாக் கவுண்டரின் விருப்பத்திற்கு மாறாக குன்றுடையான் - தாமரைநாச்சியார் திருமணம் நடைபெறுகிறது.

திருமணம் முடியும் தருவாயில் குன்றுடையான் - தாமரை நாச்சி மணமக்களை ஒரு மாடு, ஒரு சொம்பு, சிறிது அரிசி கொடுத்து வீட்டை விட்டுத் துரத்தி விடுகிறார் மலைக்கொழுந்தாக்கவுண்டர். அப்போது தாமரை நாச்சியார் தன் தந்தையை நோக்கி ''என்னை அவமதித்து விட்டீர். அதற்குப் பழியாக என் வயிற்றில் பிறக்கும் இரண்டு மக்கள் உன் பேத்தி இருவரை மணந்து வாழ்நாள் முழுவதும் சிறை வைப்பர். இது என் சபதம்'' என்று கூறினாள்.

''வாருமப்பா என்தகப்பா வார்த்தைசொல்லக் கேளுமினி
என்னை அவமதித்தாய் ஏளனமும் செய்துவிட்டாய்
உன்னைப் பழிவாங்க உத்தமியாள் திட்டமிட்டேன்

என் வயிற்றில் சிங்கம்போல் இருமகன்கள் தாம்பிறப்பர்
பேத்தியார் இருவரையும் பெருங்குடியான் மக்களுமே
கண்டு சிறை போடாமல் கொண்டு சிறை போட்டிடுவர்
சபதமப்பா என் சபதம்''

என்பது தாமரைநாச்சியார் கூறிய சபதம்.

தக்கவயது வந்ததும் பொன்னரும் சங்கரும் தாயார் வேண்டிக் கொண்டபடி மணியங்குறிச்சி மலைக்கொழுந்தாக் கவுண்டர் வீட்டுக்கு அவர் பேத்தியைப் பெண் கேட்க வந்தனர்.

மகள் சபதத்தை அறிந்திருந்த மலைக்கொழுந்தாக் கவுண்டர் அதைப் பொருட்படுத்தாமல் தன் பேத்தியர் முத்தாயி, பவளாயி இருவரையும் பொன்னர் சங்கருக்குத் திருமணம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டார்.

முத்தாயி - பொன்னருக்குப் பதினொரு பொருத்தமும், பவளாயி - சங்கருக்கு ஒன்பது பொருத்தமும் இருப்பதாகச் சோதிடர் கணித்துக் கூறினர். பஞ்சாங்க வேதியர், பார்ப்பார் சாஸ்திரம் பார்த்து ''கங்கணப் பொருத்தம் கணப் பொருத்தம் நல்லது'' என்று கூறினார்.

''வேதப் பிராமணர்கள் வேதங்கள் ஓதிநிற்க
மந்திர வேதங்கள் மறையவர்கள் ஓதிநிற்க
மங்கிலியம் வேதியனார் வெத்திலை பாக்குவைத்து
தொண்ணூறு பிராமணர்கள் தொட்டு நமஸ்கரித்து
ஆயிரம் பிராமணர்கள் அள்ளி மணமுமிட
நூறு பிராமணர்கள் அருமை மணமுமிட''

பங்குனி மாதம் பதினைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை விசயதசமி நல்ல சுபமுகூர்த்தத்திலே திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

அப்போது முத்தாயி பவளாயிக்கு 5 வயது. ஏதும் அறியா விளையாட்டுப் பருவம்.

''ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே
சித்தாடை கொய்துடுத்தி சின்னமுச்சி கொண்டேதான்
மண்சோறு மரக்கறிகள் பெண்கள் ஆக்கி''

விளையாடும் சின்னஞ்சிறு பெண்களை மாமன் மடியில் அமர்த்தித் திருமணம் செய்து கொடுத்தனர்.

ஆனால், வேதப் பிராமணர் சோதிடம் பார்த்து, பொருத்தம் கண்டு, சுபமுகூர்த்த நேரத்தில் அந்தணர்கள் ஆசி கூறி நடத்திய திருமணம் என்னவாயிற்று? தாயார் செய்த சபதத்தை இளம் வயதிலிருந்தே கேட்டுக் கேட்டு உள்ளத்தில் பதிய வைத்த பொன்னரும் சங்கரும் தாயார் சபதத்தை நிறைவேற்றுமுகமாகத் திருமணம் ஆகித் தங்கள் வீடு சென்றவுடன் ''முத்தாயி, பவளாயி இருவரையும் தனிச் சிறையில்'' வைத்து விட்டனர். ஆம். அவர்கள் வாழ்நாள் இறுதிவரை அத்தனிச் சிறையில்தான் இருந்தனர். இல்லறம் நல்லறமாக நடைபெறவில்லை.

அண்ணன்மார் சுவாமி கதையில் முத்தாயி, பவளாயி இருவரின் முகத்தைக் கூடப் பொன்னரும் சங்கரும் பார்க்கவில்லை என்று கூறப்படுகிறது. அவர்கட்கு நல்ல குடும்பப் பெண்கள் அணிய விரும்பும் நல்ல ஆடை, அணிகலன்கன் கூடக் கொடுக்கப்படவில்லை. அவர்களே,

''பூண்ட பனுதியில்லை பொற்பனுதி நல்லதில்லை
உடுத்தின துகில்களிலே ஒரு துகிலும் நல்லதில்லை''

என்று கூறுகின்றனர்.

திருமணத்தின்போது மணமகனும், மணமகளும் விரல்கள் கோர்த்து மணமேடையில் வலம் வருவர். பொன்னரும், சங்கரும் தங்கள் விரல்களைக் கோர்க்காமல் ''பொன்விரல் மூலம்'' கைகோர்த்ததாகக் கூறப்படுகிறது. முத்தாயி, பவளாயியைப் பொன்னரும், சங்கரும் தொடக்கூட இல்லை என்று கூறப்படுகிறது.

பொன்னர் சங்கருக்கு இறுதிக்காலம் வருவதைத் தன் கனவால் உணர்ந்து பொன்னர் - சங்கர் இருக்கும் இடத்திற்கு வருமாறு அண்ணியர் இருவரையும் அருக்காணித் தங்கம் அழைக்கிறாள். முத்தாயி, பவளாயி இருவரும்,

''தாலிகட்டும் தோஷமுண்டு
தவிக்கவிட்டார் எங்களையும்

மாடத்தைக் கட்டி வைத்து உங்கள் அண்ணர்
மயிலைச் சிறையில் வைத்தார்
கூடத்துப் பொன் கூண்டில் உங்களண்ணர்
குயிலைச் சிறையில் வைத்தார்''

என்றும்,

''இங்கே இருக்கையிலே நாங்கள் இச்சிறையை நோக்கினமே
அங்கேயும் நாங்கள் வந்து அருஞ்சிறையை நோக்கணுமா
இருந்த மனையை விட்டுத் தாயே உன்பிறகே வாரதில்லை
வாழ்ந்த மனையை விட்டு வாரதில்லை உன்பிறகே''

என்றும் கூறி வீட்டுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொள்கின்றனர்.

மணவாழ்க்கையில் இணைந்து வாழாவிட்டாலும் பொன்னர், சங்கர் வீரத்தை உணர்ந்த மனைவிமார் யாராலும் தங்கள் கணவன் மார்களுக்கு இறுதி வராது என்று நம்புகின்றனர். தங்கை அண்ணன் மார்கட்குத் தீங்கு வந்துவிட்டது என்று கூறும் போது அவர்கள் இருவரும் தங்கை கண்ட கனா தவறு என்று கூறி,

''மலைக்கு மருந்துமுண்டோ மன்னவர்க்குத் தீங்குமுண்டோ
வெந்நீர் கொதிப்பதனால் வீடுவெந்து போய்விடுமோ
தவளை குதிப்பதனால் தண்ணீர் கலங்கிடுமோ
வேங்கைக்கு முன்னே வெள்ளாடு எதிர்ப்பதுண்டோ
சிங்கத்தின் முன்னே சிறுமான் எதிர்ப்பதுண்டோ
என்ன இருக்க உத்தமி என்னகனாக் கண்டு சொன்னாய்
வேடுபடை சங்கரித்து உங்கள்அண்ணர் வெட்டிவந்தேன்
என்று சொல்லி
சங்கரித்து வந்தவையெலாம் உன்னுடனே சவுகரியங்கள்
பேசுவார்கள்
வெட்டிவந்தேன் என்று உன்னுடனே வீரியங்கள் பேசுவார்கள்''

என்று மறுமொழி கூறுகின்றனர். இங்கு கொங்குப் பெண்களின் குணநலத்தைக் காணுகிறோம்.

வீட்டுக்குள்ளே தாளிட்டுக் கொண்ட முத்தாயி, பவளாயி திறக்க மறுத்து,

''அக்கினிக்குப் பூசை செய்து - எங்களை
அனுப்பிவைத்து நீர் போகும்
கனலுக்குப் பூசை செய்து - எங்களைக்
கடத்திவிட்டு நீர் போகும்.''

என்று கூறித் தாங்கள் இருந்த அரண்மனைக்குத் தீ வைத்து அவர்களைச் சாகடிக்குமாறு கூறினர். கண்ணகியின் கொங்கைத் தீ மதுரையை எரித்தது போல் அருக்காணித் தங்கத்தின் கண்ணீர்த் தீ மூண்டெழுந்து அரண்மனையை எரித்தது. மலர்ந்தும் மணம் வீசாத மலர்களாக முத்தாயி பவளாயி நெருப்பில் வெந்து தணிந்தனர். நிகழ்ச்சியைக் கேட்பவர்க்கும், கதையைப் படிப்போர்க்கும் முத்தாயி, பவளாயி மீது சினம் ஏற்படாமல் இரக்கமே ஏற்படுகிறது.

❖ ❖ ❖

# 19. கொங்குவேளிர் பணிப்பெண்

கொங்கு நாட்டில் மிகப்பெரிய சமணக் கோயிலைப் பெற்றிருப்பதும், வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுக்களை அதிகம் பெற்றிருப்பதும், தமிழ் நூல்கள் பலவற்றைத் தந்ததும், குறுப்பு நாட்டின் தலை நகராக விளங்குவதும் விசயமங்கலம் ஆகும். சங்க காலத்தில் ''வாகை'' என்ற பெயருடைய அவ்வூர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் விசாக முனிவர் தலைமையில் வந்த சமணர்கள் இங்கு பெற்ற வெற்றியின் காரணமாக 'விசயமங்கலம்' எனப் பெயர் பெற்றது.

'செந்தமிழ் மங்கை, என்று புலவர்களால் புகழப்பட்ட விசய மங்கலம் தமிழ்ச்சங்கம் ஒன்றைப் பெற்றிருந்தது. சீவக சிந்தாமணி அரங்கேற்றப் பட்டதும், நேமிநாதம், வச்சணந்திமாலை, நன்னூல் முதலிய இலக்கண நூல்களைத் தந்ததும், சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லாரும், நன்னூலுக்கு முதல் உரை எழுதிய பதுமனார் நடமாடியதும், கொங்கு நாட்டு வரலாற்றுக்கு அடிப்படை யாக விளங்குவதும், மிகச்சிறந்த இலக்கியமாகத் திகழ்வதுமான கொங்கு மண்டல சதகத்தை இயற்றிய கார்மேகக் கவிஞர் என்று புகழப்பட்ட ஜினேந்திரன் வாழ்ந்ததும் இந்த விசயமங்கலம் தான்.

பஞ்ச பாண்டவர்களில் ஒருவராகிய அருச்சுணன் வனவாசம் முடிந்து ஒரு வருடம் தலைமறைவாக (அஞ்ஞாதவாசம்) வாழச் செல்லும் போது தன் காண்டீப வில்லை விசயமங்கலம் விசயா புரியம்மன் கோயிலுக்கு வந்து அம்மனிடம் அடைக்கலம் வைத்துச் சென்றான் என்று கொங்குமண்டலச் சதகம் கூறுகிறது.

''துளைமணி ரத்ன மகுடா சலத்தைவர் சூதில் நொந்தே
கிளையினை நீங்கி வனவாசம் செல்கையில் கீர்த்திபெற்ற

விளைவயல் சூழ்மங்கைப் பத்தினிக் கோட்டத்தில் வில்விசயன்
வளைவில் அடைக்கலம் வைத்ததுவும்கொங்கு மண்டலமே''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும்.

ஈஞ்சன், சாத்தந்தை, சாத்துவாயர், பயிரன், புள்ளந்தை, பூமன், பொருளந்தை, மணியன், மேதி, வாணன், வாணி முதலிய கொங்கு வேளாளர்களில் பதினொருகுலத்தார் அடங்கிய 'படைத்தலைக் கவுண்டர்களின்' தலைமையிடம் விசயமங்கலம். கூனம்பட்டிமடம் முன்பு விசயமங்கலத்தில்தான் இருந்தது. பிற்காலத்தில் அங்கு சிறப்புடன் வாழ்ந்தவர் கவிஞரும், நூலாசிரியருமான கம்புளியம்பட்டி நாகப்ப கவுண்டர் என்பவர்.

இத்தகு சிறப்பு மிகுந்த விசயமங்கலத்தின் வடபுறம் மேட்டுப் புதூர் என்றும், கோயில்பாளையம் என்றும், பஸ்திபுரம், பஸ்தி பாளையம் என்றும் அழைக்கப்படும் இடத்தில் சமணக் கோயில் சந்திரப்பிரபதீர்த்தங்கரர் கோயில் உள்ளது. வீரசங்காதப் பெரும்பள்ளி என்று அழைக்கப்பட்ட பெரியகோயில், கங்கமன்னர் கட்டி சோழர்கள் விரிவுபடுத்திய கோயில்.

அவ்வூரில் 'கொங்குவேளிர்' என்பவர் கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். அவர் சமண சமயம் சார்ந்தவர். அக்காலத்தில் கொங்கு வேளாளர்களில் பலர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர். அவர்கள் வழிவந்த பலர் இன்னும் கேரளத்தில் வைநாட்டுப் பகுதியில் ஜினச் சந்திரக்கவுண்டர், சந்திரப்பிரபாக் கவுண்டர், நேமிநாதக் கவுண்டர் என்ற சமணப் பெயரோடு வாழ்கின்றனர்.

உதயணன் - வாசவதத்தை என்பவர்களைக் காப்பியத் தலைவன் - தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட நூல் பெருங்கதை, அதை குணாட்டியர் என்பார் பைசாச மொழியில் காப்பியமாக இயற்றினார். அடுத்துத் துர்விநீதன் என்ற கங்க மன்னன் வடமொழியில் ''பிருகத்கதா'' என்ற பெயரில் இயற்றினார். கொங்குவேளிர் தமிழில் அதைப் ''பெருங்கதை'' என்ற பெயரில் நூலாக்க விரும்பினார். அதற்கான முயற்சிகளைத் தொடர இருந்தார்.

பெருங்கதையின் கதைப்போக்கினை அறிந்த விசயமங்கலம் தமிழ்ச்சங்கத்தார் கொங்கு வேளிரால் அப்பெரிய காப்பியத்தைப் பாட முடியுமா என்று ஐயமுற்றனர். ஏற்கனவே அவர் பெரிய நூல் ஒன்றையும் எழுதவில்லையே என்று கூறிய அவர்கள் கொங்குவேளிர் விசயமங்கலம் தமிழ்ச்சங்கத்திற்கு வந்து தாங்கள் கேட்கும் கேள்விகட்குப் பதில் கூற வேண்டும் என்றும் அதனால் பெருங்கதையைப் பாடுவதற்குரிய தன் தகுதியை நிரூபிக்க வேண்டும் என்றும் கூறினர். இதனால் கொங்கு வேளிர் மிகவும் கவலையுற்றார். என்ன கேள்விகள் கேட்பார்களோ எப்படிப் பதில் சொல்லுவது என்ற சிந்தனையில் கவலையோடு இருந்தார்.

கொங்குவேளிர் கவலையுற்ற நிலைகண்ட அவர் வீட்டு வேலைக்காரப் பெண் ஒருநாள் ''ஐயா ஏதோ கவலையோடு இருப்ப தாகத் தெரிகிறது. என்ன காரணம்'' என்று கேட்டாள். கொங்குவேளிர் விபரத்தைக் கூறினார். அதற்கு அவர் வேலைக்காரப் பெண் ''ஐயா உங்கள் தகுதிக்கு நீங்கள் சாதாரணப் புலவர்கள் கூடியுள்ள அந்த தமிழ்ச்சங்கம் செல்லுவது சரியல்ல; நான் சென்று அவர்கள் கேள்வி கட்குப் பதில் கூறி வருகிறேன்'' என்றாள். கொங்குவேளிர் வியந்தார். மறுத்த அவரிடம் வற்புறுத்தி ஒரு நாள் தகவல் அனுப்பிவிட்டு பணிப்பெண் தமிழ்ச் சங்கம் சென்றாள். விசயமங்கலம் தமிழ்ச்சங்கப் புலவர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.

கொங்குவேளிர் சார்பாகத் தான் வந்திருப்பதாகவும், அவரைக் கேட்கும் கேள்விகளை என்னிடமே கேட்கலாம். நான் அவற்றிற்குப் பதில் கூறுகிறேன் என்றாள் பணிப்பெண்.

விசயமங்கலத் தமிழ்ச்சங்கப் புலவர்கள் அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக் கேட்டனர். அவர்கள் கேட்ட எல்லாக்கேள்விகட்கும் திறமையாகவும், பொருத்தமாகவும் பணிப்பெண் பதில் கூறினாள். ஆச்சரியப்பட்ட தமிழ்ப் புலவர்கள் கொங்குவேளிரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். கொங்குவேளிர் பெருங்கதை இயற்றியவுடன் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியைக் கொங்குமண்டல சதக ஆசிரியர் ஒரு செய்யுளில் விளக்கிக் கூறியுள்ளார்.

''நீதப் புகழ்உத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வைள்க வேகொங்கு வேள்அடிமை
மாதைக்கொண் டுத்தரம் சொன்னது வும்கொங்கு மண்டலமே''

என்பது அப்பாடலாகும்.

பெருங்கதையின் சிறப்பறிந்த சமணர்கள் கொங்கு வேளிரே முன் பிறவிகளில் குணாட்டியராகவும், துர்விநீதனாகவும் பிறந்து உதயணன் கதையைப் பாடியதாகப் புகழ்ந்தனர். கொங்கு வேளிருக்கும், அவர் அடிமை மாதாகிய பணிப்பெண்ணுக்கும் சிலையெடுத்து வழிபட்டனர். இன்னும் அவர்கள் சிலைகள் விசயமங்கலம் சந்திரப் பிரபதீர்த்தங்கரர் கோயிலில் உள்ளன.

விசயமங்கலத்தில் கொங்கு வேளிர் பெருங்கதை இயற்றி அரங்கேற்றியதைக் குறிக்கும் ஒரு வடமொழிக் கல்வெட்டு சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலில் இருந்தது. அந்தக் கல்விளிம்பில் ''ஸ்ரீபிர்கத் கதா லாவண்ய ரத் பிரதாபஹ:'' என்று எழுதப்பட்டிருந்தது. கோயில் திருப்பணியின்போது அந்தக் கல் உடைக்கப்பட்டு விட்டது. வரலாற்றுப் புகழ்பெற்ற அக்கல்வெட்டு கவனக் குறைவால் அழிக்கப் பட்டு விட்டது. ''பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கி யிருக்கிறது'' என்பது அந்த வடமொழிக் கல்வெட்டின் பொருளாகும்.

✤ ✤ ✤

# 20. நீர்நிலை தந்த நங்கையர்

நீர் - பஞ்சபூதங்களுள் ஒன்று. உலக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. இரண்டாவது அதிகாரமாகக் கடவுள் வாழ்த்திற்குப் பின் வான்சிறப்பைக் கூறிய திருவள்ளுவர் மழை தரும் நீரை 'அமிழ்தம்' என்றார். பண்டைக் காலத்தில் அரசு உருவானபோது செய்த முதல் செயல் காடுகொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கியதேயாகும். நிலத்தொடு நீரைச் சேர்க்கும் அரிய செயலைச் செய்தவர் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்றார் சங்கப் புலவர் குடபுலவியனார். ''கூவல் குறைவின்றித் தொட்டான்'' புகழே புகழ் என்று நீதி நூல்கள் கூறும்.

இவற்றை எண்ணி ஏரி, குளம், கிணறு, கால்வாய், மதகு, தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்த சான்றோர்கள் பலர். இத்திருப்பணி களில் கொங்கு நாட்டுப் பெண்களும் பெரும்பங்காற்றியுள்ளனர் என்பது சிறப்புமிகும் செய்தியாகும்.

## ஏழூர் சகோதரிகள்

ஏழூர் நாட்டின் தலைநகர் ஏழூர். ஏழுகோட்டை, ஏழு சிவாலயம், ஏழு பிள்ளையார் கோயில்கள் அங்கு இருந்தனவாம். அங்கு கற்பூர ஆயி, செண்பக ஆயி என்ற சகோதரிகள் இருந்தனர். திருக்கோயில் பணிசெய்து மானிய நிலங்கள் பெற்றுப் பெரும் செல்வம் சேகரித் திருந்தனர். வாரிசு எவரும் இல்லாத அவர்கள் தாம் சேகரித்த பெரும் செல்வத்தை நல்வழியில் செலவாக்க விரும்பினர்.

கொல்லிமலையில் தோன்றி ஏழூர் நோக்கி வரும் ஆறு ஏழூர் ஆறு. ''பிடங்குமாநதி'' என்று அதனை இலக்கியம் கூறும். அந்நதியில் வரும் வெள்ளத்தைத் தடுத்து ஏழூரில் ஏரி ஒன்று கட்டினால் நீர்வளம் பெருகி வேளாண்மை செழிக்கும் என்பதுணர்ந்த சகோதரிகள் அங்கு

ஏரி ஒன்று கட்ட முனைந்து ஒரு ஒட்டன் மேற்பார்வையில் அதைக் கட்டினர்.

ஏரிப்பணி முடியும் தருவாயில் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டது. ஏழூர் மக்கள் எவரும் சகோதரிகளுக்குப் பொருள் கொடுத்து உதவ முன் வரவில்லை. ஏரிப்பணியை மேற்பார்வையிடும் ஒட்டனோ செலவு செய்ததற்குப் பணம் தர வற்புறுத்தினான். பணம் தர முடியாத நிலையில் பெரும் துயருற்று ஒருநாள் சகோதரிகள் இருவரும் குளத்தில் விழுந்து இறந்தனர்.

அதைக் கண்ட ஒட்டன் தன்னால்தானே சகோதரிகள் இருவரும் இறந்தனர் என்று மனம் மிக வருந்தி அவனும் தன் கையில் இருந்த வறண்ட மூங்கிலைக் கரையில் ஊன்றிவிட்டுக் குளத்தில் மூழ்கி இறந்தான். அவனுடன் இருந்த அவன் நாயும் அவனுடன் குளத்தில் விழுந்து இறந்தது.

பிற்காலத்தில் மக்கள் கற்பூர ஆயி, செண்பக ஆயி, ஒட்டன், அவன் காவல் நாய் ஆகியவர்களுக்கு ஏழூர் ஏரிக் கரையில் கோயில் கட்டி வழிபட்டனர். இப்போது அக்கோயில் ஏழூரில் புதுப்பிக்கப்பட்டுப் பூசை நடந்து வருகிறது. வறண்ட மூங்கில் கூடத் தழைத்து அண்மைக் காலம் வரை செழிப்புடன் இருந்தது.

### அமிர்தவல்லி

பருத்திப்பள்ளி நாட்டின் தலைநகர் பருத்திப்பள்ளி. அங்கு அமிர்தவல்லி என்ற பெண் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தாள். பருத்திப்பள்ளியில் ஏரி ஒன்று இருந்தது. ஆனால் நீர் நிறைந்து பாசனம் செழிக்காமல் உடைந்து, குலைந்து கிடந்தது. அதனை எண்ணி அமிர்தவல்லி மிக வருந்தினாள்.

அருகில் மணிமுத்தாறு ஓடுகிறது. இருப்பினும் அதன் நீர் பருத்திப்பள்ளி ஏரிக்கு வர முடியாமல் இருந்தது. அமிர்தவல்லி அந்நிலையைப் போக்க விரும்பினாள். அக்கரைப்பட்டி என்னும் ஊர் அருகே மணிமுத்தா நதியில் சிறிய தடுப்பணை கட்டி அதன் நீர்

பருத்திப்பள்ளி ஏரிக்கு வர வாய்க்கால் ஒன்றை வெட்ட ஏற்பாடு செய்தாள். தனது சொந்தப் பொறுப்பில் அப்பணியைச் செய்தாள்.

அவ்வாய்க்கால் பாலமேடு என்ற ஊர் வழியாக வருகிறது. முதலில் அவ்வாய்க்கால் பாலமேடு சின்ன ஏரியில் பாய்ந்து அதை நிரப்புகிறது. அதன் கழிவுநீர் மீண்டும் வாய்க்காலாக உருவாகிப் பருத்திப்பள்ளி ஏரியை நிரப்புகிறது. இன்றும் வாய்க்காலும், பாலமேடு சின்ன ஏரியும், பருத்திப்பள்ளி ஏரியும் மணிமுத்தாறு நீர் பெற்றுப் பாசனம் நடைபெறுகிறது. அமிர்தவல்லி நீர் தேங்கும் வண்ணம் பருத்திப்பள்ளி ஏரியையும் சீர் செய்தாள்.

இன்றும் வாய்க்காலுக்கு ''அமிர்தவல்லி வாய்க்கால்'' என்றும் பருத்திப்பள்ளி ஏரிக்கு ''அமிர்த சாகரம்'' என்ற பெயரும் நின்று நிலவி அமிர்தவல்லி புகழ் பாடுகிறது.

### ஏரி காத்த சிறுமி

பருத்திப்பள்ளி அமிர்தசாகரம் ஏரியில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டது. உடைப்பைச் சரி செய்தாலும் மீண்டும் மீண்டும் உடைப்பு ஏற்பட்டது. ஊரில் பாசன வசதியில்லாமல் வேளாண்மை மிகக் குறைந்தது. பஞ்சம் ஏற்பட்டது. ஒரு பெரியவர் தோன்றி ''ஒரு தாய்க்குத் தலையான மூத்த பெண் பிள்ளையை உடைப்பில் நிறுத்திக் கட்டினால் உடைப்பு சீராகும். எப்பொழுதும் உடைப்பு ஏற்படாது'' என்றார்.

அதை அறிந்த அவ்வூரில் வாழ்ந்த வேட்டுவர் சமூகத்துச் செல்வர் ஒருவர் தன் பெண்ணிடம் இதனைத் தெரிவித்தார். அப்பெண் ஊரார் எல்லோருக்கும் நன்மை ஏற்பட நான் என்னைப் பலி கொடுத்துக் கொள்ளத் தயாராக உள்ளேன் என்று தெய்வத்தை வேண்டி ''எப்பொழுதும் உடைப்பு ஏற்படாமல் ஏரி நிலைக்க வேண்டும்'' என்று கூறி ஏரி உடைப்பில் நின்று உடைப்பை சரி செய்யச் செய்தாள். ஏரி உடைப்பு நின்றது. வேட்டுவப் பெண் வேண்டுதலால் எப்பொழுதும் பருத்திப்பள்ளி ஏரியில் உடைப்பே ஏற்படுவது இல்லை. ஊருக்காகத் தியாகம் செய்த அப்பெண்ணின் பெயர்கூடத் தெரியவில்லை.

## தாழிவடுகி

சேலம் மாவட்டத்தில் ''பேளூர்'' என்ற ஊர் உள்ளது. எழுகரை நாட்டுக் குன்றத்தூர் (சங்ககிரி) சீமையில் அது உள்ளது. அங்குள்ள கல்வெட்டு ஒன்றில் அவ்வூர்ப் பெயர் ''வெளியூர்'' என்றும் அவ்வூர் துறவிநாடு என்ற பகுதியில் உள்ளது என்றும் காணப்படுகிறது. வெளியூர் - வேளூர் ஆகிக் காலப் போக்கில் பேளூர் ஆகிவிட்டது. (சேலம் களஞ்சியம் வெள்ளை ஊர், வேளிர் ஊர் என்றும் பெயர்க் காரணம் கூறுகிறது). கி.பி. 1803 வரை அவ்வூர் ஒரு தாலூக்காவின் தலைநகராக விளங்கியது.

வெளியூரில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. ஆதித்த கரிகாலன் கல்வெட்டு மிகவும் தொன்மையானது. 1219ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் அவ்வூர்ச் சின்ன ஏரியில் இரண்டு மதகுகளை ஏற்படுத்தி அவ்வூர் வேளாண்மை செழிக்கச் செய்தவர்கள் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

பிச்சன் சொக்கன் என்பவரும் அவர் மனைவி தாழிவடுகி என்பவரும் அந்த மதகுகளை அமைத்ததாக அந்தக் கல்வெட்டுக் கூறுகிறது. சின்ன ஏரியும், தாழிவடுகி அமைத்த மதகுகளும் இன்றும் பயன்பாட்டில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தாரமங்கலம் இலட்சுமியம்மாள்

சங்க காலம் முதற்கொண்டு தொடர்ந்து நின்று நிலவிய மரபு கட்டி முதலிகள் மரபு. பிற்காலத்தில் அவர்கள் தாரமங்கலத்தில் நிலையாகத் தங்கி அரசு செலுத்தினர். அவர்கள் கட்டிய கோயில்களும், வெட்டிய குளங்களும் பலப்பல. அதனைத் தாரமங்கலம் கல் வெட்டுக்கள் மிகவும் விரிவாகக் கூறுகின்றன.

தாரமங்கலம் வணங்காமுடிக் கட்டியின் தங்கை இலட்சுமியம்மாள். இலட்சுமியம்மாள் தன் சொந்தப் பொருட் செலவில் ஒரு பெரிய ஏரியை வெட்டி முடித்து வேளாண்மை நடைபெறச் செய்தாள். இன்னும் அவர் வெட்டிய ஏரி 'லட்சுமியம்மா சமுத்திரம்'' என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

# 21. மாணிக்கி என்னும் மங்கைநல்லார்

## குலத்தில் பிறக்காத குலமணி

அந்தப் பெண் கொங்கு வேளாளர் குலத்தில் பிறந்தவள் அல்ல; ஆனால் குலத்தார் அனைவரும் தங்கள் ''மூத்தபிள்ளை'' எனவும், ''முந்தினபிள்ளை'' எனவும் அப்பெண்ணை உரிமையுடன் அழைக்கின்றனர். தம் தந்தை மறைந்தால் எந்த மகளுக்கும நடக்காத ''ஒருசீர்'' பெற்று வளர்க்காத இப்பெண்ணுக்கு மட்டும் செய்யப்படுகிறது. குலப் பெரியவர்கள் இறந்தால் அப்பெண்ணுக்கு ''முன்கை சிறைத்து'' சடங்கு நடைபெறுகிறது. ஒரு குலத்தில் தோன்றிய எந்தப் பெண்ணையும் குலத்தார் அனைவரும் ஒன்றுகூடி, சீராட்டிப் பாராட்டிப் புகழ்ந்து விருதுகள் கொடுப்பதில்லை. ஆனால் அந்தப் பெண்ணுக்கு இவை அனைத்தும் வெகு விமரிசையாகக் குலதெய்வக் கோயிலில் நடைபெறுகிறது. யார் இத்தகு சிறப்புக்குரிய பெண்? அவளே ''குலமாணிக்கி'' என்று அழைக்கப்படும் குணம் சிறந்த மங்கை நல்லார். இன்று நம்மால் மறக்கப்பட்ட ''மாமணி''.

## குலமாணிக்கி

கொங்கு வேளாளர் ஒவ்வொரு குலத்தாரும் தங்கள் சமயச் சடங்குகளில் சிறப்புடன் கலந்து கொள்ளவும், கோயில் விழாக்களில் குலதெய்வத்தின் முன்னர் தெய்வீக மணம் கமழும் வண்ணம் பக்திப் பாடல்கள் பாடவும், அபிநயத்தோடு ஆடவும், தெய்வீகப் படிமங்கள் உலா வரும்போது கவரி வீசவும், மங்கல நிகழ்ச்சிகளில் ஏற்ற சில பணிகள் உரிமையுடன் செய்யவும் ''குலமாணிக்கி'' என்று பெண்ணைத் தேர்ந்தெடுத்து நியமித்தனர். இளங்கோவடிகள் கூறுவது போல் அப்பெண் ''ஆடலும், பாடலும், அழகும்'' உள்ளவளாகவே அமைவாள். கொங்கு வேளாளரின் ஐந்து குலமாணிக்கிகளின் பட்டயங்கள் கிடைத்துள்ளன.

கொங்கு வேளாளர்கள் தங்கள் குலதெய்வக் கோயிலில் குறிப்பிட்ட நாளில் ஒன்றுகூடித் தேர்ந்தெடுத்த பெண்ணை சுற்றத்தாருடன் வரவழைத்து அப்பெண்ணுக்குக் ''குலமாணிக்கி'' என்று பட்டம் சூட்டுவர். அப்பெண்ணுக்குப் புத்தாடைகள் பல கொடுத்து, புதிய அணிகலன்கள் பலவும் அளித்து, எல்லோரும் சந்தனம் தெளித்துக் கோயிலில் வழிபாடு செய்து அப்பெண்ணை ஊர்வலமாக (மெரமனை) அழைத்துச் செல்வர். அன்று தட்சிணை வழங்குவர். அப்பெண் ஆடல், பாடல் நிகழ்த்திக் காட்டுவாள். அப்பெண்ணுக்கு நன்செய் நிலமும், புன்செய் நிலமும் கொடையாக வழங்குவர்.

திருமணம் போன்ற மங்கலச்சடங்குகளின் போது அப்பெண் ணுக்குக் கொடுக்கும் ''வரிசைகள்'' நிர்ணயிக்கப்படும். பண்ணை யத்துக்கும் குறிப்பிட்ட அளவு தானியம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவளை தங்கள் குடும்பத்தில் ஒரு பெண்ணா கவே உரிமை கொண்டாடுவர். அப்பெண்ணுக்கு இறைவன் அளிப்ப தாகக் கருதி ''மங்கலநாண்'' வழங்குவர். அப்பெண்ணுக்குச் செய்யும் சடங்குகட்குப் ''பொட்டுக்கட்டுதல்'' என்று பெயர் (கால வேறுபாட் டால் இச்சொல் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு விட்டது).

### அந்துவகுல மாணிக்கி

கொங்கு வேளாளர் அந்துவ குலத்தார் பாலமேடு, இருப்புலி, மோடமங்கலம், அந்தியூர், நாகம்பள்ளி, லக்காபுரம், அலைவாய்ப் பட்டி, கீரனூர், திருவாச்சி, ஆதியூர், தெக்கலூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த காணியாளர்கள் அனைவரும் பாலமேட்டில் உள்ள அத்தனூரம்மன் கோயிலில் ஒன்றாகக் கூடினர்.

தகடப்பாடியைச் சேர்ந்த வேளாளர் கூத்தாடிகளில் மங்கலத் தேவன் மகன் நாகமலை என்ற பெண்ணைத் தங்கள் குலமாணிக்கி யாக நியமித்து அப்பெண்ணுக்கு உரிமைச்செப்பேடும் வெட்டித் தந்தனர். பேரூர் ஆதீனத்தில் இப்பட்டயம் உள்ளது. ஓலைப்பட்டய நகலே கிடைத்துள்ளது.

## செங்குண்ணிகுல மாணிக்கி

மோரூர், முளசி, மேழிப்பள்ளி, வட்டூர், பெருச்சாணி சத்திரம், மருதுறை, இருப்புலி, மானூர், வாழவந்தி, வெங்கரை, பாசூர், கொத்தனூர், கல்வடங்கம், காஞ்சிக்கோயில், புன்னம் ஆகிய ஊர் களைச் சேர்ந்த செங்குண்ணி குலத்தார் அனைவரும் மேழிப்பள்ளியில் உள்ள கரிய காளியம்மன் கோயிலில் ஒன்றாகக் கூடினர்.

மோரூர், எழுகரைநாட்டு சித்திரமேழிப்பட்டன் பேத்தி "அத்திப் பெண்" என்பவளைச் செங்குண்ணி குல மாணிக்கியாக நியமித்துப் பட்டயம் எழுதித் தந்தனர். இப்பட்டயம் உரைநடை வடிவத்திலும், அழகிய ஆசிரியப்பா படிவத்திலும் கிடைத்துள்ளது. இரண்டும் பேரூர் ஆதீனத்தில் உள்ளன.

## செல்லகுல மாணிக்கி

பருத்திப்பள்ளி, ஈரோடு, வெள்ளோடு, எழுமாத்தூர், குலவிளக்கு, இராசம்பள்ளி, அறச்சலூர், வாய்ப்பாடி, அஞ்சூர், ஆறுதொழுவு, வள்ளியறச்சல், தாராபுரம், வெஞ்சமாங்கூடல், மட்டுலகம், முட்டம், கடம்பை, குப்பம், குறுமந்தூர், கோசணம், சதுமுகை, கருவல்பாடி, திருமலைகிரி, ஆப்பக்கூடல், கொன்னையாறு, பிறசை, பாலமேடு, மொஞ்சனூர், அத்தனூர், நவனி, பட்டிலூர், ஆனங்கூர், இருப்புலி, கோக்கிளாய், காவல்குறிச்சி, இடையாறு ஆகிய ஊர்களைச் சேர்ந்த செல்லகுலத்தார் கொன்னையாறு செல்லாண்டி அம்மன் கோயிலில் ஒன்றாகக் கூடினர்.

பருத்திப்பள்ளி வேளாளர் கூத்தாடிகளில் கந்தபட்டன் மகள் அத்திப்பெண்ணைச் செல்லகுலமாணிக்கியாக நியமனம் செய்தனர். பருத்திப்பள்ளியிலும் இறுதியில் சிலசடங்குகள் நடைபெற்றன. பெண்ணின் ஆடல் பாடலும் நடைபெற்றது.

## தூரகுல மாணிக்கி

குமரமங்கலம், பட்டிலூர், சீராப்பள்ளி, பாலமேடு, முடுதுறை, கலியாணி, தும்பங்குறிச்சி, கீரம்பூர், கோதையூர், இடையாறு,

பெருங்குறிச்சி, காங்கயம், தூரம்பாடி, மானூர், வெங்கம்பூர், முடக் குறிச்சி, பாசூர் முதலிய ஊர்களைச் சேர்ந்த தூரகுலத்தார் அனைவரும் குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயிலில் கூடினர்.

தங்கள் தூரகுல மாணிக்கியாக மோரூர் மகுடாசல மாணிக்கி நல்லபெண் என்பவளை நியமித்தனர். இதற்கு உரிய பட்டயம் அய்யம் பாளையம் மடத்தில் உள்ளது.

## தேவேந்திரகுல மாணிக்கி

குமரமங்கலம், பொன்குறிச்சி, மொஞ்சனூர், கீரனூர், வேளம்பூண்டி, கூத்தனூர், வாங்கல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த தேவேந்திர குலத்தார் அனைவரும் குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயிலில் கூடினர்.

குமரமங்கலம் மலையப்பன் பேத்தி, சித்திரமேழிப் பட்டன் மகள் முத்துவாழி என்ற பெண்ணைத் தேவேந்திரகுல மாணிக்கியாக நியமித்தனர். அய்யம்பாளையம் மடத்தில் இதற்குரிய பட்டயம் உள்ளது. ''கண்ணகுல மாணிக்கி'' பட்டயமும் பேரூரில் உள்ளது. முழுவாசகம் கிடைக்கவில்லை.

## மாணிக்கனும் உண்டு

மாணிக்கியாகப் பெண்களை நியமித்தது போல கொங்கு நாட்டில் மட்டும் ஆண்களை ''மாணிக்கன்'' அல்லது ''மாணிக்கை'' என்ற பெயரில் நியமித்தனர். ஆனால் மாணிக்கி நியமனம் போல சடங்கு நடத்தி செப்பேடு தந்ததாக இதுவரை ஆவணங்கள் கிடைக்கவில்லை. பிடாரியூர்க் கல்வெட்டில் கொங்கு வேளாள கவுண்டரில் ஒருவரையே அப்பணிக்கு நியமித்துள்ள செய்தி தெரிகிறது. அவர் பெயர் ''காமிண்டன் மாணிக்கச்சதிரன்'' என்பதாகும். 18 குலத்தாருக்குரிய மாணிக்கன் பெயர்கள் ஆவணங்களில் கிடைத்துள்ளன.

அந்துவகுலம்-முருகன், கணக்கன்குலம்-ராமன், கண்ணகுலம் -பெரியான், காரிகுலம்-பழனி, கூறைகுலம்-சுப்பன், செங்குண்ணி குலம்-பழனி, செம்பகுலம்-பழனிவேலன், செம்பூத்தகுலம்-செல்லன், செல்லகுலம்-வையாபுரி, செவந்திகுலம்-அர்த்தநாரி, தனஞ்செய

குலம்-செய்யன், தூரகுலம்-குமரவேலன், தேவேந்திரகுலம்-அத்தாணி, பண்ணைகுலம்-முத்துவீரன், பனங்காடைகுலம்- சுப்பன், பொருளந்தைகுலம்-பச்சை, விழியகுலம்-தாசன், விலைய குலம்-முத்துக்கிருஷ்ணன் போன்ற பெயர்கள் அமைப்பை நோக்கும்போது இவர்கள் ''ஐந்தமிழ் வாணர்'' அல்லது ''அஞ்சு படிக்காரர்'' என்று அழைக்கப்பட்ட பட்டன், புலவன், பண்பாடி, தக்கைகொட்டி, கூத்தாடி என்ற ஐந்து பிரிவினருள் ஒருவராக இருக்க வேண்டும். ''ஐந்துபடிக் காரர் தீர்ப்பு'' என்றும் ஓலைப் பட்டயத்தில் மேற்கண்ட மாணிக்கன் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

### மறைந்த மாணிக்கங்கள்

இப்பொழுது மாணிக்கி அல்லது மாணிக்கன் நியமிக்கும் வழக்கம் எங்கும் இல்லை. தெய்வ அடிமையான இவர்கள் ''தேவர் அடியாள்'' என்றும் அழைக்கப்பட்டனர். ''பொட்டுகட்டுதல்'' என்னும் இப்புனித வழக்கம் ஆங்காங்கு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதால், சென்னை மாகாண சட்டசபையில் டாக்டர். முத்துலட்சுமிரெட்டி என்ற சமூக சீர்திருத்தவாதி அம்மையாரால் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு தேவர் அடியாள் முறை சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட்டு விட்டது.

இவர் நாராயணசாமி ஐயர் - சந்திரம்மா தம்பதியினர்க்கு 30.6.1886ல் புதுக்கோட்டையில் பிறந்தவர். முதல் பெண் மருத்துவப் பட்டம் பெற்றவர். முதல் சட்டமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் விளங்கினார். இவர் கணவர் டாக்டர். சுந்தரரெட்டி. சென்னை அவ்வை இல்ல நிறுவனர். ''பத்மபூஷன்'' பட்டம் பெற்ற இவர் 22.7.1968ல் காலமானார்.

மறவபாளையம் அப்பிரமேயர் கோயிலில் மிக வயதான மாணிக்கி ஒருவர் உள்ளார். (இதற்குரிய மூலப்பட்டயங்கள் அனைத்தும் இந்நூலாசிரியர் எழுதிய கொங்கு வேளாளர் செப்பேடு பட்டயங்கள் என்னும் நூலில் உள்ளன).

✣ ✣ ✣

# 22. உயர்பண்புள்ள உமையாயி

கொங்கு நாட்டின் தேவாரப்பாடல் பெற்ற ஏழு திருத்தலங்களில் கொடுமுடியும் ஒன்று. ''கறையூர்'' என்பது ஊர்ப்பெயராகவும், ''பாண்டிக்கொடுமுடி'' என்பது கோயில் பெயராகவும் விளங்கியது. கொடுமுடி என்று சங்ககாலத் தலைவன் ஒருவர் பெயர் காணப் படுகிறது. அவர் பெயராலும், பாண்டியர்கள் திருப்பணி செய்ததாலும் ''பாண்டிக்கொடுமுடி'' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். காவிரிக் கரையில் அமைந்துள்ள ஊர்.

தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியமூவரும் பாடிப்பரவிய தலம் கொடுமுடி. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர்,

''அரிய பொருளே அவிநாசி யப்பா
பாண்டி வெள்ளமே''

என்று பாடியுள்ளார். ''பாண்டி வெள்ளம்'' என்பது கொடுமுடித் தலத்தைக் குறிப்பது என்பர். கொங்கு நாட்டில் இத்தகு பெருமை வேறு எந்த ஊருக்கும் கிடையாது.

கொடுமுடியில் கோயில் சமயப்பணிகள் அனைத்தையும் மேற் கொண்டு இறைவன் திருமேனியையும் தாங்கும் நற்பேறு பெற்ற திருவெம்படியர் என்னும் திருமுடிக்கவுண்டர் கொங்கு வேளாளர் களில் ஒரு பிரிவினர் காடை முதலிய ஏழு குலத்தினர். அக்குலத்தில் தோன்றிய உமையாயி என்பவள் ஆடலும், பாடலும் ஒருங்கே வாய்க் கப்பட்ட, அழகுமிக்கவள். அவள் கொடுமுடி மகுடலிங்கர் கோயிலில் சேவகம் செய்து வந்தாள்.

ஒருநாள் மோரூர் கண்ணகுல நாட்டுக்கவுண்டர் தலைவர் மயில்கவுண்டர் கொடுமுடி வந்து வழிபாடு செய்தார். உமையாயியின்

கலைத்திறம் கண்ட மயில்கவுண்டர் வீடும், நன்செய், புன்செய் நிலம் அளித்து உமையாயியை திருச்செங்கோட்டுக் கோயிலில் சேவகம் செய்ய ஏற்பாடு செய்தார். திருச்செங்கோட்டில் சேவகம் செய்த உமையாயி சிலமுறை தன் சொந்த ஊராகிய கொடுமுடிக்கு சென்று வருவதும் உண்டு.

உமையாயியின் கொடுமுடி வீட்டருகே குயவர் குலப் பெரு மக்கள் சிலர் வாழ்ந்தனர். பொன்காளியப்பன், பொன்காளியம்மாள் என்பவர்கள் காலமாகிவிடவே அவர்கள் மக்கள் வேலப்பனும், மலையப்பனும் அனாதைகள் ஆயினர். உற்றார் உறவினர்களாகிய குயவர்குலப் பெருமக்கள் அனைவரும் இறந்து விட்டனர். இதை நேரில் பார்த்த உமையாயி வேலப்பனையும், மலையப்பனையும் தன்னோடு திருச்செங்கோட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

திருச்செங்கோட்டில் பெற்றோரைப் பிரிந்த கவலையில்லாமல் வேலப்பனையும், மலையப்பனையும் தாய்போல அன்பு காட்டி வளர்த் தாள். ஒரு குறையும் இன்றி வளர்ந்த அவர்கள் இருவரையும் நல்லாசிரியர் ஒருவரிடம் அனுப்பிப் படிக்க வைத்தாள். அவர்கள் எண்ணும், எழுத்தும் நன்கு கற்றுத் தேர்ந்தனர். கல்வியில் முதலிடம் வகித்தனர்.

பள்ளிப்படிப்பு முடிந்ததும் அவர்கள் இருவரும் அவர்கள் குலத் தொழிலான மண்பாண்டங்கள் வனையப் பயிற்றுவிக்க வேண்டும் என்று உமையாயி விரும்பினாள். தன் வீட்டிலும், அண்டை அயலார் வீட்டிலும் உள்ள அனைத்து வகையான மண்பாண்டங்களையும் காட்டினாள். செய் நேர்த்தியைக் கண்டு அறியச் செய்தாள். பின் பக்கத்து ஊர்களில் உள்ள குயவர் வீடுகட்கு இருவரையும் அனுப்பி தொழிலில் தேர்ச்சி பெறச் செய்தாள். இருவரும் மண்பாண்டம் வனைதலில் தேர்ச்சி பெற்றனர்.

பின்னர் கோயில்களில் உள்ள குதிரை, யானை, பசு, தெய்வப் படிமங்கள் முதலிய உருவாரங்கள் செய்வதிலும் மிகவும் தேர்ந்த வர்கள் ஆயினர். அவர்கள் இருவரும் பதினெட்டு வயதைக் கடந்தனர். கட்டிளங் காளைகள் ஆயினர்.

பின் அவர்கட்குத் திருமணம் செய்து வைக்க உமையாயி விரும்பினாள். சிறுவர்களை வளர்த்து ஆளாக்க உமையாயிக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்த மோரூர் கண்ணகுல மயில் கவுண்டரிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். ஒரு நாள் மயில் கவுண்டர் உமையாயி இல்லம் வந்து இளைஞர்கள் திறமை கண்டு வியந்தார். அவர்களை நோக்கி உங்கள் மாமன்மார் யார் என்று கேட்டார். அக்காலத்தில் மாமா வீட்டில் திருமணம் செய்வதே மரபு.

வேலப்பனும், மலையப்பனும் நாங்கள் அரைய நாட்டுக்குய வர்கள் என்றும், எங்களுக்கு மாமன்மார்கள் பூந்துறை நாட்டுக்குயவர்கள் ஆவர் என்றும் கூறினர். பூந்துறை நாட்டுக்குயவர்களில் திருநீல கண்டர்வழி ஈரோட்டுக்குயவர்களில் பட்டக்காரர் என்ற சிறப்புப் பெற்ற காளியண்ணன், செட்டியண்ணன், பெரியண்ணன் ஆகிய மூவரும் எங்கள் மாமன்மார்கள் என்று கூறினர். ஒரு நல்ல நாளில் மோரூர் கண்ணகுல மயில்கவுண்டரும் உமையாயியும் ஈரோடு சென்று விசாரித்து காளியண்ணன் சகோதரர்கள் வீட்டுக்குச் சென்றனர். அவர்களுடன் வேலப்பனும், மலையப்பனும் சென்றிருந்தனர். அவர்கள் வீட்டில் திருமண வயதுடைய ஒரு பெண் இருந்தாள். அவர்களிடம் கொடுமுடி வேலப்பன், மலையப்பன் விபரம் எல்லாம் எடுத்துக் கூறிப் பெண் கொடுக்குமாறு கூறினர். அரைய நாட்டுக் குயவர் குல இளைஞன் வேலப்பனுக்கு நாங்கள் பெண் கொடுக்கத் தயார். ஆனால் அவர்கட்குக் குலத்தொழில் தெரிந்திருக்க வேண்டும் என்று மாமன்மார்கள் கூறினர்.

அவர்கள் விருப்பப்படியே வேலப்பனும், மலையப்பனும் சட்டி, பானை, சால், குருது, தட்டம் முதலிய எல்ல வகையான வீட்டு உபயோக மண்பாண்டங்கள் அனைத்தையும் மிக விரைவாகவும், அழகாகவும் செய்தனர். பின்னர் ஈரோடு கொங்கலம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு வேலப்பனும், மலையப்பனும் குதிரை, யானை, காளை, பசு, தெய்வீக உருவங்கள், ஆண், பெண் உருவங் களையும் மிக நேர்த்தியாகச் செய்து காட்டினர்.

தங்கள் வெள்ளைப்பெண் காளியம்மாளை வேலப்பனுக்குத் திருமணம் செய்து தரச் சம்மதித்தனர். திருமணத்திற்கு எல்லா உற்றார் உறவினர்களையும் வரவழைத்தனர். திருமணம் ஈரோட்டில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. பின்னர் ஒரு நல்லநாளில் மணமக்களைத் திருச்செங்கோட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து பல்லக்கில் வைத்து நான்கு திருவீதிகளிலும் மெரமனை நடத்தினர். வீடு, புன் செய், நன்செய் நிலங்களை மணத்தம்பதியருக்கு மயில்கவுண்டர் அளித்தார். உமையாயி தன்சொத்து முழுவதும் அவர்கட்கே என்று எழுதிக் கொடுத்தாள். இல்லற வாழ்வைத் தொடங்கினர். இருப்பினும் அவர்கள் குலத் தொழில் செய்ய, சில ஊர்களைக் காணியாகக் கொடுக்க வேண்டும் என்று மயில்கவுண்டரும், உமையாயியும் கேட்டுக் கொண்டனர்.

ஈரோட்டுக்குயவர்கள் சமூகப்பட்டக்காரர்கள் ஆதலால் திருச் செங்கோடு, குமரமங்கலம், திருமங்கலம், சித்தளந்தூர், சிறுமொளசி, அணிமூர், ஊஞ்சணை ஆகிய ஏழு கிராமங்களை வேலப்பன் சகோதரர் கட்குத் தொழில்செய்யக் காணியூர்களாக அளித்தனர். இன்றும் அவ்வூர்களில் வேலப்பன் வழியினர் வாழ்ந்து வருகின்றனர்.

இதனைக் கவுண்டர்கள், ஊரார், நாட்டார், குருக்கள், அதிகாரி கள் அறிய ஒரு செப்பேட்டிலும் எழுதித்தந்தனர். இன்றும் செப்பேடும், ஓலை நகலும் பாதுகாப்பாக உள்ளன.

கொங்கினக் குலப்பெண் உமையாயி ஆதரவற்றவர்கட்கு இரக்கம் காட்டி எடுத்து வளர்த்து அவர்களை ஆளாக்கித் திருமணம் செய்து வைத்து வாழ்க்கைக்கு வழிவகுத்த உயர் பண்புகள் மிகவும் பாராட்டத் தக்கவை. மோரூர்க் கண்ணகுல மயில்கவுண்டர் உதவியும் போற்றத்தக்கது.

❖ ❖ ❖

# 23. மருத்துவக் கலைதேர் மங்கலை

## காந்தபுரம்

சங்க காலத்தை அடுத்து இரட்டர், கங்கர் என்ற மரபினர் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். தொடக்க காலத்தில் அவர்கள் கொங்கு நாட்டில் ''ஸ்கந்த புரம்'' என்ற ஊரை ஏற்படுத்தித் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்னர் கர்நாடகப் பகுதியில் உள்ள தளவனபுரம் என்ற தலைக்காட்டுக்குத் தங்கள் தலைநகரை மாற்றிக் கொண்டனர்.

ஸ்கந்தபுரம் எது என்பதைப் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் உள்ளன. கரூர் என்றும், காங்கேயம் என்றும், டணாயக்கன் கோட்டைப் பகுதியில் இருந்தது என்றும், கஜ்ஜல் ஹட்டிக் கணவாயில் உள்ளது என்றும், தாராபுரம் என்றும் பல கருத்துக்கள் உள்ளன. 'ஸ்கந்தம்' என்ற சொல்லுக்கு 'மணம்' என்பது பொருள். மணம் என்ற பொருளைத் தரக்கூடிய 'கொங்கு' என்று பெயர் பெற்ற கொங்கூரே ஸ்கந்தபுரமாக இருக்க வேண்டும். கொங்கு மண்டல சதகப்படி நறையூர் நாட்டில் ஆற்றங்கரை அருகில் வளமான ஊர் 'ஸ்கந்தபுரம்' என்று தெரிகிறது. இவையெல்லாம் அமராவதியும் - சண்முக நதியும் கூடும் இடமான கொங்கூருக்கு மிகவும் பொருந்தி வருகிறது. ஸ்கந்தபுரத்தைத் தமிழ்வடிவில் 'காந்தபுரம்' என்று கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் கூறுகிறார்.

## மன்னன் மகள்

காந்தபுரத்தில் ஒரு மன்னன் அரசாட்சி செய்து வந்தான். நல்லாட்சி புரிந்த அம்மன்னன் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டான். ஏழையர்க்கும் இரவலர்க்கும் அவன் அரண்மனைக் கதவுகள் எப்போதும் திறந்திருந்தன. புலவர்கள் பலர் அவன் புகழைப் பாடினர்.

நீதிநெறி தவறாது அம்மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். மக்கள் தலைவனாகவே அவன் விளங்கினான். பகை எதுவும் இல்லாததால் போர் இன்றி நாடு மிகவும் அமைதியாக இருந்தது.

அம்மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாள். சீரும் சிறப்புமாக வளர்ந்த தன் ஒரே மகளை எவ்விதக் குறையும் இன்றி வளர்த்து வந்தான். தக்க வயது வந்ததும் அப்பெண்ணை அண்டை நாட்டு அரசிளங் குமரனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

கருவுற்ற மன்னன் மகள் முதல் பிரசவத்திற்காகத் தன் தந்தையின் தலைநகராகிய காந்தபுரம் வந்தாள். அரண்மனையில் பாதுகாப்பாக இருந்த அவளைத் தோழிமார்கள் நன்கு கவனித்துக் கொண்டனர். அரசன் உட்பட அனைவரும் அவள் பிரசவ காலத்தை எதிர்நோக்கி இருந்தனர்.

பிரசவத்திற்குரிய காலம் வந்தது. மருத்துவர்கள் பலர் அரண்மனையில் முகாமிட்டுக் காத்திருந்தனர். பிரசவ வலி ஏற்பட்டும் குழந்தை வெளிப்படாமல் இருந்தது. மன்னன் மகள் பிரசவ வேதனையில் துடித்தாள். மருத்துவச்சிகள் பலரும் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டனர். எவ்விதப் பயனும் இல்லை.

சிலர் குழந்தையின் தலை பெரிதாக உள்ளது. இயல்பாகப் பிரசவம் ஆவது மிக அரிது என்றனர். சிலர் தலை திரும்பி விட்டது என்றார்கள். சிலர் குழந்தையும், தாயாரும் இந்த ஆபத்திலிருந்து தப்புவது மிகவும் அரிது என்றார்கள். மன்னனும், பிறரும் மிகவும் மனம் நொந்தனர்.

### அரசன் அறிவிப்பு

அரண்மனை மருத்துவர்களும், மருத்துவச்சிகளும் கைவிட்ட நிலையில் அரசன் ''கற்பினியான என் மகளையும், குழந்தையையும் பிழைக்கச் செய்ய யாராவது முன் வந்தால் அவர்கள் வேண்டிய பரிசில் அளிப்பேன்'' என்று நாடெங்கும் அறிவிக்கச் செய்தான்.

## நறையூர் நாட்டு மங்கலை

கொங்கு நாட்டு நாவிதர்குல மக்களுக்கு மங்கலன் என்ற பெயர் உண்டு. அவர்களை மருத்துவ குலத்தார் என்றும் அழைப்பர். பல கல்வெட்டுக்களிலும், ஆவணங்களிலும் அவர்கள் ''வைத்யர்'' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இன்றும் அவர்கள் சிறு சிறு மருத் துவப் பணிகளைக் கிராமப்புறங்களில் செய்து வருவதைக் காணலாம்.

நறையூர் நாட்டு கொங்கு நாவிதர் குடும்பம் ஒன்றில் மங்கலை என்ற பெண் ஒருத்தி இருந்தாள். அவள் மருத்துவக்கலையில் மிகத் தேர்ந்து விளங்கினாள். அவள் பிரசவக் கலையில் உள்ள நூல் பல கற்றவள்.

அரசன் அறிவிப்பைக் கேட்ட நறையூர் நாட்டு மங்கலை காந்தபுரத்தில் உள்ள அரசன் அரண்மனை வந்தாள். அரசனிடம் ''கடைசிவரை பிரசவத்தை அரண்மனை மருத்துவர்கள், மருத்து வச்சிகள் பார்க்கட்டும். அவர்களால் முடியவில்லை என்றால் நான் பார்க்கிறேன். நான் என் அனுபவத்தால் தாயின் அடிவயிற்றைப் பீறிக் குழந்தையை வெளியில் எடுத்து இரண்டு உயிர்களையும் காப்பாற்று கிறேன்'' என்றாள். அரசன் உட்பட எல்லோரும் சம்மதித்தார்கள். சிலர் ஐயமுற்றனர்.

எல்லோரையும் அப்புறப்படுத்திவிட்டு அரசன் மகளைப் பக்குவமாகக் கிடத்தி மிக விரைவில் பெண்ணின் அடிவயிற்றைப் பீறிக் குழந்தையை எடுத்துக் கொடுத்து பீறிய வாயை மூடித் தன்னிடம் உள்ள மருந்தைத் தடவி விட்டாள். பின்னர் ஏற்ற சிகிச்சை செய்து மன்னன் மகளை நினைவுறச் செய்தாள். அரசன் மிக மகிழ்ந்தான்.

மங்கலையை எல்லோரும் பாராட்டினர். அரசன் தான் அறிவித்தவாறு மங்கலைக்குப் பரிசுகள் பலவற்றைக் கொடுத்துப் பாராட்டினான். காங்கய நாட்டில் ''மங்கலப்பட்டி'' என்ற ஊரை ஏற்படுத்தி அங்குள்ள நன்செய், புன்செய் நிலங்கள் அனைத்தையும் மங்கலைக்கு அளித்தான். இன்றும் அதே பெயருடன் ஊர் நின்று

நிலவுகிறது. இந்த மங்கலை போன்று பல பெண்கள் நம் நாட்டில் முன்பு இருந்துள்ளனர்.

## இலக்கியப் புகழ்

கொங்கு மண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர் தான் பாடிய கொங்கு மண்டல சதகத்தில் மங்கலையின் புகழை ஒரு பாடலில் கூறியுள்ளார். அப்பாடல்,

''குறைவறு தெண்ணீர் நதியணை காந்த புரத்தொருநல்
இறைமக னார்மகள் ஈனப் பெறாதுடல் ஏங்கவகிர்
துறைவழி ஏற்று மகிழ்வூட்டு மங்கலை தோன்றிவளர்
மறைவழி தேர்நறை யூர்நாடு சூழ்கொங்கு மண்டலமே''.

என்பதாகும்.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டுக் கொங்கு வேளாளர் பலரின் குல தெய்வமாக விளங்கும் பொன்னர்-சங்கர் இருவரும் தாய் தாமரை நாச்சியார் வயிற்றில் இயல்பாகப் பிறக்காமல் வலது விலா எலும்புப் பகுதியிலும், இடது விலாப்புறமும் பிறந்தனர் என்று அண்ணன்மார் காவியம் கூறுகிறது. அவர்கள் இவ்வாறு செய்த அறுவைச்சிகிச்சை மூலம் பிறந்தவர்களாக இருக்கலாம்.

✣ ✣ ✣

# 24. வியன்பணி யாற்றிய வேட்டுவர் குல மகளிர்

கொங்கு வேளாளர்கள் போலவே கொங்கு நாட்டில் பல்கிப் பெருகிச் சிறப்புடன் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வரும் சமுதாயம் வேட்டுவர் சமூகம் ஆகும். கொங்கு நாட்டு ஆவணங்கள் பலவும் அவர்களைப் ''பூர்வகுடிகள்'' என்று குறிக்கின்றன. வேட்டுவர் சமூகத்தினரைக் ''கொங்கர்'' என்றும், அவர்கள் தலைவரைக் ''கொங்குராயன்'' என்றும் ஆவணங்கள் கூறுகின்றன.

அவர்கள் கண்ணப்ப நாயனார் வழிவந்தவர்கள் என்றும், காளத்திமலைக்கு உரியவர்கள் என்றும் கூறப்படுகின்றனர். அவிநாசிப் புலவர் பாடிய திங்களூர் நொண்டி நாடகம் என்னும் கொங்குநாட்டு இலக்கியத்தில்,

''தின்றுருசி யானகறி தன்னைச் - சிவனே
தின்னப்பா எனக்கொடுத்த கண்ணப்ப வங்கிசத்தான்''

என்ற தொடர் காணப்படுகிறது. இவர்களை வேடர், வேட்டுவர், காவலியர், மாவலியர், பூவலியர் என ஐந்து பிரிவாக அழைப்பர். புரவிபாளையம் கோப்பண மன்றாடியார் ஆவணம் ''அஞ்சு சாதி'' என்று அவர்களைக் குறிக்கும். அவர்களிலும் பட்டக்காரர்களும், பாளையக்காரர்களும் உள்ளனர்.

''குருகுல வம்சம்'' எனக் குறிக்கப்பெறும் இவர்களின்,புகழ் பாடும் ஓர் இலக்கியம் ''குருகுல காவியம்''. ''அப்பிச்சிமார் காவியமும்'' இவர்கள் வரலாறு கூறுகிறது. வேளாளர் ஆவணங்களில் ''வாளரச மணவாளர்'' என இச்சமூகத்தார் சிறப்பிக்கப் பெறுவர். இவர்கள் சபைக்குப் ''பூலுவ நாடு'' என்று பெயர். வேளாளர்களின் சமூக அமைப்பான வெள்ளாள நாட்டுடன் இணைந்து பல பணிகள் ஆற்றி யுள்ளனர். கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் வேட்டுவர் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. கோயில்கள் திருப்பணியுடன் ஏரி,

குளங்கள் அமைத்து நாட்டு நலம் பேணியுள்ளனர். இவர்களில் பலர் ''ஊராளிகள்'' ''நாடாழ்வார்'' என்று குறிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பலர் வேளாண்மையை மேற்கொண்டு ''வேளான்'' பட்டம் பெற்ற துடன் ''மேழிக் கொடிக்குரியோர்'' என்றும் கூறப்பட்டுள்ளனர்.

'புன்னத்துப் பூவாணிவேட்டுவன் கரியான் ஆன மருதங்க வேளான்'

'பட்டாலியில் காவலன் குறும்பிள்ளரில் செயங்கொண்ட வேளான்'

என்பன கல்வெட்டுத் தொடர்கள்.

அரசரால் சிறப்புப் பெற்று ஆட்சியாளர்களாகவும் பலர் இருந் துள்ளனர். ''வெங்கம்பூரில் புல்ல வேட்டுவரில் வாணகோவரையன் வாழவந்தான் ஆன சுந்தரபாண்டிய வீரசிங்க தேவன்'' ''ஈங்கியூரில் காவலன் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்கப் பல்லவரையன்'' என்பன கல்வெட்டுத் தொடர்கள். சிலர் அதியமான், தொண்டைமான், சேனாவரையர் போன்ற பட்டப் பெயர் தாங்கியுள்ளனர்.

இத்தகு சிறப்பு வாய்ந்த வேட்டுவர் சமூகத்தில் தோன்றிய பெண்களும் பலர் ஆலயத் திருப்பணி செய்தும், கொடைகள் பல அளித்தும் புகழ் பெற்றுள்ளனர். அவை கல்வெட்டுக்களாகவும் பல இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

காங்கய நாட்டு ஆரத்தொழுவில் வேட்டுவர் கள்ளிப்பிள்ளர் தலைவன் மனைவி பாண்டாண்டி என்பவர் அவ்வூர்க்கோயில் திருப்பணி செய்துள்ளார்.

காங்கய நாட்டுப் பட்டாலியைச் சேர்ந்த வேட்டுவர் குறும்புள்ள ரில் காவன் அரையன் என்பவரின் மனைக்கிழத்தி நாயகவிச்சி நாயன் சிலம்பி என்பார் தன் மணவாளனின் நலத்தின் பொருட்டு பிடாரி கோயில் ஒன்றை அமைத்தார். அக்கோயில் நிலைகாலில் அதற்குரிய கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

பட்டாலியில் வாழ்ந்த வீராந்தகப் பல்லவரையன் மகளும் வேட்டுவரில் காவலன் குறும்பிள்ளரில் அதியமான் மனைக்கிழத்தி யும் ஆன வீரி என்பவர் அவ்வூர் பால்வெண்ணீசுவரர் கோயிலில் திருப்பணி செய்ததாக அங்குள்ள விக்கிரம சோழன் கல்வெட்டுக் கூறுகிறது.

காங்கயம் அகத்தீசுவரர் கோயில் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டபோது அர்த்தமண்டபத் திருப்பணி முழுவதையும் மேற்கொண்டு அதற்குரிய பொன்னைக் கொடுத்தவர் வேட்டுவர் சமூக செங்காளி மனைக்கிழத்தி புளியம்மை என்பவர்.

பல வேட்டுவர் சமூகப் பெண்கள் விளக்குக் கொடை அளித்த தாகப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

''காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வான் மனைக் கிழத்தி அவினாசியாண்டி''.

''காவலன் போடன் மனைக்கிழத்தி கோவி''

''காவலன் வளவர் மனைக்கிழத்தி சோழாண்டி''

என்போர் அவருள் சிலர்.

## சிவனை மணந்த வடிவாம்பாள்

கரூர் அப்பிபாளையம் வேட்டுவர்குலப் பெண் வடிவாம்பாள். பசுபதீசுவரர் மீது கொண்ட பக்தியால் சந்தன மரத்தில் தந்தை செய்து கொடுத்த லிங்கத்தை எப்பொழுதும் பூசை செய்து கொண்டிருந்தாள். திருமணத்தை வெறுத்து மணந்தால் பசுபதீசுவரரையே மணப்பேன் என்றாள். ஒருநாள் இன்றிரவு என்னை மணம் செய்வது பற்றிச் சிவபெருமான் உங்கள் கனவில் கூறுவார் என்றாள்.

அவ்வாறே கனவில் சிவபெருமான் கூறி அன்றைக்கு ஊரெங்கும் மலர் மாரி பொழியும் என்றார். அவ்வாறு நிகழ்ந்த ஒரு நாளில் ஊரார் வடிவாம்பாளை அழைத்துச் சென்று பசுபதீசுவரர் சன்னிதியில் விட்டனர். உட்சென்ற வடிவாம்பாள் சிவனோடு ஐக்கியமானார். இன்றும் கரூர் பசுபதீசுவரர் கோயில் பங்குனி உத்தரத் திருவிழாவில் ஆறாம் திருநாள் அப்பிபாளையம் சென்று வடிவாம்பாளை மணம் செய்து கொண்டு ஏழாம் நாள் திரும்பி வரும் உற்சவம் நடைபெறு கிறது. வலப்புறம் வடிவாம்பாள் சௌந்தரநாயகியாகக் காட்சியளிக் கிறார். இடப்புறம் அம்மன் அலங்காரவல்லி.

❖ ❖ ❖

# 25. கவரிமான் அனைய குப்பநாச்சி

கைக்கோளர், செங்குந்தர், முதலியார் என்று அழைக்கப் பெறும் நெசவுத் தொழிலைக் கைக் கொண்ட பெருமக்கள் தமிழகம் எங்கும் பரவி வாழும் சிறப்புமிக்க ஓர் இனமாகும். முருகப் பெருமான் அவதரித்த பின் காமாட்சியம்மன் சிலம்பில் தோன்றிய நவ வீரர்கள் வழி வந்த வர்கள் அவர்கள். அசுரர்களையழித்துத் தேவர் சிறை மீட்டபின் என்ன தொழில் செய்யலாம் என இறைவனைக் கேட்க அவர் ''மக்கள் மானம் காக்கும் நெசவை மேற்கொள்ளுக'' என்றார் என்பர்.

இதனை வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் சதகம்,

''கயிலாய கிரியதனில் முப்பத்து முக்கோடி
கடவுளர் பணிந்துபோற்ற
கந்தர்உற் பத்தியா கிப்பின்னுநவ வீரர்கள்
காமாட்சி உமைசிலம்பில்
செயமொடு பிறந்துஅசுரர் வங்கிசம் அழித்துநல்
தேவர்சிறை மீட்டுநன்றாய்
சீவனம் செய்வதற்கு உரியதொழில் யாதெனச்
செய்வதும் நெய்தொழில்என
வயனமொடு உகந்துமா னிடவர்க்கு அபிமான
மதுகாத்து மகிமைபெறவே
வந்தசெங் குந்தமா முதலியார்கள் இவர்என
வகுத்தனர்கள் ஆதி நூலோர்''.

என்று கூறுகிறது.

கொங்கு நாட்டு முதலியார்கள் வேளாளர்கள் போல் சடங்கு செய்து ''கொங்குமுதலியார்'' எனப் பெயர் பெற்றனர். இதனை

''ஆதிகுலம் செங்குந்தர் அதனில்வரு கொங்கனுக்கு
சாதிகுலம் கல்யாணம் தனதுமுறைப் படியாக

நீதியுடன் எந்நாளும் நிலைத்திருக்க வேண்டும்என
ஓதிவைத்தான் பூந்துறை நாட்டு உலகுடைய உத்தமனே''

என்ற தனிப்பாடல் விளக்குகிறது.

வேளாளர் சடங்குகள் சிலவற்றை செங்குந்த முதலியார்கட்கு அளித்தவர் வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த உலகபுரம் கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை உலகுடையார் எனத் தனிப்பாடல் கூறுகிறது.

வேந்தர்களிடம் ''கைக்கோளப்படை'' என விளங்கி, ஆலயங் களைக் காத்து ''பொற்கோயில் கைக்கோளர்'' என்று பெயர் பெற்று, நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்களைக் கொங்கு வேளாளர் ஆவணம் ''கைக்கோளனார்'' எனச் சிறப்புடன் குறிக்கிறது.

பொன்னர்-சங்கர் ஆகிய அண்ணன்மார் வளநாட்டை நீதியுடன் ஆட்சி செய்யும்போது பல்வேறு இடையூறுகள் செய்த வேட்டுவர் தலைவன் தலையூர்க்காளி ஒருமுறை வளநாடு வந்து திருக்காம் புலியூர், செக்கநத்தம், பழைய செயங்கொண்ட சோழபுரம், கருப்பத்தூர், மணத்தட்டை, குளித்தலைப் பகுதியில் கொள்ளையிட்டதுடன் பச்சணா முதலியார் மகள் குப்பநாச்சி என்ற குப்பாயியை சிறை எடுத்துச் சென்றனர். ''வாடா மரிக்கொழுந்து'' ''மலராத மல்லி மொக்கு'' என வருணிக்கப்பட்ட குப்பாயியை தூங்கும்போது சிறையெடுத்துச் சென்றனர்.

அண்ணன்மார் ஆட்சியில் செங்குந்தர், செட்டியார் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் கவலை எதுவும் இன்றிப் பாதுகாப்புடன் வாழ்ந்தனர். சிறை சென்ற குப்பாயி விழித்தவுடன் தன் நிலையை எண்ணிப் புலம்பினாள். அண்ணன்மார் காப்பாற்றுவர் எனக் கவலை யின்றி இருந்த அவள் அவர்களைத் தம் அண்ணனாகவே பாவித் திருந்தாள். குப்பாயி மனம் கலங்கி,

''சிங்கம் இருக்குதென்று திகிலில்லை என்றிருந்தேன்
சிங்கமே எங்கொளித்தாய் திகில்வந்து சேர்ந்ததிப்போ
ஆனை இருக்குதென்று சின்னண்ணா அச்சமில்லை
என்றிருந்தேன்

ஆனையே எங்கொளித்தாய் இப்போ அச்சம் வந்து நேர்ந்த தண்ணா"
என்று புலம்பினாள். இனி தலையூர்க் காளி வீட்டில் தண்ணீர் சுமந்து சாணி தட்ட வேண்டியிருக்கும் என அஞ்சினாள். பெருங்கூக்குரல் இட்டு அழுதாள்.

அத்தை மகன் மைத்துனர் எதிரிலாப் பெருமாளோடு வேட்டைக்கு வந்த சங்கருக்குக் குப்பாயியின் புலம்பல் காதில் கேட்டது. உயர்ந்த குன்று மேலேறிப் பார்க்கையில் தலையூர்க்காளி கொள்ளை கொண்டு போவதும், பச்சணா முதலியார் மகள் குப்பாயி சிறைபிடிக்கப் பட்டதையும் அறிந்தனர்.

அவர்களை அழித்து குப்பாயியைச் சிறை மீட்க அண்ணன் பொன்னரின் அனுமதி வேண்டும் என்பதால் மைத்துனர்,

''வெள்ளாளன் பெண்ணை இந்த
வேட்டுவனும் சிறையெடுத்தால்
சிறையெடுத்த வேட்டுவனைச்
சீவுவேன் அவன் தலையை''

என்று கூறிய சங்கரை அண்ணனிடம் அனுப்புகிறார்.

சங்கர் பொன்னரிடம் வந்து வேடுபடையை அழித்துக் குப்பாயியைச் சிறைமீட்க அனுமதி கேட்டார். அண்ணன் அனுமதி தரவில்லை. சங்கர் மீண்டும் சிறை மீட்க வேண்டும் என்று சொல்ல இருவருக்கும் வாக்குவாதம் நடைபெற்றது. அப்போது தங்கை அருக்காணித் தங்கம் வந்து சங்கர் சொல்வதை ஆதரித்து,

''ஒக்கப் பிறக்கணுமா ஒரு முலைப்பால் உங்கணுமா?
கூடப் பிறந்து அண்ணா கூட்டுப்பால் உங்கணுமா?
ஒக்கப் பிறந்து அண்ணா உடன்பிறப்பு அல்லாவிடினும்
உதிரப் பிறப்பு அண்ணா உடன்பிறப்பு ஒண்ணல்லவா?
பெண்சிறை எடுத்துப்போக உன்மனது பொறுக்குதா?''

என்று என்னைச் சிறையெடுத்தால் உன் மனம் பொறுக்குமா? நான் வேறு குப்பாயி வேறா? என்று கூறவே சங்கருக்கு அனுமதி கிடைக்கிறது.

குப்பாயி சிறை மீட்கப்பட்டு அண்ணன்மார் அரண்மனை யிலிருந்தாள். அண்ணன்மார்

''முதலியார் சனங்களையும் முழுசாகக் கூட்டி வந்து
குப்பநாச்சி யம்மாளைக் கூட்டிப் போங்கள்''

என்று கூறினர். முதலியார்கள் ''ஊரை விட்டுப் போன சிறையை எப்படி ஏற்றுக் கொள்வது'' எனக் குப்பநாச்சியை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். அண்ணன்மார் வற்புறுத்தவே நீங்கள் சரிசமமாகக் குப்பநாச்சியுடன் உணவு உட்கொண்டால் அவளை ஏற்றுக் கொள் கிறோம் என்றனர்.

தாதிமார்கள் குப்பநாச்சியை நீராட்டித் தலைகோதி முடித்து பட்டுப் புடவை கொடுத்து ஆபரணங்கள் பல அணிவித்து அண்ணன் மார் தங்கை அருக்காணியுடன் உடன் உண்ணச் செய்தனர். தங்கை அருக்காணி ''இந்த உலகில் நான் இருக்கும் மட்டும் உன்னைச் சமமாகப் பாவிப்பேன்'' என்று கூறி விடை கொடுத்தாள்.

தன் பெற்றோர் உற்றார் உறவினரோடு ஊர் திரும்பிச் செல்லு கையில் மனம் புண்ணாகி மிகக் கவலை கொண்டாள் குப்பநாச்சி. ஏங்கி மனம் கலங்கினாள்.

''பெண்ணாகப் பிறந்தவளுக்கு - இத்தனை
பிழைகள் வந்து நேரணுமா?
ஊழியுள்ள காலம்எல்லாம் - ஒரு
ஏச்சுதலை ஆச்சுதிப்போ
இருந்து பேச்சுக் கேட்பதற்கு - நான்
இறந்து போனால் மோட்சமுண்டு''

என மனதில் எண்ணி இறைவனை வணங்கி இனி உயிருடன் இருக்க லாகாது எனத் தன் நாக்கைப் பிடித்து இழுத்துத் தற்கொலை செய்து கொண்டாள்.

''தெய்வமே என்னை வரவழைத்துக் கொள்ளும் சாமி'' என்பதே குப்பநாச்சி கூறிய கடைசி வார்த்தை ஆகும்.

''மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்'' போல ''மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே'' என எண்ணி மரணமடைந்த குப்பநாச்சியை எண்ணும்போது நம் மனம் திடுக்கிடுகிறது.

கொங்கு வேளாளர் பொருட்டுப் பகைவரை எதிர்த்துப் போர் செய்த நாவிதன் குமரன் இறந்துவிடவே அவன் மனைவி சின்னம்மாள் 'நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிறேன்'' என்றாள். காங்கேய மன்றாடியாரும் காணியாளக் கவுண்டர்களும் ''நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டியதென்ன பொட்டி மகளே'' என்று தடுத்து ஆதரித்ததை காடையூர்ச் செப்பேடு கூறுகிறது. இன்றும் பேச்சு வழக்கில், ''நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்'' என்று கூறுகிற வழக்கம் இருப்பதைக் காணுகிறோம்.

✣ ✣ ✣

# 26. வீரப்பெண் மீனாட்சி

''கலம் செய் கோ'' என்று சங்க இலக்கியங்கள் புகழ்ந்து கூறும் சமூகம் வேட்கோவர் சமூகம். குலாலர், வேளார், குயவர், மண்ணுடை யார் என்றும் அழைக்கப்பட்டவர்கள் அவர்கள். சாலிவாகனன் வழி யினர் என அழைத்துக் கொள்ளும் அவர்கட்குப் பல பட்டங்கள் உண்டு.

''வீமனைப் பணி கொண்டவர்'' ''கரிகால் சோழனை வளர்த் தவர்'' ''ஆவுடையார் சம்பந்தமானவர்'' ''தில்லையம்பலத்தில் முதுமை போய் இளமை பெற்றவர்'' என்றெல்லாம் சிறப்பிக்கப் பட்டவர்கள். மதுக்கரைப்பட்டயம், இருபத்தி நாலு நாட்டுப் பட்டயம், அரைய நாட்டுப் பட்டயம், சென்மப் புலவன் பட்டயம், தீர்த்தகிரிச் செப்பேடு, மீனாட்சி செப்பேடு, பழனி-தாராபுரம் திருநீலகண்டர் மடத்துச் செப்பேடுகள் ஆகியவை அவர்கள் பெருமை விளக்கும் ஆவணங்கள் ஆகும்.

நற்குடி நாற்பத்தெண்ணாயிரம், பசுங்குடி பன்னீராயிரம் பேர் கொங்கு நாட்டில் குடியேறிக் காடழித்து நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிக் கோயில் அமைத்துக் குடிமக்கள் ஆங்காங்கு குடி யேறி வாழத் தலைப்பட்ட போது 'நவபாண்டங்கள்' செய்து கொடுக்கக் குலாலர் இல்லையே என்று கொங்கு வேளாளர்கள் எண்ணினர்.

பாண்டிய நாடு சென்று கொங்கு 24 நாட்டுக்கும் 24 குலாலர் குலப் பெருமக்களை வருமாறு அழைத்தனர். அவர்கள் ''நாங்கள் இவ்விடத்தில் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனர் இவர்களை யெல்லாம் விட்டு எப்படி உங்கள் நாட்டுக்குக் குடி வாரது'' என்று கூறி னார்கள். கொங்குநாடு வரும் குலாலர்கட்குக் காணியாட்சிப் பட்டயம் கொடுக்கிறோம் என்றும், நாடும் ஊரும் மண்ணும் மனையும் எங்களுக் குண்டானபடி உங்களுக்கும் கொடுப்போம் என்றும் மதுக்கரைச்

செல்லாண்டியம்மன் கோயில் முன்பாகப் பட்டயம் எழுதிக் கொடுக்கிறோம் என்றும் வேளாளர்கள் கூறினர்.

''கொள்ளி கோடி இருவருக்கும் ஒன்னே ஒன்னு. உங்குறது திங்குறதும் இருவருக்கும் ஒன்னு. கொள்கிறது கொடுக்கிறது பிறத்தியம்'' என்று பட்டயத்தில் எழுதிச் சில சீர்களையும் செய்து கொள்ளுமாறு கூறினர். வீட்டு உபயோகத்திற்கும், குடும்பச் சடங்குகட்கும், கோயில் திருவிழாக்களுக்கும் என்ன என்ன மட்பாண்டங்கள் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும். மட்பாண்டங்கள் பெற்றுக் கொண்ட குடிமக்கள் அதற்குரிய பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று மிக விரிவாக எழுதினர். அதற்கு மதுக்கரைப் பட்டயம் என்று பெயர். கோயிலுக்கு வேண்டிய உருவாரங்கள் செய்வது பற்றியும் அப் பட்டயத்தில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. மதுக்கரைப் பட்டயம் அவர்களைக் கொங்குத் திருநீலகண்டர் என்று சிறப்புடன் குறிக்கிறது.

அது மட்டும் இன்றி வேட்கோவர்களுக்கு மட்பாண்டங்கள் செய்யவும், கோயில் உருவாரங்கள் செய்யவும் பொம்மைகள் செய்யவும் ''அரண்மனை வரிவட்டம், சுங்கம், பேரம், மனைவரி, புதுவரி சாலிவாகன வங்கிசத்தாருக்கு இல்லை என்று கட்டுப் பண்ணியிருக்கிறோம்'' என்று செப்பேடு பட்டயம் எழுதித் தந்தனர்.

காவேரிப்பட்டணம் அருகில் கெண்டிக்கோட்டை என்ற ஊரில் பல வேட்கோவர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அவர்கள் திம்மி செட்டி, மல்லி செட்டி, வீரி செட்டி, ரங்கி செட்டி, பங்காரு செட்டி, திருமலை, பொக்கிசம் ஆதிசெட்டி, மாடக்கல் சோலை செட்டி ஆகியோர் செப்பேட்டின்படி இதுவரை வரி எதுவும் கொடுக்காமல் இருந்தனர்.

ஒருநாள் மயிலாபுரிப் பட்டணத்திலிருந்து ராதவீர முஷ்ட்டி, பத்திர வீரமுஷ்ட்டி, லிங்கப்ப வீரமுஷ்ட்டி என்ற மூவர் வந்து வேட்கோவர்களிடம் நீங்கள் அனைவரும் வீட்டுக்கு இரண்டு பணமும், வரி வசூலிக்கும் எங்களுக்கு மூன்று வேளை விருந்தும் அளிக்க வேண்டும்

என்றனர். ஆனால் வேட்கோவர்கள் நாங்கள் வரி எதுவும் கொடுக்க மாட்டோம் என்றனர்.

மாடக்கல் சோலைசெட்டி வீட்டு வாசலில் படுத்துக் கொண்டு கத்தியை வயிற்றின் மேல் வைத்து, வரி கொடுக்காவிட்டால் இறந்து விடுவோம். உங்களுக்குப் பழி வரும் என்று ''ரணபாவாடம்'' போட்டனர். வரி கேட்டும் கொடுக்க மறுத்தும் வாக்குவாதம் நடந்தது. வேட்கோவர் சோலைசெட்டி மகள் மீனாட்சி என்பவள். அவள் நன்கு கற்றறிந்தவள். அவள் மிக அன்பாக ஒரு கோழிச் சேவல் வளர்த்து வந்தாள். அவள் சொன்னபடி அச்சேவல் கேட்கும். அதன்மீது மீனாட்சி உயிரையே வைத்திருந்தாள். அந்தச் சேவல் வீட்டுக்குள் வந்தது, ஒரு வீரமுஷ்ட்டி தன் கத்தியால் அந்தச் சேவலை வெட்டி விட்டான். சேவல் இரு துண்டானது.

அதைக் கண்ட மீனாட்சி ''அடே வீரமுஷ்ட்டி; என்னை வெட்டுவதற்குப் பதிலாக என் அன்புக் கோழிச் சேவலை வெட்டினாயா'' என்று ஆர்ப்பரித்தெழுந்தாள். அழுது கண்ணீர் விட்டாள்.

அதற்கு ஒரு வீரமுஷ்ட்டி ''பெண்ணே, நீ கொடுக்கும் இரண்டு பண வரியில் ஒரு பணத்தைக் கோழிச் சேவலுக்குச் சாட்டிக்கோ'' என்று மிக அலட்சியமாகக் கூறினான்.

மீனாட்சி வீரமுஷ்ட்டிகளிடம் என் கோழிச் சேவலை எழுப்பிக் கொடுத்தால் நீங்கள் கேட்கும் வரியைக் கொடுக்கிறோம் என்று கூறினாள். ஊரே கூடி என்ன நடக்குமோ என்று ஆவலுடன் காத்திருந்தனர். வீரமுஷ்ட்டிகள் என்னென்னவோ செய்து பார்த்தனர். சேவல் எழவில்லை. வீரமுஷ்ட்டிகள் செய்வதறியாது திகைத்தனர்.

வீரமுஷ்ட்டிகள் மீனாட்சியிடம் நீ உன் சேவலை எழுப்பினாயானால் வரியும் விருந்தும் நீக்கி விடுகிறோம் என்றனர். அது மட்டுமல்ல தங்கள் விருதுகள் அனைத்தையும் வேட்கோவர் சமுதாயத்திற்குக் கொடுத்துவிட்டு இன்னும் பல விருதுகளும் கொடுப்போம் என்றனர். மீனாட்சி தன் சேவலை எழுப்பினாள். இந்நிகழ்ச்சி மீனாட்சி செப்பேட்டில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''மீனாட்சியம்மனும் பாசை பந்தயங்கள் கூறி ஆக்கரிச்சு திருநீலகண்டர் பாதம் அறிய சிவகாமியம்மன் அனுக்கிரகம் உண்டா கவும் சாலிவாகன வம்சத்திற்குக் கீர்த்தியுண்டாகவும் என்று புலம்பி மீனாட்சியம்மன் ஆக்கரிச்சு தீர்த்தம் பாவாடத்தின் மேல் தீர்த்தம் தெளிக்க எவ்வன ரூபமாக சேவல் எழுந்திருந்தபடியினாலே வீர முஷ்ட்டிகள் தங்களுடைய விருதுகளையெல்லாம் குடுத்து சாலி வாகன வம்சத்துக்கு நாலு சமுத்திரம் ஐம்பத்தாறு தேசமும் கொங்கு இருபத்திநாலு நாட்டுக்கும் வரியில்லை'' என்பது அந்தப் பகுதி யாகும். தன் வீரத்தால் தான் சார்ந்த சமூகத்துக்கே பெருமை தேடித் தந்தாள் வேட்கோவர் குல மீனாட்சி.

இதற்காக எழுதப்பட்ட செப்பேடு மீனாட்சியை 'மீனாட்சி யம்மன்' என்றே அழைக்கிறது. இச்செப்பேட்டில் பெனுகொண்டா, கோலார், ஒசூர், தாராபுரம், கெண்டிக்கோட்டை, மோதூர், ரத்னகிரி, தேவபுரம் செட்டிகள் கையொப்பமிட்டுள்ளனர். மற்றும் பட்டன், புலவர், கூத்தாடி, தொண்டன் ஆகியோருக்கும் வரியில்லை என்று கூறப்பட்டுள்ளது. செட்டி என்றும் குலாலர் குலப் பெருமக்களுக்குப் பட்டம் உண்டு. இன்றும் குலாலர்களைச் 'செட்டுக்காரர்' என்று அழைப்பர்.

✣ ✣ ✣

# 27. பெயர் தெரியாப் பெண்டிர்

கொங்கு வேளாளர் குடும்பத்தில் பிறந்து பல பெண்கள் தம் செயற்கரிய செயலால், கொடைத் திறத்தால், புலவர்களைப் பேணிய பண்பால் மிகச் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் புகழ்மிகு போற்றத்தக்க அரிய செயல்கள் புலவர் பெருமக்களால் பாடப் பெற்று இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. மக்கள் அவர்களின் பண்புகளைப் பாராட்டி நினைவு கூர்ந்த காரணத்தால் தான் இன்றும் அவர்கள் செயல் நின்று நிலவி நமக்குத் தெரிகிறது. ஆனால் அவர்களில் சிலருடைய இயற்பெயர் என்ன என்பது நமக்குத் தெரியாததுதான் வியப்பினும் வியப்பு. பெயர் விரும்பாத் தன்மையால் அவர்கள் மிகப் பெரும் தியாகிகளாக விளங்குகிறார்கள். இன்றும் பெரும்பாலும் இராமசாமி மனைவி, திருமதி இராமசாமி என்று மட்டுமே கூறப்படும் வழக்கம் தானே பெரும்பாலும் உள்ளது.

## காலிங்கராயன் தாயார்

பூந்துறை நாட்டு வெள்ளோட்டைச் சேர்ந்த கனகபுரத்தில் தோன்றி வீரபாண்டியன் படையில் சேர்ந்து தளபதியும் அமைச்சருமாக ஆகித் தன் பெருமதியால் காலிங்கராயன் கால்வாயை 56½ மைல் நீளத்துக்கு வெட்டித் தானோ தன் குடும்பத்தாரோ பயன்படுத்தக் கூடாது என்று நாட்டுடைமை ஆக்கியவர் காலிங்கராயன். 1282ஆம் ஆண்டு தை 5ஆம் நாள் அணை, கால்வாய்ப் பணி முற்றுப் பெற்றது. கல்வெட்டும், செப்பேடும், இலக்கியமும் காலிங்கராயன் புகழ் பாடுகிறது.

'காலிங்கராய வினியோகம்' என்ற வரி குடிமக்களிடம் வசூலிக் கப்பட்டுக் கால்வாய் வெட்டப்பட்டது. பல சமூகப் பொதுமக்கள் ''மகமை'' வசூல் செய்து கொடுத்தனர். வீரபாண்டியனும் ஓரளவு உதவி செய்தான். ஊராட்சிக்கோட்டை மலையும் அங்கிருந்து அணைக்கு வரும் வழியும் ஆயிரம், ஆயிரம் பொன் விலைக்கு வாங்கப்பட்டது.

இன்றும் பவானி வட்டத்தில் 'மலை ஆயிரம் தடம் ஆயிரம்' என்ற பழமொழி வழங்குகிறது.

12 ஆண்டுகள், பல்லாயிரக்கணக்கான மக்கள் இரவு பகல் வேலை செய்தனர். அதனால் கூலி கொடுக்கச் சில சமயம் பணம் பற்றாக்குறை ஏற்பட்டது. அதை அறிந்த காலிங்கராயன் தாயார் ''மகனே காலிங்கராயா! கவலைப்படாதே. நம் வீட்டில் ''தயிரு விற்ற பணம் தாவாரம் வரை கிடக்குது. மோர் விற்ற பணம் மொகுட்டு வரை கிடக்குது. நான் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன். தொடர்ந்து கால்வாயை தைரியமாக வெட்டு'' என்றாராம்.

இன்றும் காலிங்கராயன் தாயார் கூறிய சொற்களைப் பலர் நினைவு கூர்ந்தாலும் அவ்வாறு கூறிய காலிங்கராயன் தாயார் பெயர் என்ன வென்று எவருக்கும் தெரிவதில்லை. ஆவணங்கள் கூட காலிங்கராயன் தந்தை பெயர் நஞ்சையகவுண்டர், சாத்தந்தை குலம் என்று கூறுகிறது. ஆனால் தாயார் பெயரை எங்கும் குறிக்கவில்லை.

## புலவரைச் சுமந்த புண்ணியவதி

பழையகோட்டைப் பட்டக்காரர்கள் பலரும் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்துப் பொன்னும் பொருளும் வாரி வாரி வழங்கியவர்கள். எப்பொழுதும் புலவர்கட்கு அவர்கள் அரண்மனைக் கதவுகள் திறந்தே இருக்கும்.

''வேளைஎன்று வந்தவர்க்கு வேளைஎன்று சொல்லாமல்
நாளும் பரிசளிக்கும் நல்லதம்பிச் சர்க்கரையார்''

என்பது புலவர் வாக்கு. அதாவது ''பசிவேளை'' என்று வந்தவர்க்கு ''இன்னொரு வேளை'' வா என்று கூறாமல் அப்பொழுதே கொடுப்பவர்கள் பழையகோட்டை மரபினர்.

புலவர்கள் வந்தால் அவர்கள் பாடலைக்கேட்டு மகிழ்ந்து, உபசரித்துப் பரிசு வழங்குவதோடு அவர்களுடன் உடன் அமர்ந்து உணவுண்டு அவர்கட்குத் தக்கபடி மரியாதை செய்வது வழக்கம். புலவர்கட்குப் பந்தியில் குடும்பப் பெண்களே பரிமாற வேண்டும் என்பது பழையகோட்டை மரபு.

அவ்வழக்கப்படி ஒரு சர்க்கரை மன்றாடியார் புலவருடன் அமர்ந்து விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அன்றைக்குப் பரிமாறியது பட்டக்காரரின் தாயார். உணவுண்ணும் போது பரிமாறத் தாயார் புலவரிடம் வந்தார். புலவர் பழைய கோட்டையாரின் பொறு மையைச் சோதிக்க விரும்பினார். அப்போது யாரும் எதிர்பார்க்காத வகையில் புலவர் பரிமாற வந்த பட்டக்காரரின் தாயார் முதுகில் ஏறினார். திடுக்கிட்ட அம்மையார் ஒன்றும் பேசாமல் பட்டக்காரரைப் பார்த்தார். பட்டக்காரர் "அம்மா என்னை அல்லும் பகலும் முன்னூறு நாள் சுமந்த தாங்கள் தமிழ்த்தாயின் தவப்புதல்வராகிய இப்புலவர் பெருமானை மூன்று நொடி சுமக்கக் கூடாதா?" என்று அமைதியாகக் கூறினார். புலவர் வெட்கப்பட்டுக் கீழிறங்கி அம்மையாரிடமும் பட்டக் காரரிடமும் மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார். புலவர் முதுகில் ஏறப் பொறுத்த பெண்மணி பெயரும் தெரியாது. இதனைக் கீழ்வரும் கொங்கு மண்டல சதகப் பாடல் விளக்குகிறது.

"திருத்து புகழ்பெறும் ஆனூரில் சர்க்கரை செந்தமிழோன்
விருத்த முடன்அன்னை மேலேறத் தாய்வெகு ளாமல்எனைப்
பொருத்த முடன்பத்து மாதம் சுமந்து பொறையுயிர்த்தாய்
வருத்தம் இதில்என்ன என்றான் அவன்கொங்கு மண்டலமே"

## மாங்கல்யம் தந்த மங்கையர் திலகம்

பழையகோட்டை மரபில் வந்த சம்பந்தச் சர்க்கரையாரும் அவர் மனைவியும் மதுரை நாயக்கர் ஆட்சியின் போது தளவாய் இராமப் பையன் அதிகாரநாளில் வரி முழுமையாகச் செலுத்தாத காரணத்தால் சங்ககிரிக் கோட்டையில் சிறையில் இருந்தனர். புலவர் ஒருவர் அங்கும் வந்து பாடியவருக்குச் சம்பந்தச் சர்க்கரையார் மனைவி தன் தாலியைப் பரிசாக அளித்தார் என்றும், அப்புலவர் பெயர் வெற்றிவேல் கவிஞர் என்றும் முன்பு கண்டோம்.

தமிழ்ப்புலவருக்கு மாங்கல்யத்தைத் தந்த மங்கையர் திலகம் பெயர் என்ன என்பதை வரலாற்றில் காணமுடியவில்லை.

## மழலையின் கொடையில் மகிழ்ந்த தாயார்

கொங்கு நாட்டு நான்கு பட்டக்காரர்களில் ஒருவர் காங்கயம் செங்கண்ணகுலப் பல்லவராயர். கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த பேரரசர்கள் நல்லாட்சி நடத்த உற்றுழி உதவிய பெரிய வீரப்பரம்பரை யினர். பல்லவராயர்கள் புலவர்கள் பலரை ஆதரித்துப் புகழ் கொண்டவர்கள்.

பிற்காலப் பல்லவர் மரபில் வந்த கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவன் சோழர்கட்குப் பெரிதும் தொல்லை கொடுத்தான். ஒரு சோழ மன்னனைச் சேந்தமங்கலம் என்ற ஊரில் கோப்பெருஞ் சிங்கன் சிறை வைத்தான். சோழர்கள் போசளர் துணை கொண்டும் கோப்பெருஞ் சிங்கனை வென்று அடக்க முடியவில்லை. இறுதியில் காங்கயம் செங் கண்ணகுலப் பல்லவராயரின் முன்னோர் ஒருவர் கோப்பெருஞ்சிங்கனை வென்று அடக்கிச் சோழநாட்டையும், சோழர்களையும் காப்பாற்றினார்.

செங்கண்ண குலத்தாருக்குக் கொங்கு நாட்டு எல்லை கடந்து திருச்சிராப்பள்ளி, திருவெள்ளறை, சீரங்கம், சிதம்பரம், குடுமியா மலை, சீர்காழி போன்ற பல ஊர்களில் காணியிருப்பதாகக் கூறப்படு கிறது. சோழன் தனக்கு வெற்றி தேடித்தந்த செங்கண்ண குலத் தாருக்கு அளித்த சிறப்புக் காணியாக அவை விளங்குகின்றன.

சோழ மன்னனுக்காகப் பல்லவனை வென்ற செங்கண்ண குலத் தலைவர் பெயர் லிங்கய்யன். லிங்கய்யனைப் பாராட்டிச் சோழ மன்னன் 'பல்லவராயன்' என்ற பட்டத்தைக் கொடுத்தான். பின் அப் பட்டத்தைப் பின் வந்த எல்லோரும் புனைந்து கொண்டனர். இதை ஒரு தனிப்பாடல் விளக்குகிறது.

''போரிட்ட பல்லவன் தேகத்தை வெட்டியே
பொன்மகுடம் நீ படைத்தாய்
செங்கதிர்ப் பரிதிகுல மகராச ராசனாம்
திரிபுவனச் சக்கரவர்த்தி
சித்தம்மகிழ் தளகர்த்தர் லிங்கயப் பல்லவன்''

என்பது அத்தனிப்பாடலாகும்.

லிங்கயப் பல்லவன் மகனுக்குச் சோழ மன்னன் பொன்னால் செய்யப்பட்டதும், நவரத்தினங்கள் பதித்ததுமான ஒரு நடை வண்டியைப் பரிசாகக் கொடுத்தான். அது தேர் வடிவில் அழகாகச் செய்யப்பட்டு இருந்தது. இளவயதுச் சிறுவன் நடை கற்க அதை ஓட்டிக் கொண்டு இருந்தான்.

பல்லவராயரிடம் பாடிப் பரிசில் பெற்றுத் தம் வறுமையைப் போக்கிக் கொள்ள ஒரு ஏழைப் புலவர் ஒரு நாள் காங்கயம் வந்தார். அன்று பல்லவ ராயர் ஊரில் இல்லை. புலவர் துயரத்தோடு வருந்தி நின்றார், ஏங்கினார்.

புலவர்கட்குக் கொடை கொடுப்பதை அருகிலிருந்து பார்த்து அறிந்திருந்த சிறுவன் புலவரை அருகில் அழைத்தான். தான் விளை யாடிக் கொண்டிருந்த நவமணிகள் பதித்த விலை உயர்ந்த தங்க நடை வண்டியைப் புலவரைப் பார்த்து எடுத்துக் கொள்ளுமாறு கூறினான். புலவர் வாங்காமல் தயங்கி நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சிறுவனின் தாயார் நடந்ததைப் புரிந்து கொண்டு ''மகன் அன்பாகக் கொடுக்கிறான்; புலவரே வாங்கிக் கொள்க'' என்றார். புலவர் பெரும் தயக்கத்தோடு நடை வண்டியை வாங்கிச் சென்றார். கொடை கொடுத்த தன் மகன் சின்னஞ்சிறுவன் ஆயினும் அதைத் தடுக்கக் கூடாது என்று விலை மதிப்புள்ள நடைவண்டியை அளிக்கச் செய்த பல்லவராயர் மனைவியின் பெயர் என்ன என்று தெரியவில்லை.

புலவர்கள் அச்சிறுவனை ''நடை கற்ற போதே கொடை கற்றவன்'' என்று பாராட்டினர்.

''சங்கிராம சோழன் மரகத முத்தொடு தங்கரதம்
சிங்கையில் பல்லவன் செல்வனுக்கு ஈயச் சிறுவன்மனம்
புங்கம தாகச் சிறுதேர் உருட்டிப் புலவருக்கு
மங்களம் மேவிக் கொடுத்தவன் வாழ்கொங்கு மண்டலமே''

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.

## கம்பமது கொடுத்த காரிகை

திருச்செங்கோடு வட்டம் முளசி என்னும் ஊரில் கண்ணன்குலச் செல்வர் வேலப்பன் என்பவர் வாழ்ந்து வந்தார். பெருவீரரான

வேலப்பன் பாண்டியனின் நண்பராகத் திகழ்ந்தார். ஒரு சமயம் பாண்டிய நாட்டில் பெரும்பஞ்சம் ஏற்பட பாண்டியன் தன் படை வீரர்களை முளசிக்கு அனுப்பி அவர்கள் நல்ல உணவுண்டு வாழ ஏற்பாடு செய்தான். பஞ்சம் தீர்ந்தவுடன் பாண்டியன் படை வீரர்கள் திரும்பிச் சென்றனர்.

வேலப்பன்

''தென்னவன் படைக்குச் செழிப்புறு வரையில்
அன்னம் அளித்த அன்னத் தியாகி''

என்று பெயர் பெற்றார். திருச்செங்கோட்டுக்குப் பல திருப்பணிகளை வேலப்பன் செய்துள்ளார்.

வேலப்பன் மனைவியும் நன்கு கற்றவர். அவரும் புலவர்களை ஆதரித்துப் புகழ் கொண்டவர். ஒருமுறை பாண்டிய நாட்டுப் புலவர் ஒருவர் வேலப்பனைப் பாடிப் பரிசு பெற வேண்டி முளசி வந்தார். வேலப்பன் ஊரில் இல்லை. அவர் மனைவியும் தோட்டத்திற்குச் சென்றிருந்தார்.

புலவர் தோட்டத்திற்குச் சென்றார். அங்கு கம்பங்கதிர் ஏராள மாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. போர்க்களத்தை விட இந்த ஏர்க்களம் சிறந்தது என்று புகழ்ந்த புலவர் சில கம்பங்கதிர்களை எடுத்துத் தேய்த்துச் சாப்பிடத் தொடங்கினார்.

புலவர் வருகையைக் கேள்வியுற்ற வேலப்பன் மனைவி விரைந்து வந்தார். புலவரைப் பார்த்து, ''தமிழ் ஏடு எழுதும் கைகள் கம்பங்கதிர் தேய்க்கலாமா? இங்கு என்ன ஆளா இல்லை. அது மட்டுமல்ல கம்பைத் தேய்க்கும் போது கொம்மை இருக்கும். கொம்மையோடு சாப்பிடக் கூடாது'' என்று கூறி நல்ல கம்பங் கதிர்களாகத் தேடி எடுத்துத் தேய்த்துக் கொம்மை நீக்கிப் புலவருக்குக் கொடுத்தார். வேலப்பன் மனைவி கொடுத்த கம்பு அமுதைச் சாப்பிட்டு மகிழ்ந்த புலவர்,

''பூங்கொடி மணமுள்ள பூக்களைப் பூத்துக் கொடுத்தது; கனிமரம்
சுவையுள்ள கனிகளைக் காய்த்துக் கொடுத்தது. முளசி
வேலப்பன் துணைவியாரின் திருக்கை தமிழ்ப்புலவர்
பசி அகல கம்பங்கதிரைத் தேய்த்துக் கொடுத்தது'' என்று பாடினார்.

✣ ✣ ✣

# 1. சின்னம்மன் கலித்துறை

'பழம்பூந்துறை நாடு' என்று கல்வெட்டுப் புகழுவதும், 'பூந்துறை நாடு அதிகம் எனப் புகன்றிட்டாரே' என்று இலக்கியம் இயம்புவதுமாகிய பூந்துறைநாடு 32 ஊர்களையுடையது. அதன் தலைநகர் பூந்துறை.

புகழ்மிக்க பூந்துறையின் காணியாளர்கள் காடைகுலத்தார் ஆவர். பூந்துறை

''பொன்னின்மே ழிக்கதிபர் செங்குவளை அணிமார்பர்
பூமிபாலகர் ஆனவர்
போதமிகு காடைகுல மகராசர் வாழ்கின்ற
புகழ்பெருகு காணி''

என்று பாடப்பெறும் பெருமையுடையது.

பூந்துறையில் வாழ்ந்தவர் அவிநாசிக்கவுண்டர். அவர் காடை குல நல்லயகவுண்டர் மகன். நல்லயகவுண்டர் மனைவி தேவம்மாள். அவிநாசிக்கவுண்டர் மகள் சின்னம்மாள். பேத்தி சின்னம்மாளை வளர்த்தவர் பாட்டி தேவம்மாள். செந்தமிழ்ப் பற்றும், சைவப்பற்றும் உடையவராகச் சின்னம்மாள் வளர்க்கப்பட்டாள்.

தக்க பருவம் வந்ததும் சின்னம்மாளைத் தலையநல்லூர்க் கூறைகுலக் காளியணகவுண்டர் மகன் பழனிமலைக் கவுண்டருக்கு திருமணம் செய்து வைத்தனர். தலையநல்லூர்க் கூறைகுலமும் இலக்கியப் புகழ் உடையதே. காளியண கவுண்டர் பெரும் புகழ் கொண்டவர். அரையநாட்டை நிர்வாகம் செய்து வந்ததால் அவர் தண்டிகைக் காளியண கவுண்டர் எனப்பட்டார். அவர் மீது பவானி பால பாரதி முத்துசாமி அய்யர் குறவஞ்சி இலக்கியம் பாடியுள்ளார். அவர்

''சதுரங்க சேனைசெறி அரையவள நாடனே
சம்ப்ரமிகு கூறைகுலனே
கந்தமிகு நாகீசர் அழகுதிரு வனிதையைச்
கரிவரதர் பொன்காளியை
கனவில் மறவாத உயர் காளியணன்''

என்று புலவரால் பாடப்பட்டவர்.

தலையநல்லூரில் பழனிமலைக்கவுண்டர் மனைவியாக வாழ்க்கைப்பட்ட சின்னம்மாள் பிறந்தவீடு - புகுந்தவீடு ஆகியவற்றின் பெருமைக்கு ஏற்பத் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தார்.

அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களில் கொல்லப்பட்டப் புலவர் என்பவர் ஒருவர். அவர் சீர்மிகு சின்னம்மாள் மீது ''சின்னம்மன் கலித் துறை'' என்னும் சிற்றிலக்கியமே பாடியுள்ளார்.

ஏட்டுச் சுவடியாக குண்டஞ்சென்னியகவுண்டன் வலசுப் புலவர் வீட்டில் இருந்த சின்னம்மன் கலித்துறைப் பாடல்களை பெரும் புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் 29.9.1961 அன்று ஏடு பெயர்த்து எழுதி வைத்துள்ளார். அதனை அன்புடன் வழங்கியவர் கோபி கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு. மகுடீசுவரன் அவர்கள். அப்பாடல்கள் இங்கு தரப்படுகின்றன.

## பாடல்கள்

1. பூமாது வாகவும் பாரதி யாகவும் பொன்மலையிற்
கோமாது வாகவும் நீசெனித் தாய்இக் குவலயத்தில்
காமாவ தாரன் தலைசையில் வாழ்வுயர் காளிதரு
சீமான் பழனி மகீபன் மனையிற் சின்னம்மனே.

2. ஆரும் புகழவும் அன்னமும் சொன்னமும் ஆதுலர்க்கு
நேரும் திருவென நீசெனித் தாய்நின் நிகர்உளதோ
கூரை குலத்தினில் காளி மகீபன் கொடுத்தருள்வ
சீரன் பழனி மகீபன் மனைவளர் சின்னம்மனே.

3. காயும் கறியொடு அன்னமும் சொன்னமும் கற்றவர்க்குத்
தாயின் பரிவுவொடு ஈதல்கற் றாய்தென் தலைசைவளர்
ஆயி மகீபன் தருகாளி ராயன் அருளில்வந்த
சேயன் பழனி மகீபன் மனைவளர் சின்னம்மனே.

4. போர்ந்த தயவி னுடனே எவர்க்குநல் போசனமும்
ஈந்துமென் மீதினும் பேர்படைத் தாய்உன் இணையுளதோ
பூந்துறை யாளன் அவிநாசி தரும்செல்வி யேபுகழே
தேர்ந்த பழனி மகீபன் மனையினில் சின்னம்மனே.

5. பாரேழும் போற்றவும் காசிக்கும் சேதுக்கும் பாக்கியத்தால்
பேராண்மை யாம்அவி நாசி மகீபதி பெற்றமின்னே
தாராளன் என்று நரவா கனம்பெற்ற தாட்டிகன்சேர்
சீராம் பழனி மகீபன் மனையினில் சின்னம்மனே.

6. மருவாரும் சிவகிரி வேலர்பொன் காளி மகிமையினால்
பெருவாழ்வும் செல்வமும் மாறாம லேபெற்றுப் பேர்பெறுவாய்
தருவாழ் தலைசையில் காளி மகீபன் தவத்தியென்றும்
திருவாய் பழனி மகீபன் மனையினில் சின்னம்மனே.

7. பாவலர் போற்றிய நல்லயன் தேவிநின் பாட்டியென்னும்
தேவம்மன் போலவும் கீர்த்திபெற் றாய்கொங்கு தேசமதில்
யாவரும் மெச்சும் நரவா கனப்பிர பாகிவளர்
சீவக னான பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

8. கவிவாணர் போற்றிய பூந்துறை மேவிய காடைகுல
அவிநாசி ராயன் தரும்செல்வி யேயுன் அறிவுளதோ
குவியா மலர்க்கரன் தென்தலை சைப்பதிக் கூறைகுலம்
சிவனேச னான பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

9. காற்றைப் பிடித்துக் கரகத்தில் விட்ட கதையெனவே
ஏற்றஎன் வீட்டில் செலவாகும் மாசம் இரண்டு பொதி
சோற்றுச் செலவுக்கும் தேர்ச்செல வுக்கும் துணைசெய்குவாய்
சீற்றலர் போற்றும் பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

10. பார்பெற்று வாழிநற் பொன்காளி யம்மைதன் பட்சமென்றும்
நேர்பெற்று வாழி சவுபாக் கியமும் நிறைந்துமிகும்
பேர்பெற்று வாழி பிறையா யிரம்தொழு தேபிழைத்துச்
சீர்பெற்று வாழி பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

# 2. இலட்சுமணபாரதி சீட்டுக்கவி

பழையகோட்டை மரபில் 25ஆம் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார். அவர் மனைவி வள்ளி யாத்தாள் காங்கயம் செங்கண்ணகுலப் பட்டக்காரர் 'சிவமலைப் பல்லவராயர் மகள்'. பழையகோட்டை மரபிற்கு ஏற்பத் தமிழ்ப் புலவர் களை ஆதரிக்கும் இயல்பு உடையவர். இவர் சிலம்பகவுண்டம் பாளையம் சுந்தரகவுண்டர், குட்டப்பாளையம் சேனாபதிக் கவுண்டர் ஆகியோர் துணையோடு சிவமலைக் குடமுழுக்கு விழாவைச் சிறப்புடன் நடத்தியவர்.

அவருக்கு மடவளாகம் இலட்சுமண பாரதி ஒரு சீட்டுக்கவி எழுதியுள்ளார். இவர் சிவமலைக் குறவஞ்சி, மடவளாகம் தல புராணம் முதலிய நூல்களைப் பாடியவர். சிவகிரி மயில்விடு தூது என்ற இலக்கியத்தையும் பாடியுள்ளார். சீட்டுக்கவி என்பது வள்ளலை நோக்கித் தன்னைப்பற்றி முதலில் கூறித் தனக்கு வேண்டியதைக் கொடுக்குமாறு புலவர்கள் பாடும் பாடலாகும்.

சிவபெருமானின் திருமண உற்சவத்திற்கு வேண்டிய பொருள் களைக் கேட்டு இலட்சுமணபாரதி சீட்டுக்கவி எழுதியுள்ளார்.

## சீட்டுக்கவி

திருமருவு பழனிமலை முருகேசர் அரவிந்த
செங்கமல பாத்தியானம்
திரிகின்ற தண்டுமிண் டுகள்கொண்ட கவிமலை
செகுத்திடச் செய்வச்சிரஞ்
செய்யகார் காலமழை என்னவே மதுரித
செழுந்தமிழ் கொழிக்குமேகம்
தென்பரவு மங்கைபுர லட்சுமண பாரதி
தெளிந்ததெழுதி விட்ட நிருபம்

திருவுலவு காரையூர் நல்லசே னாபதிச்
சர்க்கரைமன் றாடிராசன்

தனதுமனை யாளினிய கற்பினில் அருந்ததி
சமானநற் குணபூஷணி
சந்ததி நிரம்பிவளர் சிவமலைப் பல்லவன்
தந்தசீ மந்தபுத்ரி
தருமமிகு பயிரகுல வள்ளிநா யகிஎனும்
தாய்மனம் மகிழ்ந்து காண்க

அருள்பரவு சிவன்உமைக் குத்திருக் கலியாணம்
ஆனசுப தினம்நாளையே
ஆகையால் மங்கலிய விரதபூ சனைசெய்ய
ஆருமா தரவறிகிலேன்
ஐந்துவள் ளப்பச்சை அரிசிபா சிப்பயிறு
அதற்குள்ள மேல்முஸ்திதி
ஆவின்நெய் வெல்லம் உளுந்து பால்தயிர்
வெண்ணெய்மற்று எண்ணுகறிகாய்.

மருவுலவு சந்தனம் குங்குமம் புனுகுசவ்
வாதுபரி மளமும்உனது
மருமகட் கோர்புடவை பாக்குவெற் றிலைநல்ல
வாழையிலை இவையாவுமே
வாணருக் கார்அனுப் பினதெனக் கேட்பவர்கள்
மனதுமென் மேலும்மெச்ச
மன்னர்புகழ் சர்க்கரைத் துரையரசி தந்ததென
வரஅனுப் பிடவேண்டுமே''.

✣ ✣ ✣

# அட்டை - விளக்கம்

முன் அட்டை : ✤ தாரமங்கலம்,
கட்டி முதலி அவர்கள் மனைவி சின்னம்மையார்

✤ பூங்கோதை கல்வெட்டு

✤ பூங்கோதை செப்பேடு

✤ மாணிக்கி, நாகமலை ஓலை

பின் அட்டை : காடையூர் வெள்ளையம்மாள்

